பதினெட்டு

Registered as a News paper

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ...

சஞ்சீவி

விலை
ரூபா
8-00

மலை:7 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 21 சனிக்கிழமை (6-12-1997) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:27

# வன்னியில் கடுஞ்சமர்

## 150க்கும் அதிக படையினர் பலி!

வவுனியா, டிசம்பர் 6

வன்னியில் புளியங்குளத்துக்கு வடமேற்கே — புதூருக்கு ஒன்றரை மைல் தொலைவில் உள்ள மன்னகுளம் பகுதியில் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் முழுநாளும் கடுஞ்சமர் நடந்தது.

நேருக்கு நேர் நடந்த இந்தச் சண்டையில் நூற்றியைம்பதுக்கும் அதிக படையினர் உயிரிழந்தனர்; முந்நூற்றியிருபது படையினர் வரை காயமடைந்தனர். புலிகள் தரப்பிலும் கணிசமான எண்ணிக்கையானோர் உயிரிழந்ததாக அறிவிக்கப் பட்டது.

நேற்று முன்தினம் காலை புதூர் வழியாகவும், கனகராயன்குளம் வழியாகவும் முன்னேற முயன்ற படையினர் மீது இத்தாக்குதல் நடத்தப் பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

புலிகள் செறிந்துள்ள பகுதிகளை நோக்கி, ஆட்லறிகளின் உதவியுடன் படையினர் முன்னேற முயன்றபோது, பாதுகாப்பான நிலைகளுக்குள் இருந்து கொண்டு புலிகள் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் —

புலிகள் தரப்பில் பேரிழப்பு ஏற்பட்டதாகவும் —

அவர்களின் இரகசிய தொடர்பு சாதனங்களை வழிமறித்துக் கேட்டபோது அதில் அவர்கள் தரப்பில் கொல்லப்பட்ட 102 பேரின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப் பட்டதை அறிய முடிந்ததாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டுக்கு வயிற்றிலிருந்த சிசு பலி!

மட்டக்களப்பு வாழைச்சேனையில் சுற்றிவளைப்புத் தேடுதலின்போது இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கர்ப்பிணிப் பெண் ஒருவரின் வயிற்றில் இருந்த சிசு உயிரிழந்தது.

வாழைச்சேனை விநாயகபுரம் பகுதியில் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை சுற்றிவளைப்பு இடம்பெற்றது. அப்போது பரவலாக துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றது.

அகதி முகாம் ஒன்றில் இருந்த கர்ப்பிணிப் பெண்ணான கே. தயாளினி (வயது 22), அவரது மகள் சந்திரகலா (வயது இரண்டரை) ஆகியோர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டனர்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டபோது கர்ப்பிணிப்பெண்ணின் வயிற்றிலிருந்து குழந்தை இறந்து விட்டது கண்டுபிடிக்கப்பட்டது

துப்பாக்கிப் பிரயோகத்தின்போது அப்பகுதியில் வீட்டில் உறக்கத்திலிருந்த ஒருவரும் காயமடைந்துள்ளார்.

(உ-21)

## ரயில் சேவை பாதிப்பு

வவுனியா, டிச. 6

கல்கமுவவுக்கும் அம்பன்பொலவுக்கும் இடையில் ரயில் ஒன்றின் எட்டுப்பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு விலகியதால் வவுனியா— கொழும்பு ரயில் சேவைகள் நேற்றுப் பாதிப்படைந்தன.

இன்று தண்டவாளத் திருத்த வேலைகள் முடிவுற்றதும் சேவை வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-164)

## நாடாளுமன்றத்தின் முன் நேற்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், டிச. 6

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து கோட்டேயில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்பாக நேற்றுக் காலை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

'புளொட்' அமைப்பின் ஏற்பாட்டில் அந்த அமைப்பின் உபதலைவர் என், மாணிக்கதாஸன் தலைமையில் நடைபெற்ற இந்த உண்ணாவிரத நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகள், தொழிற்சங்க வாதிகள், பொதுமக்கள் உட்பட இருநூறுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

காலை 9 மணிக்கு ஆரம்பித்த உண்ணாவிரத நிகழ்வு நண்பகல் வரை தொடர்ந்தது.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, தொழிற்சங்க உறுப்பினர் பற்றிக் பெர்னாண்டோ, இனங்களுக்கு இடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பின் சார்பில் அதன் பிரதிநிதி திரு. கந்தசாமி, திருமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர். இராமமூர்த்தி, ஆர். இராமேஸ்வரன், புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் ஆகியோர் உட்பட பலர் உண்ணாவிரத நிகழ்வில் பங்கு பற்றினர்.

உண்ணாவிரத நிகழ்வின் இறுதியில் ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் கைதாகி தகவல் தெரியாதுள்ளோரின் விவரங்களை வெளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் 111 பேரின் சடலங்கள் கையளிப்பு

வவுனியா, டிச. 6

வன்னி மன்னகுளம் தாக்குதலில் உயிரிழந்த 111 படையினரின் சடலங்களை நேற்று நண்பகல் மல்லாவியில் வைத்துச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் புலிகள் ஒப்படைத்தனர்.

இந்தச் சடலங்களைச் செஞ்சிலுவைக் குழுவினர் நான்கு லொறிகளில் ஏற்றி நேற்று மடுவுக்கு எடுத்துச் சென்றனர்.

இன்று வவுனியாவில் வைத்து இச்சடலங்கள் இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப் பட்டது.

இதேசமயம் — இச்சண்டையில் உயிரிழந்த படையினரில் இருபது பேரின் சடலங்கள் மிகுந்த சேதமுற்றிருந்ததாகவும் —

அவற்றை தாங்கள் எரித்துவிட்டதாகவும் —

புலிகளின் லண்டன் செயலகம் தெரிவித்தது.

(உ-3-21-164)

## 36 படையினரின் சடலங்கள் உறவினரிடம் கையளிப்பு

கொழும்பு, டிச 6

வன்னி மன்னகுளம் தாக்குதலில் உயிரிழந்த ஓர் அதிகாரி உட்பட 36 படையினரின் சடலங்கள் நேற்று மாலை வரை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் புலிகள் ஒப்படைத்த 111 படையினரின் சடலங்களும் இன்று வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்டு அடையாளம் காணப்பட்ட பின்னரே அவற்றை உறவினரிடம் ஒப்படைப்பதா என்று தீர்மானிக்கப் படும் என எதிர்பார்க்கப்பட்டது.

(உ-3-21-154)

## கொழும்புப் பாதுகாப்பு இராணுவத்தின் வசம்!

கொழும்பு மாநகர பிரதேச பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரியாக மேஜர் ஜெனரல் சாலிய நமுனி நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்புப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இராணுவத்தினால் பொறுப்பேற்கப் பட்டாலும் தற்போதுள்ள வீதித் தடைகள் மற்றும் பொலீஸ் சோதனைச் சாவடிகளில் உடனடியாக மாற்றங்கள் ஏற்படாது எனத் தெரியவருகின்றது.

பொலீஸார் இராணுவத்துடன் இணைந்து செயல்படும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக பிரதி பொலீஸ் மா அதிபர் போதி லியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் இனிமேல் சுற்றிவளைப்பு, தேடுதல்களில் இராணுவத்தினர்தான் ஈடுபடுத்தப்படுவார்கள் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-21)

## கூட்டணிக் குழு இன்று வருகை

கொழும்பு, டிச. 6

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருப்பதை அடுத்து அது தொடர்பான நிலைமைகளை ஆராய்வதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

மாவை. சேனாதிராஜா தலைமையில் வரும் இக்குழுவில் சில சட்டத்தரணிகளும் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டணிப் பிரமுகர்களுடன் இங்குள்ள நிலைமைகள் குறித்து விரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாடு முழுவதும் நேற்றிரவு திடீரென மின்சாரம் துண்டிப்பு!

கொழும்பு, டிச. 6

நாடு முழுவதும் நேற்றிரவு திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டு நாடு இருளில் மூழ்கியது.

நேற்றிரவு 7 மணியளவில் இருந்து திடீரென மின் விநியோகம் இரு மணித்தியாலங்களுக்குத் தடைப்பட்டதால் நாடு முழுவதும் இருளில் மூழ்கியது மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

லக்ஸபான மின் நிலையத்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிதாகச் செய்யப்பட்ட மிக்சர் சோகேஸ் (8 பிரிவு களைக் கொண்ட) உடன்விற் பனைக்குண்டு. தொடர்பு: இல. 119, கண்டிறோட், கச் சேரியடி (இலங்கை பெந்த கோஸ் சபை அருகில்)
(சி/2269)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி (புறோ யிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப் படும். சுத்தம் செய்து கொடுக் கப்படும். தினந்தோறும் கிடைக்கும். தொடர்பு: Lucky Farm Sales Centre, Palaly Road, Thirunelvely.
[51592]

இறைச்சிக்கோழி (Broiler) கல்பேட்ஸ், சேவல் என்பன மொத்தமாகவும் சில்லறை யாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப் படும். தொடர்பு: No.68, Old Park Road, Jaffna.
(51610)

புறோயிலர் மொத்தமாக வும், சில்லறையாகவும் விற் பனைக்குண்டு. தொடர்பு: R. S. K. கோழிப்பண்ணை, மாஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம்.
[51283]

இறைச்சிக் கோழி புறோ யிலர் (Broiler) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப் பாணம் (சின்னக்கடைக்கு அருகில்).
[51593]

### தேவை

10 அடி நீளமான கடைக் குரிய அலுமாரி தேவை. S. K. லங்காபதி, இல. 15, 1 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (நீராவி யடிப் பிள்ளையார் கோயி லுக்கு முன்பாக) அல்லது புகையிரத வீதி, மல்லாகம்.
[51548]

புதிய,பழைய றோணியோ இயந்திரங்கள், நல்ல நிலை யிலுள்ள தமிழ் ஆங்கில தட் டச்சு இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R. மகேஸ்வரன், 25, றக்கா வீதி, யாழ்ப் பாணம். (றோணியோ வேலைகள் ஏற்றுக்கொள் ளப்படும்).
[51587]

### உடன் விற்பனை

பிறிமா புறோயிலர் குஞ்சு கள், பிறிமா பிறவுண் வெள் ளைப் பேட்டுக்குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற் பனைக்கு உண்டு. தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப் பாய்.
[51561]

### மரம்

மலைவேம்பு, சர்க்கரை வேம்பு, பலா, ஆசனிப்பலா, நெல்லி, கரிசலாங்கண்ணி என்பன மில்க்வைற் உறை கள் அல்லது ரூபா 10/- பெற் றுக் கொள்ளலாம் — மில்க் வைற்.
[சி/2267]

### தவறிவிட்டன

கி.நீலகி என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 0901005940), பாடசாலை அடையாள அட்டை என்பன மருதடி வீதியிலோ (நல்லூர் கட்டைப்பிராய் இடையில்) பருத்தித்துறை வீதியிலோ தவறிவிட்டன. கண்டெடுத் தவர்கள் தயவுசெய்து பின் வரும் முகவரியில் ஒப்படைக் கவும். 'றேடியோஸ்பதி' இல. 58, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். [51611]

### கை மாறப்பட்டுள்ளது

விமலா நிற்கந்தா என்ப வருக்குச் சொந்தமான றோட்மாஸ்டர் துவிச்சக்கர வண்டி கடந்த தீபாவளிக்கு முதல் நாள் கஸ்தூரியார் வீதியில், கை மாறிச் சென்று விட்டது. கை மாறி எடுத்த றோட்மாஸ்டர் துவிச்சக்கர வண்டியை பின்வரும் முகவரி யில் ஒப்படைத்து தனக்குரிய துவிச்சக்கர வண்டியை அடை யாளம்காட்டிபெற்றுக்கொள் ளவும். இல. 942, பருத்தித் துறை றோட், யாழ்ப் பாணம்.
[51601]

## வள்ளுவர் அக்கடமி

பலாலி வீதி, உரும்பிராய்.

### புதிய கல்வியாண்டு - 1998

ஆண்டு 1 முதல் G.C.E.(O/L)
வரையான வகுப்புக்கள்

05 - 12 - 1997 முதல் நடைபெறுகின்றன.

★ மாதாந்தப் பரீட்சைகள்
★ வாராந்தம் ஆறு கணித வகுப்புக்கள்
★ வாராந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன் புலமைப்பரிசில் வகுப்புக்கள்

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன் கூட்டியே உங்கள் அனுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

- அதிபர்

(51571 )

## வினைல்ஸ் கல்வி நிலையம்

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

### 1998 ஆம் ஆண்டுக்கான ஆண்டு 5 முதல் 11 வரை

வகுப்புக்கள் ஆரம்பம்: 06-12-1997 சனி
நேரம் காலை 7.00 மணி

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | T. சுதா |
| கணிதம் | — | ரூபன், மோகன் |
| தமிழ் | — | V M லிங்கம், அமிர்தலிங்கம் |
| சமயம் | — | கண்ணன் |
| சமூகக்கல்வி | — | மோகன் |
| வர்த்தகம் | — | நந்தீஸ் |
| ஆங்கிலம் | — | தருமலிங்கம், ஜெயக்குமார் |

- நிர்வாகி

(51605)

## WANTED

WANTED A BUSINESS OFFICER
FOR MCLEOD HOSPITAL, INUVIL.
Persons Between the Ages of 40—55
With Administrative Experience May Apply
before 16th of Dec. 97
Salary Negotiable.

Please send your Application to:

The Secretary,
Medical Board, Diocesan Office,
Vaddukoddai.

[C/2268]

## இந்து அக்கடமி

வளாக வீதி, திருநெல்வேலி.

ஆண்டு 8 முதல் 11 வரையிலான வகுப்புக்கள்

### 06 - 12 - 97 இல் ஆரம்பம்

எமது தனித்துவ ஆசிரியர் குழு

கணிதம்: — ஸ்ரீதரன்
தமிழ்: — பொன்னுச்சாமி
விஞ்ஞானம்: — கஜன், சிறீ
வர்த்தகம்: — வாகீசன்
சமூகக்கல்வி: — நித்தி, நடா

குறிப்பு: 20 ஆண்டுகளாகக் கல்விப் பணியாற்றும் நிறுவனம்.

- நிர்வாகி

[சி/2271]

## நெஞ்சகலா ஈராண்டு
## நினைவஞ்சலி



### அமரர் கணபதிப்பிள்ளை இராசநாயகம்

முல்லாத்தனை, தெல்லிப்பழை
(முன்னாள் யாழ். ஐவர்ஜி பிறதர்ஸ் முகாமையாளரும், தெல்லிப்பழை றங்கநாதன் ஸ்ரோர்ஸ் கணக்காளரும்.)

அன்னை மடியில்: 21—10—1932
இறைவன் அடியில்: 28—11—1995

**திதி: 06-12-97**

நீங்கள் கஷ்டப்பட்டு வளர்த்தெடுத்த
உங்கள் அன்புச் செல்வங்கள்
காய்த்துக் கனியாகும் வேளையில்
அனுபவிக்காது எங்கு சென்றீர்கள்?
அப்பாவே இன்றுடன் உங்கள்
அன்பு முகம் கண்டு
இரண்டாண்டுகள் ஓடினவோ?
என்றும் உங்கள் நினைவுடன் வாழ்கின்றோம்!
தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

இ. ஸ்கந்தகுமார் (மகன்)
32, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2277)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் கே. கே. இராசரத்தினம்

[ உரிமையாளர் K. K. இராசரத்தினம் நகைமாடம் ]

தலைவர், தாவடி அம்பலவாணர்
வேதவிநாயகர், பரிபாலனசபை

இவரது இழப்பினை இட்டுக் கலங்கி நிற்கும் இவரின் குடும்பத்துக்கு எமதுஆழ்ந்த அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

பஞ்சாட்சரம் சிவபாஸ்கரன்
"சாரங்கா நகைமாடம்"
174/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(51616)

## DCS
DATA CONNECTION SYSTEMS (PVT)LTD

## COMPUTER TRAINING CENTRE

124/2, Palaly Road, Thirunelvely, Jaffna.

### D C S - Computer Diploma (1997/98)

மேற்படி கற்கைநெறி 1997 டிசெம்பர் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மாணவர்கள் பயிற்சி நிறுவனத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்வதுடன், மேலதிக விவரங்களையும் பெற்றுக் கொள்ளவும்.

பதிவு செய்வதற்கான முடிவு திகதி: 10 — 12 — 1997

நிர்வாக அலுவலர்
DCS

[51604]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் உயிரிழந்த வீரர்களுக்கு மரியாதை தருவதே யுத்த நாகரிகம்!

இலங்கை அரசியலை ஆராயும் ஒவ்வொருவரும் அண்மையில் மாவீரர் தினத்தை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய உரையை அலசி வருகின்றார்கள். அந்த அலசலின் மூலம் புலிகளின் உண்மையான உள்ளக்கிடக்கை – நிலைப்பாட்டை — மனோநிலையை — தைரியத்தை — அறிந்து கொள்ள முடியுமா என்பதுதான் அவர்களின் முயற்சியின் நோக்கம்.

அது ஒருபுறமிருக்க, அந்த உரையில் அவர் தொட்டுக்காட்டிய ஒரு விடயம் பலரினதும் நெஞ்சையும் தொட்டிருக்கின்றது. குறிப்பாக புலிகளையும் அவர்களது ஆயுதப் போராட்டம் மற்றும் போராட்ட வழிமுறைகள் போன்றவற்றையும் சடுமையாக விமரிசிக்கும் தமிழர்கள் கூட இந்த விடயத்தில் பிரபாகரன் கூறிய கருத்துக்களை ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள்.

யுத்தத்தில் எதிரி உயிரிழப்பானாயின் அதன் பின்னர் அவனின் சடலத்துடன் எதிரி உணர்வைப் பேணுவது யுத்த மரபல்ல. சடலம் — அது எதிரியுடையதாக இருந்தாலும் — அதனை மதித்து, கௌரவித்து நடந்து கொள்வதே காலம் காலமாக யுத்த மரபாக — நாகரிகமாக — போற்றப்பட்டு வருகின்றது.

சரித்திர காலத்திலும் தமிழனான எல்லாளன் இறந்த பின்னர் சிங்கள மன்னனான துட்டகைமுனு இந்த கௌரவத்தை வழங்கினான் என்பதே தகவல்.

உலக மகா யுத்தங்களின் போது பல நாடுகளின் கைகளில் இருந்த பிரதேசங்கள் வேறு நாடுகளின் கைகளுக்கு மாறிவிட்டன. ஆனால் முன்னைய ஆட்சியாளர்களின் காலத்தில் உயிரிழந்த — அந்தஆட்சியாளர், ஆதரவாளர்கள், போர்வீரர்களுக்கு — என அமைக்கப்பட்ட கல்லறைகளை புதிய ஆட்சியாளர்கள் அழித்துவிடவில்லை. அதே கௌரவத்துடன் உலகம் முழுவதும் இவ்வாறு பல கல்லறைகள், மயானங்கள்இன்னும் பேணப்பட்டு வருகின்றன; அதுவே நாகரிகம்.

ஆனால் இந்த மரபுமுறைகளை மீறி ஸ்ரீலங்காப் படைகள் நடந்து கொண்டதுதான் அநாகரிகத்தின் உச்சம்.

குடாநாட்டை மீண்டும் கைப்பற்றிய படைகள், இங்கிருந்த மாவீரர் மயானங்களை ''புல்டோஸர்கள்'' கொண்டு உழுது அழித்ததன் மூலம் தங்கள் தரத்தை நிரூபித்துக்கொண்டன என்பதே தமிழர்களின் பொதுவான அபிப்பிராயமாகும்.

உயிரிழந்தவர்கள் இறந்துவிட்டார்கள். அவர்கள் காலம் முடிந்துவிட்டது. அவர்கள் செய்தது சரியாக இருக்கலாம்; பிழையாக இருக்கலாம். அவர்கள் பயங்கரவாதிகளாக இருக்கலாம்; போராளிகளாக இருக்கலாம். (They are dead and gone.)

உயிரிழந்தவர்கள் அதற்குப் பின்னரும் அமைதியாகத் தூங்க விடாமல் தடுப்பது பெரும் அநாகரிகமான, மனித மாண்புக்கு முரணான செயலாகும்.

யுத்தத்தில் உயிரிழந்த புலிகளின் சடலங்களைப் படையினரும்—

படையினரது சடலங்களைப் புலிகளும்—

மாறி மாறி ஒப்படைப்பது இந்த யுத்த நாகரிகத்தின் ஓர் அங்கமே.

ஒரு தரப்பினருடைய சடலத்தை மறு தரப்பிடமிருந்து வாங்கி வந்து ஒப்படைக்கும் பணியில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை ஈடுபடுவது கூட இந்த நாகரிகத்தைப் பேணுவதற்கேயாகும். மறுபுறத்தில் இத்தகைய அமைப்புகள் இறுதிக்கிரியை சேவைகளை (Funeral service) நடத்தும் நிறுவனங்கள் அல்ல என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

குடாநாட்டில் பல நூற்றுக்கணக்கானோர் கைதாகிய பின்னர் காணாமல் போனமை, பல்வேறு அத்துமீறல்கள், கற்பழிப்புகள் போன்றவை நடந்தமை இறந்தவர்கள் புதைக்கப்பட்ட மயானங்கள் உழுது அழிக்கப்பட்டமை எல்லாம் இங்கு நிகழ்ந்தபோது குடாநாட்டின் படைத்தலைமை ஒன்றாகவே இருந்தது. இப்போது தலைமை மாறிவிட்டது; நிலைமையில் முன்னேற்றம்.




என்றாலும் உயிரிழந்து புதைக்கப்பட்ட தமிழர்களை அவர்கள் மீளாத்துயில் கொள்ள விடாமல் அவர்கள் துயில் கொண்ட இடங்களை உழுது அழித்த செயல் தமிழர் ஒவ்வொருவர் மனதையும் புண்ணாக்கியிருக்கின்றது என்பது உண்மை,

இந்த விடயம் குறித்து மூத்தஇராணுவ அதிகாரி ஒருவரிடம் கேட்டேன்.

''புலிகளின் உறுப்பினர்கள் புதைக்கப்பட்ட இந்த மயானங்கள் தொடர்ந்து அதே மாதிரி பேணப்பட்டால்... அதை அடிக்கடி காணுகின்ற — அமைதியை விரும்புகின்ற — நியாயமான தமிழ் இளைஞர்களைக் கூட அந்த மயானமும் அதன் தோற்றமும் மீண்டும் உணர்ச்சி கொள்ள வைத்து ஆயுதம் ஏந்தும் தவறான பாதைக்கு இட்டுச் செல்லத் தூண்டும். அதனாலேயே அதனை அழிக்க வேண்டிவந்தது'' என்றார் அவர்.

அவரது கோணத்திலிருந்து — படையினரினது பக்கத்திலிருந்து — நோக்கும் போது அக்கருத்து சரியாக இருக்கக் கூடும். நான் திருப்பிக் கேட்டேன்.

''சரி நீங்கள் கூறுவது மாதிரி அந்த மயானமும் அதன் தோற்றமும் அப்பாவித் தமிழ் இளைஞர்களை உணர்ச்சி வசப்படுத்துவதாக இருந்தால் மயானத்தின் புறத் தோற்றத்தை நீங்கள் அழித்தது சரி என வைப்போம். மாவீரர் மயானங்களில் ஒவ்வொரு கல்லறைக்கும் மேலே இருக்கும் நடுகற்களை நீங்கள் அகற்றியிருக்கலாம். மயானத்தின் அமைதியான சுற்றுப்புறச் சூழலை— அடக்கமான புற அமைப்பு வேலைகளை —நீங்கள் அழித்திருக்கலாம்; அகற்றியிருக்கலாம். அதற்கு மேல் நீங்கள் சென்றிருக்கின்றீர்கள். அமைதியாக மண்ணுக்குள் தூங்கிக் கொண்டிருந்தவர்களின் புதைகுழிகளை புல்டோஸர் கொண்டு, அகழ்ந்து, உழுது, அழிப்பு வேலை செய்திருக்க வேண்டுமா?'' —என்றேன்.

''அதிலும் ஒரு தேவை இருக்கின்றது குடாநாட்டை விட்டு புலிகள் வெளியேறும் போது தமக்கு வாய்ப்பான இடங்களில் பெருமளவு ஆயுதங்களை ஒளித்து, புதைத்து வைத்து விட்டுச் சென்றிருக்கின்றார்கள். ஒரு சில புலிகள் உறுப்பினர்கள் இப்போது குடாநாட்டுக்குள் ஊடுருவி அந்த ஆயுதங்களை மீட்டெடுத்தே ஆங்காங்கே தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள். எனவே குடாநாட்டை படையினர் மீண்டும் கைப்பற்றியதும், குடாநாட்டில் புலிகள் ஆயுதங்களை ஒளித்து வைத்திருக்கும் இடங்களைத் தேடிக் கண்டுபிடித்து அழிக்கும் அத்தியாவசிய பணி படைத்தரப்புக்கு இருந்தது. அந்த முயற்சியில் படையினர் கணிசமான அளவில் வெற்றியும் கண்டனர்.

''ஒளித்து வைக்கப்பட்ட ஆயுதங்களைக் கண்டு பிடிப்பதற்காக அவ்வாறு புலிகள் ஆயுதங்களை ஒளித்து வைத்திருக்கக் கூடிய இடங்கள் எனக் கருதப்பட்டவை சல்லடை போட்டுத் தேடப்பட்டன.

''இந்த வகையில் மயானங்களும் ஆயுதங்களை ஒளித்து வைக்கப்படும் இடமாக இருக்கக்கூடும்எனக் கருதப்பட்டது. 'புதைகுழிகள் எப்போதும் மதிக்கப்படும்' என்ற சர்வதேச தத்துவம் இருப்பதால், புதைகுழிகளை மதிக்கும் நோக்குடன், அவற்றை படையினர் தொடமாட்டார்கள் என்று புலிகள் கருதியிருப்பர் என படைத்தரப்பில் நம்பப்பட்டது. அதன் காரணமாக தமது ஆயுதக்கிடங்குகளைக் கூட புதைகுழி போல உருமறைப்புச் செய்து வைத்திருப்பார்கள் என்று சந்தேகம் நிலவியது. அதனாலேயே புதைகுழிகளைக் கிளறிப் பார்க்கும் நிலை ஏற்பட்டது''—என்றார் அந்த அதிகாரி.

அந்த மூத்த அதிகாரியின் விளக்கம் ஏற்கக் கூடியதா இல்லையா என்பதை தமிழ் மக்களே முடிவு செய்து கொள்ளலாம்.

ஆனாலும் தமதுபிள்ளைகள் சகோதரர்கள் — அவர்கள் புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்தாலும், 'பயங்கரவாதிகள்' அல்லது 'போராளிகள்' என்ற பட்டத்துடன் இறந்திருந்தாலும் — இறந்த பின்னர் அவர்கள் மீளாத்துயில் கொள்வதை என்ன காரணம் கருதியும், யாரும் குழப்பக் கூடாது என்றே தமிழ்ப் பெற்றோர் பலரும் எதிர்பார்க்கின்றனர்; எதிர்பார்ப்பர்.

நடந்தது நடந்து முடிந்துவிட்டது. இனி அது குறித்துப் பேசுவதில் அதிக பயன் ஏதுமில்லை. என்றாலும் நடந்த தவறை அநாயாசமாகஒதுக்கி விட்டு வாளாவிருப்பது மக்களைச் சாந்தப்படுத்தாது; மக்களை நெருங்கிச் செல்வதற்கு அது வழியல்ல.

காணாமற் போனோர் விவகாரம் என்றாலும் சரி— மயானங்கள் உழுது அழிக்கப்பட்ட விடயம் என்றாலும் சரி— [illegible] இருப்பது கண்டறியப்பட்டால் அதனை ஒப்புக் கொண்டு — அதற்கு நிவாரணம் வழங்க, தேவைப்பட்டால் மன்னிப்புக்கேட்க— முன்வருவதே சட்டரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட — ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ள —தார்மீக அடிப்படையில் செயற்படுகின்ற— ஓர் அரசின் கடமையாகும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இதற்கு மேல் முடிவு செய்வதும் செயற்படுவதும் அரசாங்கத்தின் கையில்!

★ ★ ★

## 'பெல்' ஹெலியை புலிகள் வீழ்த்தினரா?

கடந்த 25 ஆம் திகதி — புலிகளின் மாவீரர் வாரத்தில்— வன்னிப் போர் முனையில் நள்ளிரவு வேளையில் விமானப் படையின் 'பெல் 212' ரக ஹெலி ஒன்று வீழ்ந்து அழிந்தது.

கடந்த மாதம் 10 ஆம் திகதி முல்லைக் கடற்பரப்பின் மீது 'எம். ஐ 24' ரக ஹெலி ஒன்று தாக்குதலுக்கு இலக்காகி வீழ்ந்தது.

கடந்த மாத முற்பகுதியில் வீழ்ந்த 'எம். ஐ. 24' ரக ஹெலி ரஷ்யத் தயாரிப்பு.

கடந்த மாத பிற்பகுதியில் வீழ்ந்த 'பெல் 212' ரக ஹெலி அமெரிக்கத் தயாரிப்பு.

கடந்த மாத முற்பகுதியில் 'எம் ஐ. 24' ரக ஹெலி புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வீழ்ந்தது என்பதைப் படைத்தரப்பு ஒப்புக் கொண்டிருந்தது.

ஆனால் 'பெல்' ஹெலி வீழ்ந்தது குறித்து முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

முதலில் ''வானில் இருந்து நெருப்புக் கோளமாக ஹெலி வீழ்ந்தது'' என்று அரச வானொலி, அரச பத்திரிகைகள் ஆகியவற்றில் செய்திகள் வெளியாகின.

ஆனால் பின்னர் சுருதியை மாற்றிக் கொண்டு தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஹெலி வீழ்ந்தது என்று படைத்தரப்பில் செய்தி தெரிவிக்கப்பட்டது.

ஹெலி தீப்பிழம்பாக விழுந்தது என்ற செய்தியை வெளியிட்ட அரச தரப்பு வெகுஜனத் தொடர்பு சாதனங்களே பின்னர், 'ஏனைய பத்திரிகைகள் தான் அவ்வாறு செய்தி வெளியிட்டன;

## பாசுபதன்

அது தவறான தகவல்' என்ற சாரப்பட பிறிதொரு செய்தியை அறிவித்தது வேடிக்கையிலும் வேடிக்கை.

ஹெலியில் இருந்த குண்டுகள் தவறுதல் காரணமாக ஹெலிக்குள் வெடித்திருந்தால் —

அல்லது வெளியில் இருந்து ஹெலி மீது பெரும் தாக்குதல் தொடுக்கப்பட்டிருந்தால்—

அல்லது ஹெலியின் எரிபொருள் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தால்—

மட்டுமே ஹெலி வானத்தில் வெடித்துத் தீப்பிழம்பாக வீழ்ந்திருக்கும். தொழில்நுட்பக் கோளாறு காரணம் என்றால் ஹெலி தரையில் வீழ்ந்தே நொறுங்கியிருக்கும்.

எது எப்படியோ —

இத்தாக்குதல் நள்ளிரவில் நடந்த பின்னர் அடுத்த நாள் காலையில்— நவம்பர் 26ஆம் திகதி — ''புலிகளின் குரல்'' செய்தியில், தனது விமான எதிர்ப்புப் படையணியால் ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டதாக புலிகள் அறிவித்தனர்.

மூன்றாம் ஈழப் போரில் இருபதுக்கும் அதிக வான் கலங்களை ஸ்ரீலங்கா விமானப்படை இழந்துவிட்டது. ஆனால் அவற்றில் சிலவற்றுக்கு மட்டுமே புலிகள் உரிமை கோரியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

## படையினர் எண்ணிக்கை

விடுதலைப்புலிகள்மற்றும் அரசுப்படைகளில் உள்ள போர் புரியும் துருப்புகளின் எண்ணிக்கை பற்றிய விவரம் ஒன்றை லண்டனில் உள்ள தந்திரோபாயச் கல்விக்கான சர்வதேச நிறுவனம் தனது பிந்திய அறிக்கை ஒன்றில் வெளியிட்டிருக்கின்றது.

அதன்படி அரசுப்படைத் துருப்புகளின் எண்ணிக்கை வருமாறு:-

இராணுவம்:- 90 ஆயிரம் முதல் 95 ஆயிரம் வரை (அழைக்கப்பட்டுள்ள தொண்டர் படையினரும் மற்றும்ஆயிரம் பெண் படையினர் உட்பட)

கடற்படை:- 12 ஆயிரம் (வேலைக்கு அழைக்கப்பட்டுள்ள ஆயிரத்து நூறு தொண்டர் படையினர் உட்பட)

விமானப் படை:- பத்தாயிரம்.

பொலிஸ்:- 80 ஆயிரம் (றிசேர்வ் பொலிஸார் மற்றும் ஆயிரம் பெண் றிசேர்வ் பொலிஸார் உட்பட).

விசேட அதிரடிப் படை:- மூவாயிரம்.

தேசிய பாதுகாப்புப் படை:- 15 ஆயிரம்.

ஊர்காவல் படை:- 15 ஆயிரத்து இருநூறு.

—என்று அந்த நிறுவன அறிக்கை தெரிவிக்கின்றது.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஆறாயிரம் வீரர்களே யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக அந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

★ ★ ★

## சிப்பாய்களின் சூத்துமாத்து

கடந்த வாரம் தெற்கில் நடந்த சுவையான சம்பவம் இது:-

வன்னியில் விடுதலைப்புலிகளின் முக்கிய தளம் ஒன்றை விமானப்படை தாக்கி அழித்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன. அந்தத் தாக்குதல் பற்றிய தகவலை தலைப்புச் செய்தியாக வெளியிட்ட ஓர்ஆங்கில நாளிதழும் அதன் சகோதரப் பத்திரிகையான சிங்கள நாளிதழும் அச்செய்தியின் இடையே, மற்றொரு தலையங்கத்துடன் மேற்படி தாக்குதலின் போது புலிகளின் காவலில் இருந்த இரு படையினர் தப்பினர் என்ற தகவலையும் வெளியிட்டிருந்தன.

அதன் பின்னர் இரண்டு சிப்பாய்கள் வவுனியா படைத்தளத்துக்கு ஆஜரானார்கள் புலிகளின் காவலில் இருந்து தப்பி வந்த படையினர் தாங்களே என்று அங்குள்ள படை அதிகாரியிடம் தெரிவித்தனர். ஆனால் அந்த அதிகாரிக்கு நம்பிக்கை வரவில்லை. இருவரின் பேச்சிலும் சந்தேகம் அடைந்த அதிகாரி இருவரையும் முறையாகக் 'கவனிக்கும்படி' தனக்குக் கீழிருந்த உத்தியோகத்தர்களைப் பணித்தார். முறையாகக் 'கவனித்ததும்' உண்மை வெளிவந்தது.

பாணந்துறையைச் சேர்ந்த இந்த இரு சிப்பாய்களும் ஆறு மாதங்களுக்கு முன்னர் படையை விட்டு ஓடியவர்களாம். பத்திரிகைச் செய்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை அமர்வு நீதிமன்றம் வைபவரீதியாகத் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், டிச. 6
ஊர்காவற்றுறையில் அமர்வு நீதிமன்றம் கடந்த புதன்கிழமை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

பெயர்ப் பலகையை பதில் நீதிவான் க.கேசவன் திறந்து வைத்தார்.

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் லெவங்கம கொடியேற்றி வைத்தார்.

இவ் வைபவத்தில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் எஸ். செல்வநாயகம், புங்குடுதீவு கிராம சேவையாளர், ஊர்காவற்றுறை பொலீஸார், பெருமளவு மக்கள், சட்டத்தரணிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பதில் நீதிவான் க. கேசவன், உதவி அரச அதிபர் எஸ். செல்வநாயம், சட்டத்தரணிகள் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர்.

ஒவ்வொரு மாதத்திலும் முதலாம், மூன்றாம் புதன்கிழமைகளில் யாழ். மாவட்ட நீதிமன்ற வழக்கறிஞர்களும் நீதிபதியும் ஊர்காவற்றுறை சென்று தீவுப்பகுதி வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்வர்.

இந்த நீதிமன்றில் முதலாவதாக ஒரு திருட்டுக் குற்றச் சாட்டுவழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

காரைநகரைச் சேர்ந்த பெருமாள் சச்சிதானந்தம் என்பவர் மீது திருட்டுக்குற்றம் சுமத்தப்பட்டு ஊர்காவற்றுறை பொலீஸாரால் அவர் ஆஜர் படுத்தப்பட்டார்.

எதிரி சார்பில் பொன். பூலோகசிங்கம் ஆஜரானார்.

பதில் நீதிவான் க. கேசவன் சந்தேக நபரை பிணையில் செல்ல அனுமதித்தார்.

(இ-9)

## ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு:
14 — 12 — 1940

இறப்பு:
17 — 11 — 1996

### அமரர் சிற்றம்பலம் அமரேசன்

[B.A. (Cey.), DIP. in. Edu.]
(ஆசிரியர், செங்குந்த இந்துக் கல்லூரி)

திதி: 06 . 12 . 1997

ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவலைகள் எங்களை விட்டகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி,
மக்கள், சகோதரர்கள்.

'ஸ்ரீ பரமஸ்தான்',
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(51597)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி மருதப்பா அன்னலட்சுமி

தோற்றம்:
1906 — 10 — 06

மறைவு:
1996 — 11 — 17

எம் அன்னையே!
பக்கத்தே நீயிருந்தபோது
சொர்க்கத்தை உன்னில் கண்டோம்.
சொர்க்கத்துள் நீ நுழைந்தபோது
துக்கத்தை எம்மில் கண்டோம்.

நீங்காத நினைவுடன் உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(51615)

## விசேட அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 6
புன்னாலைக் கட்டுவன் (ஜே- 208) கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் புன்னாலைக் கட்டுவன் சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்துவழங்கப்படவுள்ளதாக கிராம சேவையாளர் அறிவித்துள்ளார்.

(ஐ)

## நாவற்குழியில் சிப்பாய் பலி

கொழும்பு, டிச. 6
கடந்த புதனன்று காலை நாவற்குழிப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்தது. (இ-9)

## 2 புலிகள் களப்பலி என அறிவிப்பு

வவுனியா, டிச. 6
கடந்த 28ஆம் திகதி கோப்பாயில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் மேஜர் ராவணன் (யாழ்ப்பாணம்), கப்டன் உயிரவன் (யாழ்ப்பாணம்) ஆகியோர் களப்பலியானதாக ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

இந்த மோதலில் இரு படையினர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-164-3)

## யுத்தத்தில்...

(மூன்றாம் பக்கத்தொடர்)

யைப் பார்த்ததும் அவர்களுக்கு ஓர் 'ஐடியா' தோன்றியது. புலிகளிடம் பிடிபட்டு இதுவரை காலமும் காவலில் இருந்தவர்கள் என்று கூறினால் தங்கள் வீரதீரத்துக்கு அரசிடமிருந்து ஏதும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்களாம்.

பாவம்! குட்டு அம்பலமாகி [illegible] இருக்கின்றார்கள்!

★

## திரடு அரங்கு

தனியார் கல்வி நிறுவனங்களுக்கு (ரியூட்டறிகளுக்கு) முன்னர் சில கட்டுப்பாடுகள், சட்ட திட்டங்கள், வரண் முறைகள் இருந்தன இப்போது அவை எவையும் இல்லை. கட்டுப்பாடுகள் இல்லாமல் திறந்து விடப்பட்ட நிலை.

இந்த சுதந்திர நிலைக்கு மத்தியில் ரியூட்டறிக்கு ரியூட்டறி பலத்த போட்டி. அதுவும் ஊர்களில் உள்ள ரியூட்டறிகளில், பழைய காலத்து எம். ஜி. ஆர் — சிவாஜி ரசிகர்கள் அணி பிரிந்து மோதுவது போன்ற கடும் போட்டி.

ஒரு ரியூட்டறி தனது கவர்ச்சியால் அடுத்த ரியூட்டறி மாணவரை கவர்ந்து விடுவது போன்ற செயல்களால் போட்டி உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றதாம்.

ஓர் ஊர்ப் பக்கத்தில் தனது ரியூட்டறி மாணவரை அடுத்த ரியூட்டறிக்காரர்கள் வளைத்துப் போடுவதைத் தவிர்ப்பதற்காக, தனது ரியூட்டறிக்கு சேரவரும் மாணவர்களை, முதல் நாளே 'என்றும் தனது ரியூட்டறிக்கு விசுவாசமாக இருப்பேன்' என பலர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்ய வைக்கின்றாராம் அந்த ரியூட்டறியின் நிர்வாகியான ஆசிரியர் ஒருவர்.

ரியூட்டறிகளில் மாணவரைத் தக்க வைப்பதே இப்போது ரியூட்டறி நிர்வாகிகளின் முதல் நோக்கு.

ஒழுக்கம், கட்டுப்பாடு, நற்பண்பு போன்றவை எல்லாம் அதற்குப் பிறகு வரும் விவரங்கள்தான் (அவை குறித்து அக்கறை காட்டுவதற்கு புள்ளி போட்டால் பூச்சியம் தான்!).

ரியூட்டறிக்கு வரும் மாணவர்கள் விலகிப் போகாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவும்—

புதிய மாணவர்களை வளைத்துப் போடுவதற்காகவும்—

மாணவர் விரும்பும் அல்லது மாணவர்களை விரும்ப வைக்கும் போக்கை அவை கடைப்பிடிக்கின்றன.

இதனால் மாணவருக்கு ஒரே கொண்டாட்டம்; போங்கள!

★ ★ ★

டாக்டர்கள் பற்றாக்குறையால் மருத்துவ வசதி நலிவுற்றிருக்கும் குடாநாட்டு சுகாதாரத் துறையை மற்றொரு பெரிய கிருமி தாக்கிவருகின்றது.

போலி டாக்டர்கள் என்ற தொற்றுக் கிருமிகள் தான் அவை.

இந்தியாவில் இந்தப் போலி டாக்டர்களின் அட்டகாசம் அதிகம். அங்கு படிப்பறிவில்லா மக்கள் எண்ணிக்கையும் அதிகம் 'பேய்க் காட்டுவதற்கு' வசதியான கூட்டம் அங்குள்ளது..

எங்கேனும் ஒரு டாக்டருக்கு உதவியாளராக — அட்டெண்டராக — ஒரு சில வருடங்கள் பணிபுரிவது பின்னர் அந்த அனுபவத்துடனும் வெள்ளைக்கோட், 'டெலஸ்கோப்' ஆகியவற்றுடனும் எங்கோ ஒரு கிராமத்து மூலையில் — படிப்பறிவு குறைந்தவர்கள் மத்தியில் — டாக்டர் என்று ஒரு 'போர்ட்டை' எழுதித் தொங்க விட்டுக் கொண்டு போய் அமரவேண்டியது. அந்தக்கிராமத்து மக்களின் தலையில் நன்கு மிளகாய் அரைத்துத் தள்ளி, அவர்கள் மத்தியில் டாக்டராகப் 'பந்தா' காட்டி, சுளையாகப் பணத்தைச் சம்பாதித்து ஏப்பம்விடுவதே இந்தப் போலி டாக்டர்களின் தந்திரம்.

தமிழகத்தில் படிப்பறிவில்லாதவர்கள் அதிகம்; யாழ்ப்பாணத்தில் படித்தவர்கள் மிக அதிகம். எனவே இங்கே இப்படியான தில்லுமுல்லுகளைச் செய்ய முடியாது என்பதே பொதுவான அபிப்பிராயமாக இருந்து வந்தது.

ஆனால் இங்கும் பல போலி டாக்டர்கள் உருவாகி விட்டார்கள். சில உதவி வைத்திய அதிகாரிகள் தங்களை எம்.பி.பி.எஸ். டாக்டர் என்பார்கள். சில இடங்களில் நீண்டகாலம் பொது ஆஸ்பத்திரிகளில் ஆண்தாதியாகப் பணியாற்றியவர்களே டாக்டர் வேஷம் போடும் போக்கும் உள்ளது.

யாழ். நகரத்தில் தனியார் மருத்துவமனைகள் பலவும் வலிகாமம் இடம் பெயர்வுடன் செயலிழந்து விட்டன. இந்த நலிவைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்துக்குச் சில மைல் தொலைவில் ஒருவர் தனியார் கிளினிக் ஒன்றைத் திறந்தார். கிளினிக்கில் தனது பெயருக்குப் பக்கத்தில் 'எம். பி. பி. எஸ்.' என்று போட்டு அதற்கு அருகில் அடைப்புக் குறிக்குள் 'எச்' (H) என்று போட்டுள்ளார். சிகிச்சைக்குப் போகும் பலரும் அவர் எம். பி. பி. எஸ். டாக்டர் என்றே நினைக்கின்றார்கள். ஆனால் அவர் 'எம். பி. பி. எஸ்.' பட்டம் பெற்ற மருத்துவர் அல்லர் என்பது மட்டும் உறுதி. அவரைத் தெரிந்த பலருக்குத் தெரிந்த விவகாரம். அப்படியானால் அவரின் பட்டத்துக்கு அர்த்தம் என்ன? யார் அவருக்கு இந்தப் பட்டத்தை அளித்தது? ஹோமியோபதி போன்ற மருத்துவத் துறைகளில் எம். பி. பி. எஸ். பட்டம் கொடுக்கின்றார்களா? எல்லாம் கடவுளுக்கும் நோயாளியை மேலுலகத்துக்கு அழைத்துப் போகும் யமனுக்கும்தான் வெளிச்சம்!

சித்தம், ஆயுள் வேதம், ஹோமியோபதி, யுனாணி போன்ற மருத்துவத் துறைகளைப் படித்து விட்டு அதில் கிடைத்த பட்டத்துடன் வந்து அமர்ந்து எம். பி. பி. எஸ். டாக்டர் பாணியில் ஆங்கில மருத்துவ சிகிச்சைகளை வழங்கும் மற்றொருவகையான டாக்டர்களும் குடாநாட்டில் பரவலாக இருக்கின்றார்கள். அவர்களும் ஒரு வகையில் போலி டாக்டர்களே!

இத்தகைய டாக்டர்களை நம்பி நமது சமூகம் அழியப்போகின்றது. இதனைத் தடுப்பது யார்? அந்தப் பொறுப்பு யாரிடமோ...?!

இவற்றுடன் ஒப்பிடும் போது முக்கிய தலைமுறை வைத்தியர்கள் (பரியாரிமார்) தங்கள் உண்மை நிலையை வெளிப்படுத்தி சுதேச வைத்தியத்துக்கு மதிப்பும் பெருமையும் ஏற்படுத்தித் தந்தார்கள். அவர்களது வரிசையில் இன்றும் ஒரு சிலர் சுத்தமான சுதேச வைத்தியம் செய்கிறார்கள். அவர்களது சேவை மேலானது; நீதியானது; வரவேற்கத்தக்கது.

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KALAIMANI INSTITUTE

மானிப்பாய்

ஆண்டு 3 தொடக்கம் 11 வரை

ஆரம்பம் 10-12-97 புதன் மாலை 3.30

| | |
|---|---|
| கணிதம்<br>S. K. N. நவறட்ணராஜா<br>(நவறாஜா) | விஞ்ஞானம்<br>திரு. நந்தீஸ்<br>செல்வி ஜயந்தி |
| தமிழ்<br>பண்டிதர் தயாசிலன் | சமூகக்கல்வி, வரலாறு<br>திரு. திருக்குமார் |
| ஆங்கிலம்<br>திரு. பரிதிதாசன் | வர்த்தகம்<br>திரு. T. குமார் |
| சமயம்<br>செல்வி ஜீவா | விவசாயம்<br>திரு. T. சிலன் (Dip) |

கணிதம் ஒரு கிழமையில்

ஆண்டு 11 க்கு 8 மணி நேரமும்
ஆண்டு 9,10 க்கு 6 மணி நேரமும்
ஆண்டு 6, 7, 8 க்கு 5 மணி நேரமும்
நடைபெறும். பயிற்சிகளும் செய்விக்கப்படும்.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(49861)


## பாதிப்பு

மல்லாகம், டிச. 6

தொடர்ந்து பெய்யும் மழை காரணமாகச் சுன்னாகம் பகுதியில் பயிரிடப்பட்ட கோவாப் பயிர்கள் பாதிப்படைந்துள்ளன. (ஐ-86)


# SHAMROCK

யா/ஈச்சமோட்டை வீதி,

ஆண்டு 8 முதல் O/L வரை

புதிய வகுப்புகள் - 98

ஆரம்பம் - 07 - 12 - 1997 ஞாயிறு

★ புலமைப் பரிசில் '98 ஆரம்பமாகியுள்ளது.

(51619)



# சிவா திரை அரங்கு

தினசரி 10.30, 2.30

ராம்ஜி, சோனியா

நடித்த

வீரபாண்டிக் கோட்டையிலே

(51627)



# WANTED

**Coaches for Netball and Athletics for Girls**

and

**Basketball and Cricket for Boys**

Only Trained Coaches should apply before 15th December 1997 to

**The Principal,**
**Jaffna College,**
**Vaddukoddai.**

(C/2275)


## யாழ். மத்திய கல்லூரி

6 ஆம் ஆண்டு அனுமதிப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டமாணவர்களதுபட்டியல்கல்லூரியில்பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று காலை 9-30 மணிக்கு அதிபரைச் சந்திக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அதிபர்,
யாழ். மத்திய கல்லூரி.

(சி/2272)


# வாழ்த்துக்கள்!

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை இன்று கொண்டாடும் ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்கத்தின் சேவை மேலும் விரிவடைந்து எலலோருக்கும் ஒளி விளக்காக அமைய வாழ்த்துகின்றேன்.

மக்ஷல் கவுஸ்,
20, யுபிலி பஜார், யாழ்ப்பாணம்.

(51625)





# பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

நத்தார், புது வருடத்துக்குத் தேவையான

★ கேக் தயாரிக்கும் பொருள்கள்
★ கேக் அலங்காரப் பொருள்கள்
★ எசன்ஸ் வகைகள்
★ எமல்சன் வகைகள்
★ கோடியல் வகைகள்
★ விஸ்கற் வகைகள்

அனைத்தையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

பெட்டா எசன்ஸ் சப்பளையர்ஸ்
109, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (51581)



# BARATHY

சித்தன்கேணி.

ஆண்டு 6 முதல் 11 வரை
புதிய வகுப்புகள்

ஆரம்பம்: 6-12-97 சனி 2.00 மணி

எமது தனித்துவமும் திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. தேவா |
| கணிதம் | — | திரு. எஸ். சிவரூபன், திரு. நடா |
| தமிழ் | — | திரு. சின்னத்தம்பி திரு. றஞ்சன் |
| ஆங்கிலம் | — | திரு. தெய்வதவபாலன்<br>திரு. அருமைநாயகம் |
| வரலாறு<br>சமூகக்கல்வி | — | திரு. ஆர்த்திகன், திரு சிவா |
| வர்த்தகம் | — | திரு. சுபேசன் |
| சமயம் | — | திரு. கோபி |

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு சனி 3.00 மணி

திரு. கனகசபை (ஓய்வுபெற்ற அதிபர்)

சகல பிரிவுக்கும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர்
BARATHY INSTITUTE

(49864)


## கண்ணீர் அஞ்சலி

### கதிரவேலு இராசரத்தினம்

எமது வணிகர்கழக உறுப்பினரும் K. K. இராசரத்தினம் நகைவியாபார உரிமையாளருமாகிய

**கதிரவேலு இராசரத்தினம்**

05-12-1997 வெள்ளிக்கிழமை காலமான செய்தி கேள்வியுற்று அதிர்ச்சியும் துயரமும் அடைகின்றோம். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கண்ணீர் அஞ்சலியாகச் சமர்ப்பிக்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(சி/2280)

## கண்ணீர் அஞ்சலி

கே. கே. இராசரத்தினம் நகை மாளிகை உரிமையாளர்

### கே. கே. இராசரத்தினம்

அவர்களின் பிரிவால் துயர் அடைந்துள்ள குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுதர்சன் மருந்தகம்,
இல: 10. பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

(51626)

உ

உண்மையே உயர் அறம்

# J/SKANDAVARODAYA COLLEGE

KANDARODAI, CHUNNAKAM,

## FOUNDER'S DAY & PRIZE GIVING

## நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் - 1997

காலம்:- 07-12-1997 ஞாயிறு மு. ப. 9.00 மணி
இடம்:- கல்லூரி மண்டபம்
தலைவர்: திரு. க. சிவாஜி அவர்கள் (அதிபர்)

ஆசியுரை: அன்னை துர்க்கா துரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்கள்
(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

பிரதம விருந்தினர்: ஸ்கந்தா அன்னையின் மைந்தன்
பேராசிரியர் V. K கணேசலிங்கம் அவர்கள்
(பீடாதிபதி விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

நிறுவநர் நினைவுப் பேருரை:
திருமிகு அ. கற்பரானந்தன் அவர்கள்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், உடுவில் கோட்டம்)

நன்றியுரை:
திருமிகு க. புவனேந்திரநாதன் அவர்கள்
(இளைப்பாறிய பிரதி அதிபர்)

கலை நிகழ்ச்சிகள்

அனைவரையும் அன்புடன அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அ. வி. சங்கம், பழைய மாணவர் சங்கம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

குரூஸ் நிறுவனம்,
சுன்னாகம்.

(சி/2276)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றிநவிலலும்



மலர்வு: 19 — 11 — 1935

உதிர்வு: 06 — 11 — 1997

### திருமதி கயிலாயபிள்ளை கமலாதேவி
(கமலம்)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

அன்னாருடைய இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு **06 - 12 - 97** இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள அவரின் சபிண்டீகரண நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுகுணன், காந்தி,
குமார், இரத்தினம்
குடும்பத்தினர்.

மாசிவன்,
நீர்வேலி வடக்கு.

(51606)

## மரண அறிவித்தல்கள்

### இலம்போதரஐயர் தங்கம்மா

திக்கம், அல்வாயைப் பிறப்பிடமாகவும், மருதங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலம்போதரஐயர் தங்கம்மா வவுனியாவில் 3-12-97 இல் சிவபதமெய்திவிட்டார். அன்னார் காலஞ்சென்ற இலம்போதரஐயரின் அன்பு மனைவியும், சிவக்கொழுந்துவின் (வவுனியா) அன்புத்தாயாரும், திரு. ப. சண்முகநாதசர்மாவின் (இளைப்பாறிய பொலீஸ் பரிசோதகர், வவுனியா) அன்பு மாமியும், ச. தியானேஸ்வரசர்மா (பங்காளர், ராஜ்வரன் அன் கோ யாழ்ப்பாணம்) ச. நிராஞ்சனசர்மா (இ. போ. சபை, வவுனியா), ச. குகனேஸ்வரசர்மா (வீடமைப்பு அதிகாரசபை, வவுனியா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், தி. வத்சலாதேவி (சுகாதாரத் திணைக்களம், சாவகச்சேரி) நி. பாலாம்பாள் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பாட்டியும், பிரதாகினி, மதுராகினி, சிந்துஜா, லக்ஷிகா, தஜேந்தன், கஜேந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரது நல்லடக்கம் 5 - 12 - 97 இல் வவுனியாவில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ச. தியானேஸ்வர சர்மா
(பேரன்)

நுணாவில், மத்தி.

(51612)

### கதிரவேலு இராசரத்தினம் K. K. R.
(உரிமையாளர் K. K. இராசரத்தினம் நகைமாடம், யாழ்.)

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கதிரவேலு இராசரத்தினம் 5 - 12 - 97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு — நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், குப்பிளான் சண்முகம் — பாக்கியத்தின் மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், கானப்பிரியா, சிந்துஜா, கிரிசுதா (கொக்குவில் இந்துக் கல்லூரி), செந்தூரன், கரிகரன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜேஸ்வரியின் சகோதரரும், அருந்தவநாதன் (யாழ். மத்திய கல்லூரி), அருள்நந்தி, சாரதாதேவி ஆகியோரின் மைத்துனரும், தர்மலிங்கத்தின் (வலி. கிழக்கு பிரதேச சபை) சகலனும், சியாமளரூபன் (யாழ். இந்துக் கல்லூரி), வித்யா, லாவண்ணியா, தர்சிகா, சோபிகா, கோகிலரூபன், ஐங்கரரூபன் (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு இன்று (6 - 12 - 97) முற்பகல் 10 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ச. இராசரத்தினம்

''பிரியா இல்லம்'',
அரசடி வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

## ஆண்டு-6 அனுமதி பரீட்சை

கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆண்டுஆறு வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான அனுமதிப்பரீட்சை அந்தந்தப் பாடசாலைகளில் இன்று சனிக்கிழமை காலை 9மணிமுதல் நடைபெறவிருக்கிறது. (இ-3)

## ஒளிவிழா

கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்தின் ஒளிவிழா இன்று காலை 10. 00 மணிக்கு வித்தியாலய அதிபர் பி. பெனடிக்ற் தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ். வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் கொழும்புத்துறை சென். ஜோசப் குருமட அதிபர் அருட்திரு. போல் நட்சத்திரம் அடிகளார் அருளுரை வழங்குவார். (ஐ-51)

## மணிவிழா

இறைபணிச் செம்மல் ச. விநாயகரத்தினத்தின் மணிவிழா நாளை ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை வழங்குவார். நல்லை குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் விழா நாயகருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்து வாழ்த்துரை வழங்குவார். (ஐ)

## டிரான்ஸ்போமர் தகர்ப்பு

அக்கரைப்பற்று தம்பிலுவில் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் இரவு மின்சார டிரான்ஸ்போமர் ஒன்று இனந் தெரியாத நபர்களினால் கிரனேட் வீசித் தகர்க்கப்பட்டுள்ளது. (உ-21)

## மருத்துவ பரிசோதனை

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கல்வியங்காடு டச் வீதியில் உள்ள ஞான பாஸ்கரோதய சனசமூக நிலையத்தில் நாளை காலை 8 மணி முதல் கண் பரிசோதனை, நீரிழிவு பரிசோதனை ஆகியன இடம் பெறும். யாழ். போதனா ஆஸ்பத்திரி வைத்தியர்கள் இப்பரிசோதனையை மேற்கொள்வர்.

ஏற்கனவே பதிவு செய்த 200 பேரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## நாடாளு

(முதலாம் பக்கத் தொடர்)

யிட வேண்டும்—

வடக்கு கிழக்குக்கு வெளியே கண்டபடி தமிழர்கள் கைது செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும்—

வவுனியா அகதி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் —

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் நீதிமன்ற விசாரணைக்குக் கொண்டு வரப்படவேண்டும்; அல்லது அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்—

ஆகிய நான்கு கோரிக்கைகளையும் முன்வைத்தே இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்க் கட்சி ஒன்று நாடாளுமன்றத்திற்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

## நாவலர் வீதியில் திருட்டு

ஊரடங்கு நடைமுறையில் இருந்த வேளையில் — கடும் மழைக்கு மத்தியில் — நல்லூரில் புடைவைக்கடை ஒன்றில் துணிகரத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

நல்லூர் நாவலர் வீதியில் வீடு ஒன்றில் அமைந்துள்ள புடைவைக் கடையிலேயே நேற்று முன்தினம் இரவு இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஜன்னலிலுள்ள கம்பிகளை வளைத்து உள்ளே நுழைந்தவர்கள் அரவம் எதுவும் இன்றிச் சாதுரியமாக அங்கிருந்த மூன்று லட்சம் ரூபா பெறுமதியான சாரங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடையின் உரிமையாளரும் மற்றும்மூவரும் அங்கு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு கத்தியும் ஸ்குருட்ரைவரும் அங்கு கிடக்கக் காணப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ-3)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். போதனா வைத்திய சாலையில் நாளை மறுதினம் நடைபெறவிருந்த மருத்துவ மாதர் பயிற்சிக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்டவர்களுக்கு தனித்தனியாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (உ-3)

## கிரனேட் வெடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். ரயில் நிலையத்துக்கு அண்மையில் உள்ள பிரதேசத்தில் நேற்று மாலை 6.45 மணியளவில் கிரனேட் வெடிப்புச் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. (உ)

## கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்)

வாக ஆராய்வார்கள் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே நேரம்-கூட்டணியின் அரசியல் குழு நாளை கொழும்பில் கூடி உள்ளூராட்சித்தேர்தல் தொடர்பாக ஆராய்ந்து முடிவு செய்யும் எனத்தெரிவிக்கப்பட்டது (உ-3)

## முன்பள்ளி கலைவிழா

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய மாதிரி முன்பள்ளியின் வருடாந்தக் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சி. வி. பரமேஸ்வரன் தலைமையில் மானிப்பாய் பட்டினசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேதநாயகன், கட்டடத் திணைக்களப் பொறியியலாளர் அ. இருதயநாதன், சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஐ-90)

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்)

தில் ஏற்பட்ட கோளாறே இந்த மின் தடைக்குக் காரணம் என ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன. (உ-3-21)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் காலை 6.45 மணிக்கு வெடித்த சமர் பிற்பகல் 3. 00 மணி வரை மிகக்கடுமையாகத் தொடர்ந்தது.

காயப்பட்ட படையினரும், உயிரிழந்த படையினரின் சடலங்களும் வவுனியா, அநுராதபுரம் ஆஸ்பத்திரிகளுக்கு நேற்று முன்தினம் மதியம் முதல் எடுத்து வரப்பட்டவண்ணம் இருந்தன.

ஆஸ்பத்திரிக்கு மொத்தம் 36 படையினரின் சடலங்கள் எடுத்து வரப்பட்டன. இது தவிர 111 படையினரின் சடலங்கள் புலிகளால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிக்கப்பட்டன. சேதமுற்ற 20 படையினரின் சடலங்களை தாம் எரித்து விட்டதாக புலிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர். மேலும் ஒரு தொகுதி படையினரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆக மொத்தம் 170 க்கும் அதிக படையினர் இத்தாக்குதலில் உயிரிழந்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

இச்சமரில் தமது தரப்பில் 37 பேர் உயிரிழந்ததாகப் புலிகள் லண்டனில் அறிவித்துள்ளனர்.

ஜி. பி. எல். எம். ஜி., எல். எம். ஜி. ஆகியவை உட்பட நூற்றுக்கணக்கான ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் தாங்கள் கைப்பற்றியதாகவும் புலிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

மன்னகுளம் தாக்குதலில் 53 ஆவது படையணியின் கொமாண்டோப் படைப் பிரிவே பெரிதும் அழிந்ததாக ஒரு செய்தி தெரிவித்தது. கொமாண்டோ அணியின் கட்டளை அதிகாரியான மேஜர் ஸ்ரீவர்த்தனாவும் இந்தச் சமரில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மன்னகுளம் பகுதியில் மிக நெருக்கமாக நின்று நேருக்கு நேர் புலிகளும் படையினரும் மோதியதாக ஒரு செய்தி தெரிவித்தது.

(உ-ஐ-3-21-164)

## கண்ணீர் அஞ்சலி

### K. K. R. நகைமாளிகை உரிமையாளர் K. K. இராசரத்தினம்

அவர்களின்திடீர் மரணச்செய்தியைக் கேட்டு அதிர்ச்சியுற்றோம். அன்னாருக்கு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதோடு அன்னாரைப் பிரிந்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**வினோ நகைப்பூங்கா,**
**சோபனா ஆடையகம்,**
**சத்தியா அன்கோ.** [51618]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06-12 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

சஞ்சீவி

# சஞ்சிகை

06 - 12 - 1997 சனிக்கிழமை




உள்ளூர், வெளியூர், வெளிநாட்டு

தொலைபேசி அழைப்புக்களை எந்நேரமும் யாழ். நகரில் பெறுவதற்கு

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்

வெலிங்டன் சந்தி அருகாமை,
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பக்ஸ் அனுப்பவும் வசதிகள் உண்டு) (சி/2224)

கருத்துக் கலசம் — மயூரா

## ஊன்று கோல் ஆகுங்கள்

இவ்வார மத்தியில், உலக ளாவிய ரீதியில் ஊனமுற்றோர் நாள் அனுஷ்டிக்கப்பெற்றது.

ஊனம் இயற்கையாகவே பிறப்பில் வருவதும் உண்டு; இடையில் வருவதும் உண்டு; வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் — முதுமைப் பருவத்தில் — வருவதும் உண்டு.

அங்கம் குறைந்தவர்களாக அல்லது மூளை வளர்ச்சி குன்றியவர்களாகப் பிறந்துவிடும் குழந்தைகள் ஊனமுற்றோராகி விடுகின்றனர். இடையில் இளம் பிள்ளைவாதம் நோய் மற்றும் நோய்கள், விபத்துக்கள் காரணமாக ஊனமுற்றோராக மாறுவோரும் உளர். முதுமை பருவத்தில் மூப்பின் பிடியில் ஐம்புலன்களில் ஒன்றையோ அதற்கு மேற்பட்டவற்றையோ இழந்து ஊனமுற்றோராகி விடுவோரும் உளர்.

உடல்ஊனமுறாமல் இருந்த போதிலும், உளவளம் குன்றிவிட்டால் அதுவும் ஒரு வகை ஊனமுறுதவே ஆகும். இன்றைய சூழ்நிலையில், வாழ்க்கையில் உண்டான பாதிப்புகள் இழப்புகளால் மனமுடைந்து ஊனமுற்றவர்களின் எண்ணிக்கையும் அதிகம்.

போர் நடைபெற்று வரும் வடக்கு — கிழக்கில் வாழும் மக்களை விமானத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள், கண்ணிவெடிகள், மிதிவெடிகள் என்பனவும் ஊனமுற்றோர்களாக மாற்றி வருகின்றன.

இவ்வாறு பல வழிகளாலும், பலதரப்பட்ட வயதுகளிலும் ஊனமுற்றோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. யாழ்ப்பாண மக்களில் ஊனமுற்றோரின் வீதம் உயர்ந்து வருகிறது.

ஊனமுற்றோரை சமூகத்தின் சம அங்கமாகக் கருதி அவர்களின் கஷ்டங்களைப் போக்குவதற்கும், ஏனையோரைப் போன்று சம இடத்தில் வைத்துப் பேணவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தேவை. இவற்றுக்கு மக்கள் மத்தியில் உண்டாகக் கூடிய விழிப்புணர்வும், பரிந்துணர்வும், புரிந்துணர்வுமே அத்திவாரமாக அமையவல்லன.

எந்த வேளையிலும் நானும் ஊனமுற்றவனாக மாறிவிடக் கூடும்; அவ்வாறாயின் எனது உணர்வுகள் எவ்வாறு அமையும் என்பதனைச் சிந்தையில் கொண்டு ஒவ்வொருவரும் செயற்படுவோமாயின், விழிப்புணர்வும், பரிந்துணர்வும் இயல்பாகவே மலர்ந்துவிடும்.

அன்புணர்வைப் பொங்கச் செய்து, ஊனமுற்றவர்களையும் தன்னைப் போலவே கருதி, தனக்குச் சமனாக வைத்து, அவர்களின் கஷ்டங்களைப் போக்கவும், உரிமைகளை வழங்கவும் அவர்களுக்கு ஊன்று கோலாக உதவவும் மனித நேயம் வளர வேண்டும், அதற்கு முயல்வோமாக!

# குண இயல்புகளை விளக்கும் இலக்கிய மாமேதைகள்

இந்த உலகில் எத்தனையோ அதிசயங்கள் உள்ளன. அவற்றுள் எல்லாம் தலையாய அதிசயம் மனித மனம்தான். மனிதர்கள் எல்லோரும் உருவத்தில் ஒற்றுமை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் மனமோ சிலருக்குச் சிகரமாகவும் இன்னும் சிலருக்குப் படுபாதாளமாகவும் உள்ளது. இதனைத்தான் திருவள்ளுவர்

''உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றால்
வெறுத்தக்க பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு''

என்றார்.

ஆனால் மிருகங்களில் இந்தப் பிரச்சினை இல்லை. சிங்கம், கரடி, மான், முயல், பசு என்று தோற்றத்தைக் கொண்டே அவற்றின் ஆபத்தானவைகளையும் சாதுவானவைகளையும் கண்டு பிடித்து விடலாம்.

உருவ அமைப்பில் ஒத்திருந்து குணங்களில் முரண்படும் மக்களை இலக்கியங்கள் வெகுசிறப்பாகச் சிருஷ்டித்துக் காட்டுகின்றன.

### கொடுமையின் சிகரம்

மகாகவி சேக்ஷ்பியரின் இன்பியல் இலக்கியம் வெனிஸ் வர்த்தகன். (Merchant of Venice) அதில் இருவர்த்தகர்கள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறார்கள், ஒருவன், அன்ரோனியோ மற்றவன், ஷைலொக். இருவருக்கும் ஒருபோதும் ஒத்துப்போவதில்லை. அவர்களின் தொழிலே இதற்குக் காரணமாகஇருந்தது.

ஷைலொக் வட்டிக்குப் பணம் கொடுக்கும் வர்த்தகன். அன்ரோனியோ வட்டி இல்லாமலே பணம் கடன் கொடுப்பவன். இது ஷைலொக்கின் தொழிலைப் பெரிதும் பாதித்தது. வேறு காரணங்களும் இருந்த போதும் இக்காரணமே ஒருவரை ஒருவர் வெறுப்பதற்குத் தூண்டு கோலாகியது.

அன்ரோனியோவுக்கு வெனிஸில் நண்பர்கள் பலர். பஸானியோ உயிர் நண்பன். ஒரு நாள் பஸானியோ அன்ரோனியோவிடம் சென்றான். அவசர தேவையாக இன்னோரிடத்துக்குச் செல்ல வேண்டி இருப்பதால் பணம் கடனாகத் தந்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்டான். அன்ரோனியோவின் கப்பல்கள் அந்த நேரத்தில் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தன. அந்த நேரத்தில் அவனிடம் பணம் இல்லை. கப்பல்கள் திரும்பினால் பெரும் தொகை பணம் வரும் என்றும் அன்ரோனியோ கூறினான்.

ஷைலொக் என்ற வர்த்தகனிடம் பணம் கேட்குமாறு கூறினான். தானும் சென்றான். ஷைலொக் பணம் கொடுப்பதற்கு அதிகம் யோசித்தான். காரணம் அன்ரோனியோவிடம் இருந்த வெறுப்பே.

பின்னர் யோசித்து விட்டு ஒரு பிணைப்பத்திரத்தில் அன்ரோனியோ கையொப்பமிட்டால்அவர்கள் கேட்கும் தொகையை தான் கொடுப்பதாக ஷைலொக் கூறினான்.

பிணைப்பத்திரம் தயாராகியது. அந்தப் பிணைப்பத்திரத்தில் குறித்த காலத்தில் பணம் கொடுக்கப்படாவிட்டால் பிணை நிற்கும் அன்ரோனியோவின் உடலிலிருந்து ஒரு றாத்தல் இறைச்சியைத் தான் விரும்பிய இடத்தில் வெட்டி எடுப்பதாக ஷைலொக் குறிப்பிட்டிருந்தான்.

இந்த நிபந்தனையை அன்ரோனியோவின் நண்பன் பஸானியோ விரும்பவில்லை. ஆனாலும் தனது கப்பல்கள் திரும்பி வந்தாலும் இதைவிடப் பன்மடங்கு பணம் வரும் என்ற நம்பிக்கையில் அன்ரோனியோ கையொப்பமிட்டான்; கடன் கொடுக்கப் பட்டது.

காலம் விரைந்தோடியது. பிணைப்பத்திரத்தின் காலம் முடிந்தது. அன்ரோனியோவின் கப்பல்கள் குறிப்பிட்ட காலத்தில் திரும்பி வரவில்லை. பிணைப் பத்திரக் காலம் முடிந்தமையால் அன்ரோனியோ கைது செய்யப் பட்டான். நீதிமன்றம் கொண்டு வரப்பட்டான். ஷைலொக் ஒரு றாத்தல் இறைச்சியை வெட்டி எடுப்பதற்குக் கத்தி தீட்டி ஆயத்தமானான். ஒரு மனிதனின் இறைச்சி வெட்டி எடுப்பதற்கு இன்னொரு மனிதன் மகிழ்ச்சியோடு கத்தி தீட்டுகிறான் என்றால் அதுதான் மனிதமனக் கொடுமையின் சிகரம்.

கத்தி தீட்டிய ஷைலொக்கின் ஆசை நிறைவேறியதா என்றால் அதுதான் இல்லை. பஸானியோவின் காதலி போஷியா வழக்கறிஞராக மாறுவேடத்தில் வருகிறாள். ஷைலொக்கைப் பார்த்து ஒப்பந்தப்படி ஒரு றாத்தல் இறைச்சியை வெட்டி எடுக்கலாம். சிறிதானும் அதற்குக் கூடவோ குறையவோ எடுக்கக் கூடாது. ஒரு சொட்டு இரத்தம் தானும் சிந்தக்கூடாது என ஒப்பந்தத்தை வைத்தே நிபந்தனை விதிக்கிறாள். இந்த நிபந்தனைப்படி ஒரு றாத்தல் இறைச்சி எடுக்க முடியுமா? ஷைலொக்கின் கொடூர ஆசை நிறைவேறவில்லை. அன்ரோனியோ விடுதலை ஆகிறான்.

### கருணையின் சிகரம்

மனிதமனத்தின் கொடுமையின் சிகரத்தைப் பார்த்தோம். இனிக் கருணையின் சிகரத்தைப் பார்ப்போம்.

சிபிச்சக்கரவர்த்தி உலா வரப்புறப்படுகிறான். அந்த நேரத்தில் புறாவொன்று [illegible] போல் அவன் காலடியில் விழுகிறது. புறாவைக்கருணையோடு கையில் எடுத்தான்.

முல்லைக்குப் பாரி இரங்கியதுபோல்—மயிலுக்குப் பேகன் இரங்கியதுபோல—புறாவுக்குச் சிபிச் சக்கரவர்த்தி இரங்கினான்.

புறாவைத் துரத்தி வந்த பருந்தை சிபி பார்த்தான். ''உனது பசியைத் தீர்க்க இறைச்சிதானே வேண்டும். இந்தப் புறாவுக்கு நிகரான நிறையுள்ள இறைச்சியை எனது உடலில்வெட்டித் தருகிறேன்!'' என்றான். சொன்னவாறே தராசின் ஒரு தட்டில் புறாவை வைத்து மறு தட்டில் தனது உடலிலிருந்து இறைச்சியை வெட்டி வைக்கத் தொடங்கினான். இது மனிதமனத்தின் கருணையின் சிகரம்.

### சமயோசிதத்தின் சிகரம்

மனித குண இயல்புகளை விளக்கும் மேதைகள், சமயோசித அறிவில் சில சமயங்களில் ஆடவரையும் விஞ்சும் மகளிரையும் சித்திரிக்கின்றனர். சமயோசிதமாகக் கருமம் ஆற்றுவதில் சில வேளைகளில் ஆண்களைப் பெண்கள் விஞ்சிவிடுகிறார்கள். இதோ கலிங்கத்துப் பரணியில் ஓர் உதாரணம்

திருமணமாகிச் சில நாள்களே ஆகி இருந்தன. தலைவன் போர்க்களம் சென்றான். போரில் வெற்றி பெற்றான். போர்க்களத்தில் வெற்றி பெற்ற தலைவன் காதல் களத்திலும் வெற்றி பெற ஆசைப்பட்டான்.

விரைந்து வீடு திரும்பினான்; சிறிது காலப் பிரிவே, தலைவிக்குச் சிறுகோபத்தை —ஊடலை— ஏற்படுத்திவிட்டது. ஊடலால் அவள் வாசற் கதவைத் திறக்கவில்லை.

கற்பனை மிக்க உள்ளம் வாய்ந்த புலவர் தலைவனுக்கு இரங்கித் தலைவியை கதவு திறக்குமாறு பாடுவது போல் அமைந்த பாடல் அது.

அன்பை விளைவிக்கக்கூடிய புணர்ச்சியால் ஏற்படும் காதல் மயக்கத்தில் இரவு முழுவதும் தலைவி உவக்கும் இன்ப வார்த்தைகளைத் தலைவன் கூறினான். தலைவி காதலிற் குறைந்தவளா? அவளும் விடிய விடியத் தலைவன் உவக்கும் இன்ப வார்த்தைகளைத் தானும் கூறினாள்.

இவர்களின் இன்ப உரையாடல்களைத் தலைவி செல்லமாக வளர்த்த கிளி விடிய விடியக் கேட்டது. அதற்கோ ஞாபக சக்தி அதிகம். ஒரு முறை கேட்டதை அப்படியே ஒலிப்பதிவு நாடா போல ஒரு சொல்லும் விடாது திருப்பிச் சொல்லும் ஆற்றல் உடையது.

பொழுது விடிந்தது. அவர்கள் வீட்டுக்கு விருந்தினர்கள் சிலர் வந்தார்கள். தலைவனின் போர்ச் சாதனை பற்றி எல்லாம் கேட்டு மகிழ்ந்தார்கள். தலைவனின் போர்க்களச் செய்தியைக் கேட்டு மகிழ்ந்த அவர்களுக்குத் தலைவனின் காதல் களச் செய்தியைக் கூறியது கிளி.

கிளிக்குத் தணிக்கை செய்யத் தெரியாது. இரவிரவாகத் தலைவன் தலைவி பேசியதை அப்படியே ஒப்புவித்தது. தலைவன் தலைவிக்குத் தர்மசங்கடம் ஆகிவிட்டது.

ஆனால் சமயோசித சிகரமாக விளங்கிய தலைவி கிளியின் வாயைப் பொத்திப் பிடித்துக் கொண்டாள். கிளியால் எதுவும் பேசமுடியவில்லை. இதோ அந்த கலிங்கத்துப் பரணிப் பாடல்.

''நேயக்கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளி
உரைப்ப
வாயைப்புதைக்கும் மட
நல்லீர்
மணிப் பொற்கபாடம்
திறமினோ''

### உளவியலில் சிகரம்

திருமணத்தின் பின்னர் காதல் வாழ்வில்—மன நிலையில் மாற்றம் ஏற்படுவதுவும் உண்டு. இந்த மாற்றத்தை —உளவியலை— கூறுகிறது ஒரு குறுந்தொகைப் பாடல்

தலைவனிடம் ஊடல் கொண்டிருந்தாள் தலைவி. தலைவியின் ஊடலை மாற்றத் தலைவன் தோழியின் உதவியைநாடினான். தலைவியிடம் செல்ல வழிசெய்யுமாறு வேண்டினான், அதற்குத் தோழி தலைவனைக் குற்றம்சாட்டினாள்.

திருமணத்தின் முன் தலைவனுக்கு இருந்த அன்பு இப்பொழுது மாறி விட்டதென்றாள்; விளக்கமும் கூறினாள்.

திருமணத்திற்கு முன்பு தலைவி வேப்பங்காயைக் கொடுத்தாலும் தலைவன் கற்கண்டுபோல இனிக்கிறது என்பானாம். திருமணத்தின் பின்னரோ பாரியினுடைய பறம்புமலையில் உள்ள குளிர்ச்சிபொருந்திய நீரைத் தலைவி கொடுத்தாலும் நீர் சுடுகிறது—கசக்கிறது— என்கிறானாம்.

வேப்பங்காய் அன்று போல் தான் இன்றும் இருக்கிறது. பறம்பு மலை நீர்ச்சுனையும் அன்று போல் தான் இன்றும் இருக்கிறது. மாற்றம் தலைவனின் உள்ளத்தில்தான். அந்த உளவியற் சிகரமான பாடல் குறுந்தொகையில் வருகிறது.

- புலவர் ம. பார்வதிநாதசிவம் -

(X1 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் திருவிழா வடக்கில் ஆரம்பம்

# பல கட்சிகளும் வியூகம் வகுக்கின்றன

வடக்கில் தேர்தல் திருவிழாவுக்கு மீண்டும் கட்டியம் கூறப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் கிளிநொச்சியின் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பச்சிலைப் பள்ளி பிரதேச சபைக்கும் தேர்தல்கள் நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கின்றார்.

1977 இற்குப் பின்னர் சுதந்திரமான — நியாயமான — தேர்தல்களை யாழ்ப்பாண மக்கள் சந்தித்தார்களா என்பது கேள்விக்குறியே அது ஒருபுறமிருக்க, குடாநாட்டில் பொதுவாக இளம் சமூகத்தினர் தேர்தல் என்றால் என்ன என்பதைத் தானும் நேரில் அவதானித்திருப்பார்களா — அது தொடர்பான நடைமுறைகளை — அதன் தாற்பரியத்தை உணர்ந்திருப்பார்களா என்பதும் சந்தேகமே.

யாழ். நகர மக்களைப் பொறுத்தவரை நீண்டகாலமாக "மேஜர்களைப்" பற்றிப் பேசிவந்த அவர்கள் முதல் தடவையாக மேயரைப் பற்றி — நகர பிதா குறித்து — பேசும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த ஆண்டு முற்பகுதியிலும் வடமாகாணம் மற்றும் வவுனியாவில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தத் திட்டமிடப்பட்டு அதற்கான அறிவித்தலும் விடுக்கப்பட்டன.

நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கான கால எல்லையும் அப்போது உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தமிழ்க்கட்சிகள் — அனேகமாக அனைத்துத் தமிழ்கட்சிகளுமே — அப்போது தேர்தலை நடத்துவதை ஒட்டுமொத்தமாக எதிர்த்தன. வடக்கு — கிழக்கில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலையே இல்லை என்று அக்கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் எதிர்ப்பு வெளியிட்டன.

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரேயடியாக எதிர்த்தால் வேறுவழியின்றி வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தும் திட்டத்தை அரசு அப்போது தள்ளிப் போட்டது; மீண்டும் இப்போது அறிவிப்பு வந்திருக்கின்றது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் குடாநாட்டின் கணிசமான பகுதிகளுக்கு ஸ்ரீலங்காப் படைகள் முன்னேறிய சமயம், ஈ.பி.டி.பி. தவிர, ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் வடக்கில் கால் ஊன்றியிருக்கவில்லை. ஈ.பி.டி.பி. கூட தீவகத்தில் ஒரு பகுதியிலேயே நிலைகொண்டிருந்தது.

ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி ஆர். எல். எவ், ஆகியவை இந்த வருட முற்பகுதியில் யாழ். நகரிலும் குடாநாட்டின் குறிப்பிடப்பட்ட ஒரு சில இடங்களில் தமது அலுவலகங்களைத் திறந்த கையோடு வருட முற்பகுதியில் வடமாகாணத்திலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் திணைக்களம் வெளியிட்டுவிட்டது. இதனால் தமிழ்க் கட்சிகள் திணறிப் போய்விட்டன.

உள்ளூராட்சி சபைகள் எத்தனை? அவற்றின் பிரதேச எல்லைகள் யாவை? என்ற விவரங்களை அக்கட்சிகள் உணர முன்னரே தேர்தல் அறிவிப்பு வந்து விட்டது. ஒவ்வொரு பிரதேச சபைக்கும் உட்பட்ட பகுதிகளில் தலா பத்துப் பேரை யாவது அறிந்துகொள்ள முன்னர் தேர்தலுக்கு அறிவிப்பு வந்துவிட்டதால் வேட்பாளர் பட்டியலில் சேர்ப்பதற்கு ஆள்களுக்கு எங்கு போவது என்பது அக்கட்சிகளின் அன்றைய நிலை!

அதனால்தான் அக்கட்சிகள் அனைத்தும் அன்று ஒன்று சேர்ந்து தேர்தலை எதிர்த்தன.

தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை வடக்கில் இல்லை என்று தமிழ்க்கட்சிகள் அன்று பெரிதாகக் கூறியிருந்தாலும் கூட, இன்றும் அந்த நிலையில் மாற்றமில்லை என்பதுதான் உண்மை.

எனவே இப்போதும் கடந்த முறை போலவே தேர்தலை பின்போடுமாறு முழு மூச்சாக அக்கட்சிகள் எதிர்க்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, ரெலோ, ஈரோஸ் ஆகிய அமைப்புக்கள் இதுவரை வடக்கில் தமது அலுவலகங்களைத் திறக்கவுமில்லை; செயற்பாடுகளை ஆரம்பிக்கவுமில்லை. எனவே உடனடியாக வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை சந்திப்பது என்பது அக்கட்சிகளுக்கு மிக நெருக்கடியான ஒன்றாகவே இருக்கும்:

## கூட்டணி

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை அதன் பழமையான கட்சிக் கட்டமைப்பின் தூண்கள், ஆதரவு போன்றவை இன்னும் ஓரளவுக்கேனும் களத்தில் உள்ளன என்பது உண்மையே. எந்த ஆயத்தமும் இன்றி திடீர் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள இது அக்கட்சிக்கு உதவக் கூடும். ஆயுதம் ஏந்தாத தமிழ்க் கட்சி என்பது வயதில் மூத்த தலைமுறையிடமிருந்து கூட்டணிக்கு வாக்குகளைப் பெற்றுத்தர ஒரு 'பிளஸ் பொயின்ட்' ஆக அமையக் கூடும்.

தனது பழைய கட்சிக் கட்டமைப்பு ஓரளவுக்கேனும் இருப்பதால் தேர்தலுக்கு வேட்பாளரைத் தேடிப் பிடிப்பதில் அக்கட்சிக்கு அதிகம் சிரமமிருக்காது என்றாலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல்களில் மூன்றில் ஒரு பகுதியினர் முப்பத்தைந்து வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை கூட்டணிக்கு தலையிடியைத் தருவதாக இருக்கும். வடக்கில் முப்பத்தைந்து வயதுக்கு உட்பட்ட இளைஞர்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சார்பான போக்குடையவர்களைத் தேடிப் பிடித்து தேர்தல் பட்டியலில் சேர்க்க வைப்பது குதிரைக் கொம்பு தேடும் பணியாகவே இருக்கும்.

## ஈ. பி. டி. பி.

உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய அறிவிப்பு வருட முற்பகுதியில் வந்த போது அதனை அப்போது ஒத்தி வைக்கக் கோரிய கட்சிகளில் ஈ. பி. டி. பியும் ஒன்று.

ஆனால் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேசிய அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா — முதலில் வடக்கு — கிழக்கில் மாகாணசபைத் தேர்தலையும் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் நடத்தும்படி ஜனாதிபதியை நேரில் கோரியிருந்தார்.

இத்தேர்தல்களில் ஏதேனும் ஒன்றை நடத்துவதற்கு அப்போது இணக்கம் தெரிவித்திருந்தார் ஜனாதிபதி. அந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டு 24 மணி நேரத்துக்குள்ளேயே உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்திருக்கின்றது.

வன்னியில் பெரும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே—

கிழக்கில் பெரும் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தற்போதைய சூழ்நிலையிலேயே—

வடக்கு—கிழக்கில் பல பகுதிகளில் இருந்தும் பொது மக்கள் வெளியேறி அகதிகளாக பல இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ள இக்கட்டுக்கு மத்தியிலேயே—

வடக்கின் பெரும் பகுதி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழான நிர்வாக அமைப்புக்குள் சிக்கியுள்ள நெருக்கடிகளுக்கு இடையிலேயே—

முழு வடக்கு கிழக்கிலும் மாகாணசபைத் தேர்தலை நடத்தும்படி ஜனாதிபதியை நேரில் சந்தித்துக் கேட்டவர் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா.

## உள்ளும் புறமும்

குறுமுனி

24 மணி நேரத்துக்கு முன்னர் அப்படிக் கூறிவிட்டு, 24 மணி நேரம் கழித்து வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை என்று அவர் கூற முடியாது; எனவே அப்படிக் கூறமாட்டார் என்றே பலரும் எதிர்பார்க்கின்றார்கள்.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தலை தாங்கள் விரும்பவில்லை என்று கூறுவதற்கு வேறுவழியால் அவர் வருகின்றார்.

"தமிழ் மக்களின் அதிகார அலகு குறித்து இன்று நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். அந்த நேரத்தில் வலுக் குறைந்த இந்த அதிகார சபைகள் மக்களின் நாளாந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று நான் நம்பவில்லை". — என்று அவர் இப்போது கூறுகின்றார்.

தேர்தல் நடைபெறும்நிலை கனிந்தால் அதை எதிர்கொள்வோம் என்பதே அக்கட்சியின் இன்றைய நிலைப்பாடு.

யாழ்ப்பாணத்தில் செயற்படும் கட்சிகளில் ஓரளவுக்கேனும் தமது வேலைத்திட்டங்களை விரிவுபடுத்திய அமைப்பு ஈ. பி. டி.பி.தான். யாழ். மாவட்டத்தின் பத்து எம். பிக்களில் ஒன்பது பேர் இக்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது யாழ்ப்பாணத்தில் அக்கட்சியின் செயற்பாட்டுக்கு உந்து சக்தியாக உள்ளது.

தவிரவும், குடாநாட்டில் கைதாகிய பின்னர் காணாமற் போனோரின் விடயத்தில் அக்கட்சி ஆற்றிய பணி யாழ்ப்பாணத்தில் ஓரளவு நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றது.

காணாமற் போனோர் விடயத்தில் ஸ்ரீலங்கா அரச நிர்வாகத்தின் முகத்திரையைக் கிழிக்கும் விதத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த மாத இறுதியில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

குடாநாட்டில் காணாமற் போனோர் தொடர்பான விடயத்தை உலகுக்கு அம்பலப்படுத்துவதற்கு குடாநாட்டில் திட்டமிட்ட முறையில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

காணாமற் போனோரின் பாதுகாவலர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு என ஒரு சங்கத்தை அமைப்பது தொடக்கம் காணாமற் போன ஒவ்வொருவர் தொடர்பாகவும் சத்தியக் கடதாசிகள் தயாரிப்பது வரையும் பல்வேறு நடவடிக்கைகள் களத்தில் எடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளின் பின்னணியிலும், காணாமற் போனோர் விவகாரம் தொடர்பான எழுச்சிப் போராட்டங்களுக்கு ஏற்பாடுகள், ஒழுங்குகள் செய்வதற்கான பின்னணி வரை சகல விடயங்களிலும் ஈ.பி. டி. பி.யே சம்பந்தப்பட்டிருந்தது என்பது குடாநாட்டு மக்களுக்கு ஓரளவு விளங்கிய விடயங்களாகும்.

★ யாழ்ப்பாணத்தில் தமது செயற்பாட்டை ஓரளவுக்கேனும் ஆரம்பித்திருப்பதால் உள்ள வாய்ப்பான போக்கு —

★ ஏனைய தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் இன்னும் நன்கு காலூன்றாததால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தினால் கிடைக்கும் சாதகமான நிலை —

★ காணாமற் போனோர் விடயம் போன்ற அம்சங்களைக் கையாண்டதால் சம்பாதித்துள்ள நல்ல பெயர்—

★ தீவகம் தவிர்ந்த ஏனைய குடாநாட்டுப் பகுதிகளை முன்னர் சந்தித்திராத புதிய அணி என்பதால் பழைய 'கெட்ட பெயர் இல்லாத' நல்ல அம்சம் —

போன்றவற்றைப் பயன்படுத்தி உள்ளூராட்சித் தேர்தலில் முந்தலாம் என ஈ. பி. டி. பி. கருதுகின்றது.

என்றாலும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தேடிப் பிடிப்பதில் அக்கட்சி கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதே பொதுவான அபிப்பிராயம்.

## புளொட்

'புளொட்' அமைப்பும் இவ்வருட முற்பகுதியில் மீண்டும் யாழ்ப்பாணத்தில் தனது அலுவலகங்களைத் திறந்து செயற்பட ஆரம்பித்தது.

வெகுஜன அமைப்புக்கள் ஊடாக மக்கள் மத்தியில் காலூன்றலாம் என்பது அக்கட்சியின் திட்டம் என்று தோன்றுகிறது. என்றாலும் கடந்த பதினொரு மாதங்களாக அக்கட்சியின் செயற்பாடுகள் குடாநாட்டில் பெரியளவில் விரிவுபடுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

கடந்த தடவைபோல, இம்முறையும் உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்ததும் திட்டவட்டமான ஒரு முடிவுடன் அதை ஒத்திப் போடுமாறு அக்கட்சியின் பேச்சாளர் த. சித்தார்த்தன் கருத்து வெளியிட்டிருப்பதும்—

தமது கோரிக்கையை மீறி உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டால் யாழ். மாநகரசபைக்கு முதன்மை வேட்பாளராக தமது அமைப்பின் உபதலைவர் ஏன். மாணிக்கதாசனை நிறுத்துவது எனத் தீர்மானித்து வைத்திருப்பதும்—

இத்தேர்தல்கள் தொடர்பாக அக்கட்சி ஏற்கனவே சில திட்டவட்டமான முடிவுகளை எடுத்துத் தயாராக இருக்கின்றது என்பதையே காட்டுகின்றது.

சிங்கள எல்லைப்புறப் பிரதேசத்தில் உள்ள வவுனியாவில் 'புளொட்' அமைப்பு நன்கு காலூன்றி உள்ளது. அங்கு அக்கட்சியின் செயற்பாடு அங்குள்ள தமிழருக்கு பெரும் வரப்பிரசாதமாக இருந்தாலும் கூட, அந்தத் தகவல்களையும் மீறி, வவுனியாவில் புளொட் அமைப்பு நிதி திரட்டும் வழிவகைகள் பற்றிய பேச்சே அதிகம் குடாநாட்டு மக்கள் மனதில் புகுந்திருப்பதை அறியக் கூடியதாகவுள்ளது. இது தேர்தல் என்று வரும்போது இங்கு புளொட் அமைப்புக்கு ஒரு "மைனஸ் பொயின்ட்" ஆக அமைந்து விடலாம்.

## ஈ. பி. ஆர். எல். எவ்.

இந்தியப் படை இலங்கையில் இருந்த காலத்தில் இந்தியாவுடன் சேர்ந்து ஈ. பி. ஆர். எல். எவ்வும் மற்றக் கட்சிகளும் செய்து கொண்ட ஏற்பாடுதான் வடக்கு—கிழக்கு மாகாண இணைப்பு.

அது அன்று தற்காலிக இணைப்பு என்று கூறப்பட்டாலும், அந்த ஏற்பாட்டினால்தான் இன்று வரை வடக்கு—கிழக்கு நிர்வாக ரீதியில் ஒரு மாகாணமாக இணைந்திருக்கின்றது.

இவ்வாறு இந்தியத் தரப்புடன் சேர்ந்து ஈ. பி. ஆர். எல். எவ். செய்த பல விடயங்கள் ஈழத் தமிழர்களுக்கு நன்மை பயப்பவையாக அமைந்திருந்த போதிலும்—

அவை எல்லாவற்றையும் மீறி இந்தியப் படைக் காலத்தில் ஈ. பி. ஆர். எல். எவ், மற்றும் ஈ. என். டி. எல். எவ். அமைப்புக்களின் உறுப்பினர்கள் இங்கு நடந்து கொண்ட விதமே யாழ். மக்கள் பலரின் மனத்திலும் இன்றுவரை நன்கு பதிந்து நிற்கின்றது.

இந்தியப் படை வெளியேறும் நிலை ஏற்பட்டால் இங்குள்ள தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற மாற்று ஏற்பாட்டுக்காக 'தமிழ் தேசிய இராணுவம்' என்ற அமைப்பை உருவாக்குவதற்கு அப்போது ஈ. பி. ஆர். எல். எவ். முயன்றது.

அந்த நோக்கம் நியாயமானது என்று கூறும் வாதத்தை ஏற்றாலும் கூட—

அந்த இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பதற்காக உள்ளூராட்சி சபை ஊழியர்கள் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து கூண்டில் அடைத்துக் கொண்டு செல்வது போல தமது பிள்ளைகளை — இளைஞர்களை — பலவந்தமாகப் பிடித்துச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் வினரின் செயலையும் அதனால் தங்களுக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சியையும் யாழ் மக்கள் விரைவாக மறந்து விடுவார்கள் என்று கூறுவது கஷ்டமே.

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பழசொன்றின்" ஆன்ம விசாரணை

சிட்டுப் பொறுக்கல்; சிகரட் மதுவிற்காய்
நோட்டுப் பொறுக்கிப்பின்; நோய்கொண்டு - பாட்டாவாய்
ஈசிச் சியரில் இளைத்துக் கிடக்கையிலே
பேசுவார் மாயப் பிசாசு.

ஆடு குழைகடிக்கும் பாணியிலே அங்கிங்கு
ஓடி அலைந்து உணர்வுமங்க — தேடுகிறேன்
மெய்ஞ்ஞானம் என்று மினக்கெடுவீர் இவ்வுலகில்
செய்யாத தெல்லாமும் செய்து.

காணித் தகராறு கட்டழகுக் காரிகளின்
மேனித் தகராறு; மேதாவி — நானாநீ
என்று தகராறு எம்வாழ்வு மெய்யாபொய்
என்றும் தகராறு இன்று.

பத்துவய தாகுகிற பாலகனோ மிட்டாய்ச்
சொத்தேதான் வாழ்வின் சுகமென்பான் — முத்திவிட்ட
பின்னேயோ வாழ்க்கையது பெண்ணிற்குள் என்பானே
என்னே குழப்பம் எடேய்.

காசெண்ணித் தேய்ந்துவிட்ட கைவிரல்கள்; கால்விரலோ
பேசுமிவர் காணிப் பெரும்பரப்பை — கூசுகிற
கண்பேசும் கண்டபல கட்டழகுத் தோற்றத்தை
மண்பேசும் ''வாடா மகன்''.

மனம்போல வாழ்வென்பார்; மந்திக்கு ஒப்பான
குணங்கொண்ட உள்ளம் குலையும் — மனிதா சொல்
வாழ்வும் மனம்போல் வடிவிழந்து போகுமென்றால்
கேளடா ஏனிக் கிளர்வு.

ஆராய்ச்சி விட்டு அரைநொடியைக் கூடநற்
பேறாக்கும் இத்தெறும்பைப் பின்தொடர்ந்து — பார்மனிதா
கூறுமது வாழ்வின் குறிப்புப் பொருளுனக்கு
ஆறறிவுக் கேன்ரா அலுப்பு?

— செல்லப்பர் —

# கணபதி அடியை நீ கூடு!

| | | | |
|---|---|---|---|
| ஆடு | கஜமுகன் | இன்னதுன் | கண்டு |
| ஓடு | அவனின் | வாசல் | தேடி |
| பாடு | அவனின் | பேர்பெறும் | புகழை |
| ஊடு | அவனருள் | பெருகும் | வண்ணம் |
| போடு | அடியில் | நறுமண | மலர்களை |
| வாடு | அவனைக் | காணா | திதயம் |
| மூடு | பிறகும் | புகாது | இருக்க |
| சூடு | அவனே | சூடிய | மலரை |
| சாடு | அவனை | இகழும் | மாக்களை |
| நாடு | அவனை | யாவரும் | நலம்பெற |
| தேடு | இசைதரும் | தும்பிக் | கையை |
| கூடு | என்றும் | கணபதி | அடியே |

- தயானி -

# உரிமை உண்டோ மாமா?

கழுகுச்சின்னம் தேர்ந்தெடுத்த மாமா — பண
மூட்டைக்குமேல் வீற்றிருக்கும் மாமா,
கொழுத்துமிகப் பெருத்திருக்கும் மாமா — அணுக்
குண்டுகளைக் குவித்திருக்கும் மாமா
முழுஉலகும் ஆட்டிவைக்கும் மாமா, — டொலர்
வட்டிக்கடை அமெரிக்கா மாமா,
துளிதுளியாய் சிதறிவிட்ட ரஷ்யா — உம்மைத்
தனித்தலைவர் ஆக்கியதே மாமா

பயங்கரவா திகள்என்று மாமா — இன்று
பட்டம்தந்து தடைசெய்தீர் மாமா
சுயநாடே செய்யாத தடையை — நீர்
தொலைவிருந்து செய்ததென்ன மாமா?
தயங்காமல் விடைசொல்லும் மாமா — கொஞ்சம்
சரித்திரத்தைப் புரட்டிப்பார்க்க லாமா?
சுயமைத் தனத்தினாலே மாமா — ஓர் இனம்
காலுக்குள் மிதிபட்ட போதும்

பாதிநூற்றாண்டுகால மாக — அவர்
பட்டுவிட்ட கொடுமைகளின் போதும்,
நீதிகேட்டுச் சென்றவேளை யெல்லாம் — கத்தி
துப்பாக்கி பதில்கிடைத்த போதும்,
வீதியெலாம் தமிழ்க்குருதி பாய — அவர்
வீடுவாசல் உடைமைகளும் இழந்து,
நாதியற்றுப் போட்டபெரும் ஓலம் உலக
நாடெல்லாம் கேட்டிருந்த போதும்,

ஒருவார்த்தை சொன்னீரோ மாமா? — கண்டும்
காணாதார் போல்இருந்தீர் மாமா
பெருந்தலைவர் நீர்ஒன்று சொன்னால் — அதற்கு
பெறுமதியொன் றிருந்திருக்கும் மாமா
கருங்கழுகு போல்இருந்தே மாமா — இப்போ
தடைச்சட்டம் கொண்டுவர லாமா?
உரிமை உமக்கிருக்கோ மாமா? — இதன்
உள்வார்த்தம் என்னதுதான் மாமா?

— அரியாலை சின்னையா துரைச்சாமி —

# ஹைக்கூ

'கூக் கூ' என்று கூவும்
குயிற் பாட்டுப் போல்
ஹைக் கூ.

★ ★ ★

தங்கு தடையின்றி
எங்கும் போய் வர
ஒரு தனி விமானம்
மனம்.

★ ★ ★

மழை விட்டதும்
மரம் சிந்தும் கண்ணீர்
வெள்ள நிவாரணம்.

★ ★ ★

பூமியைப் போல்
தலை சுற்றியது
சுற்றிவரக் கடன்காறர்.

★ ★ ★

அடியும் முடியும்
தேடிய போது
ஏன் மறைந்தது
வானவில்?

★ ★ ★

மழை பெய்ததும்விதம்விதமாய்
விற்பனைக்குக் குடைகள்
கற்பனைக்குக் காளான்கள்

★ ★ ★

உண்மை சொல்ல உலகில்
ஒருவருண்டு
டயரி.

க. நாகராசா —

# கவித்துவம்

சுயமாகச் சிந்திப்பவனை,
செழுந்தமிழில் செய்தபல
அரியகவி நூல்களை
ஆராய்பவனை,
இரசிக்கும் இதயம்
இருப்பவனை......
'தேடிவந்து' தழுவுகின்ற
தென்றல் அது!
அன்றி......
முற்றும் தெரிந்த
மேதாவியிடமோ,
புகழைத் தேடும்
புளுகரிடமோ,
கவியெழுதாக்
கலைஞரிடமோ
வேண்டிப் பெறுகின்ற
விலைச்சரக்கல்ல அது...!

- உடுவில்
அரவிந்தன் -

# சுதந்திரம்

சுதந்திரம் தேடும்
மானிடர்க்கு
புவியில்
எதற்குமே
சுதந்திரமில்லை.
உள்ளத்தில்
தோன்றுவதை
அப்பட்டமாக
அப்படியே
பேச,
எழுத,
உணர்ச்சிகளை
வெளிப்படுத்த
எதிலுமே.
இவற்றில்
சுதந்திரம்
பெற்றவனை
மற்றவர்
அழைக்கும்
பெயர்
''பைத்தியம்''

-வேலணைச்செல்வி-

# வீதித் தடைகள்!

வண்டுகளுக்கு எங்கள் தோட்டத்தில்
வந்தமர்ந்து, தேன் குடிக்க தடையில்லை!
கானக்குயிலும் கவிபாடிக்
கழித்திருக்க தடையில்லை!
வானம்பாடி பாட்டிசைத்து
வானில் செல்லத் தடையில்லை!
பச்சை வண்ண மயிலதுவும்
பறந்து தோகை விரித்தாட தடையில்லை!
கருமை நிறக் காக்கையாரும்
கரைந்து செய்தி கூறத் தடையில்லை!
புல்லறிவு படைத்த உயிர்கள் அனைத்திற்கும்
புதிதாய் தடையேதுமில்லை!
ஆறறிவு படைத்த எம் மனிதத்துக்கு மட்டும்
நூறு வீதித்தடைகள் ஏனோ?

-பகீன்

# ஓசிப் பேப்பர் படித்திடோம்!

பன்னாட்டுச் செய்திகளை வானொலியிற் கேட்டறிந்தும்
பலநிருபர் களின்துணையோ டிங்கவற்றைச் சேகரித்தும்
எந்நாளும் இரவுபக லின்றியியந் திரமியங்க
இயந்திரபோ லிவர்களுமே இரவுபகல் அயராது
இந்நாட்டு செய்திகளோ டுலகதனில் நடப்பதெலாம்
அச்செழுத்தில் மைதடவி யதைக்கோத்து அச்சடித்து
இந்நாளில் பத்திரிகை என்றுவெளி விடுவதிலே
எத்தனையோ சிரமங்கள் உள்ளதிதை அறிந்தனமே.

பத்திரிகைப் பணிசிரமம் பகலிரவெல் லாம்வேலை
பணியிதனைக்கண்விழித்தது பிழைகளிலாததைத்தொகுப்பர்
இத்தகையதொழிலிற்கு மூலவளப் பேப்பர்விலை
இருந்துமிதை வெளிவிடுவர் இங்குசிர மத்துடனே
பத்திரிகை யிதைநாளும் பார்த்திடவாங் குவதுமிலை
பார்த்திடுவோ மோசியிலே படித்தறிவ தெம்வழமை
இத்தவறால் பத்திரிகை பணிபாதிப் புற்றிடுமே
இனியுதயன் ஓசியிலே படித்திடுவ ததைவிடுவோம்.

இந்நாட்டு நிலைமையிலே இதுகடின மானபணி
இதில்லாபம் மிகக்குறைவு சிரமந்தான் மிக அதிகம்
இந்நாட்டு நடப்பறிய வேண்டுவதும் பத்திரிகை
இதன்மூல தனச்செலவிற் கேற்றவரு மானமில்லை
இந்நாட்டில் வெளிவந்த தெத்தனையோ பத்திரிகை
இவைமூடு விழாக்கண்ட திப்பொழுது இங்குதயன்
இந்நாட்டி லினி தியங்க ஆதரிக்க வேண்டுமிதை
இதும்மூடு விழாக்காணா தியங்கவைப்ப தெங்கடனே!

விலைகூட்டி விற்கும்நிலை வந்தாலும் ஆதரிப்போம்
விரைந்துவிலைப் பட்டதென நாம்வாங்கிப் படித்தறிவோம்
நிலைமையிதை நன்குணர்ந்து நாட்டிலிது தொடர்ந்துவர
நாம்பேப்பர் ஓசியிலே பார்த்திடுவ ததைக்குறைப்போம்
தலையங்கம் அதைப்பார்த்துத் தருகிறேன் எனவாங்கி
தினம்பெரிய எழுத்ததனை யேபார்த்து விசாமல்
விலைகூடி விட்டதென வாங்குவதைத் தவிர்க்காமல்
விற்பனையிற் சாதனையை எட்டவழி வகுப்போமே!

-ஆ. விநாயகமூர்த்தி.

# வஞ்சகம் இல்லா நெஞ்சகம் கொள்க!

வேசங்கள் போட்டு வெளுக்கு விளாசுகிறாய்
வேலவனே துணை என்று — திமிர்
மீசை முறுக்கியே நின்று — நிதம்
பூசுவதோ பொடி; பேசுவதோ வெடிப்
பொய்கள்; இதைவிட்டு என்று — நிசப்
புண்ணியம் செய்வியோ கண்டு?

எட்டுமுழப் பட்டு கட்டிப் பதக்கமும்
கட்டி, மணங்குணம் காட்டி — அவன்
வாசலுள் 'நாட்டாண்மை' நாட்டி — முதற்
தட்டிப் பறித்துமே 'கொம்புகள்' காவுவாய்
'கட்டியப் பொல்லின்' பின் நிற்பாய் — புகழ்
காட்ட... நடத்துகிறாய்; வெல்வாய்?

ஏழைச்சனம், கடைச் சாதிச்சனம் மனம்
வாடி யொதுங்கும் உன்னாலே — தடிப்
பாலே சிரிப்பாய் முன்னாலே — அட
பூசைக்கடிபிடி, பொட்டுக் கடிபிடி
பட்டு, ''ஜெயித்தன்'' என்றெண்ணும் — உனைப்
''பாவமென்றே'' வேலும் எண்ணும்!

கோவிலின் முன்னும் குதிரையின் பின்னுக்கும்
போவது நல்லதே அல்ல — என்ற
பொன்மொழி பொய்யல்ல அல்ல! — அவன்
காசினை அல்ல... கறையிலா 'உன்'வினை
கண்டமர் வானடா மெல்ல — அவன்
பாசாங்கை ஏற்பவன் அல்ல.

''இன்பமும் துன்பமும் வெற்றியும் தோல்வியும்
நன்மையும் தீமையும் கந்தன்'' — என்று
நம்பிவா... காப்பான் கடம்பன் — உந்தன்
நெஞ்சத்தைக் கேட்கிறான்! நேர்த்திக் கற்பூரங்கள்
உண்டியற் காசவன் கேட்கான் — உளம்
தா; அவன் பின் விடமாட்டான்.

உன்மனத்துக்கே முதலில் பதில் சொல்லு
உண்மையின் பக்கத்தில் நில்லு — விட்ட
பிழையை அவன் காதிற் சொல்லு! — தம்பி
மண்ணை ஏமாற்றலாம், மாட்டைப்பேய்க்காட்டலாம்
மனசையே மாற்றாதே வாழ்வில் — அந்த
மனமே குகன் உறை கோவில்;

- தேரடிச் சித்தர் -

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயத்தை வென்றவர்கள்!

## பகுதி II

ஏறுவதும் ஒய்வதும் ஆக நாள்கள் நகருகின்றன. உயரத்தைக் கணிப்பதும், வெப்பத்தை அறிவதும், நாள்களைக் குறிப்பதும் எனப் பல செயற்பாடுகள் சலிப்பையே உருகின்றன. குழுவில் உள்ள அனைவராலும் சரிவர ஏற இயலுவதில்லை. கடைசி ஆளையும் கொண்டு ஏறும்வரை திடிப்பானவர் கூட காத்துநிற்க வேண்டிய நிலைமை விரக்தியைத் தருகிறது.

ஏப்ரல் 28 அன்று இரவு ஹோல் அணியினர் 24 ஆயிரம் அடி உயரத்தில் இருந்த மூன்றாவது முகாமில் தங்கிக்கொண்டனர். குன்றுகளில் ஏறி, பின் இறங்கி, மீண்டும் அடுத்த குன்றில் ஏறி, மீண்டும் இறங்கும் சலிப்பான பயணங்கள் மனதினை உற்சாகப் படுத்துவமல் சிரமப்பட்டவர்கள் சிலர் —வீட்டுக் குளிரையே சமாளிக்க மாட்டாமல் அவதிப் படுபவர்கள் சிலர்—விரைவில் களைத்த நிலைமைக்கு ஈடுகொடுக்கவும் முடியாமல் ஏறவும் முடியாமல் இறங்கவும் இயலாமல் திண்டாடும் சிலர்—பலவித நோய்களும் வெளிக்காட்டும் நிலையில் தவிக்கும் சிலர்—இப்படிப் பலரை இறுதிமுகாம் மட்டத்துக்கு கொண்டுவர ஹோல் பட்டுவிட்ட பாடு கொஞ்ச நஞ்சம் அல்ல.

### இறுதி முகாமில் ஒய்வு

26 ஆயிரம் அடி உயரத்தில் இருந்த அந்த இறுதி முகாமில் இரண்டொரு நாள்கள் ஓய்வு எடுத்து அச்சூழலைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இதில் இருந்து உச்சிக்கு ஏறும் மூவாயிரம் அடிகளும் மிகவும் சிக்கல் ஆனவை. ஏறி இறங்கப்

மாட்டுப்பட்டவர்களையோ, கீழ்ப் படியாதவர்களையோ, போராடிக் காப்பாற்ற இயலாதபோது கைவிட்டு மீள வேண்டி ஏற்படலாம். சறுக்கிப் பாதாளத்தில் விழுபவர்

ஏறத் தொடங்குகிறான்.

இப்போது ஒட்சிசன் சிலிண்டர்களை நம்பிய சுவாசம் சற்றுத் தெம்பைத் தருகிறது. ஏறிக் கொண்டிருக்கும்போது வெண்ணெய் திரளும் நேரம்

## உயிரைப் பணயம் வைத்து உலகின் உச்சிக்குப் பயணம்

உறக்கம் இல்லாத களைப்பு. எவருமே எதுவும் பேசவில்லை. ஏறும் இயந்திரங்களாக மனிதர்கள். நள்ளிரவிலும் இருளைத் துழாவிய படி கயிற்றுவழியே ஏறிக்கொண்டிருந்தது ஹோல் அணி. இனி இரவு ஓய்வு என்ற பேச்சே இல்லை. விடிந்த பின் உச்சியை எட்டிவிடல் வேண்டும். ஆம் நாளை விடிந்தால் அந்த மே 10 ஆகிவிடும்.

வானத்தை நட்சத்திரங்கள் நிறைத்து இருந்தன. அரைக்கோள வடிவாக வானம் பொலிந்து தெரிந்தது. காட்சி மனதை அள்ளினாலும் ரசிக்கத்தெம்பு நிறையவே தேவைப்பட்டது.

ஹோல் அணியினரை கலவரப்படுத்தும் வகையில், பிறி

> உச்சியில் காற்றுப்பலமாக இருந்தது. அங்கு நாட்டப்பட்ட சில கொடிகளை காற்றுப் பிடுங்கிக் கொண்டிருந்தது. இல்லாவிட்டால் அந்த இடம் கொடிகளால் நிரம்பி இருக்குமாம்.

தில்லை. குழுக்களாக செயற்பட்டாலும் ஏறும்போது நீண்டநேரம் அவரவர் தனித்தனியேதான் இயங்குகிறார்கள், ஆளோடு ஆள் தொடர்பு கொள்வது இடைவழியில் சிரமமாகவே இருக்கிறது. இக்கட்டான இடங்கள் சந்திக்கும்போது தடங்கல்கள் ஏற்படுவதால் வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த பலரும் ஆங்காங்கே குவிந்து விடுகின்றனர். இதனால் சமாளிக்க முடியாத நெரிசல்கள் ஏற்படுதல் உண்டு. இப்படியான இடங்களில் ஒருவர் தடுமாறினால் பலரும் ஆபத்தைச் சந்திக்க வேண்டி ஏற்படலாம்.

மேலே ஏறஏற ஒட்சிசன் செறிவு குறைந்து கொண்டு வருதலும் — குளிரும் பனிப்புகாரும் அதிகரித்து வருதலும் — மூச்சு விடுதலில் சிரமமான நிலைமைகளைத் தோற்றுவித்தன. அடித்தள முகாமிலேயே ஒட்சிசன் பற்றாக்குறையை உணர்ந்தவர்கள் மேலே வர வர அது பரவாயில்லையே என்றநிலைமையை இப்போது உணர்கிறார்கள். இன்னும் சிலிண்டர்களைப் பாவிக்கவேண்டிய கட்டத்தை எட்டவில்லை என்பது தான் ஹோலின் வாதம்.

மேலே வளி அடர்த்தி குறைவாக இருப்பதனால் வேகமாகச் சுவாசிக்க வேண்டிய நிலைமை. இதனால் உடல் விரைவில் களைத்து விடுகிறது. இருமல் வாட்டத் தொடங்குகிறது. பனிப்புகாரையே உள் இழுத்து சுவாசித்து வெளியிட வேண்டிய நிலைமை. ஒவ்வொரு முறை இருமல் உலுப்பும் போதும் விலா எலும்புகள் கொழுவி பின் விடுபடுகின்றன போன்ற உணர்வு. நெஞ்சறைக்கூடு நொருங்கி விடுமா என்ற அச்சம் இப்போதே ஒட்சிசன் சிலிண்டர்களை பாவிக்கத்தொடங்குவதனால் இத்தனை பேருக்கும் எத்தனை சிலிண்டர்கள் மேலே தேவைப்படும்...? அதுவும் கூட சாத்தியம் அற்றதே.

குளிர்ந்து விறைத்த பாதங்களைச் சப்பாத்துக்கள் பதம் பார்த்ததால் நடக்க முடியா

பல நாள்கள் பிடிக்கும். ஒட்சிசன் சிலிண்டர் உட்பட தேவையான எல்லாவற்றையும் அவரவர் சுமந்துசெல்ல வேண்டும். ஏதாவது பிழைத்தால் பனிப்பாறைபோல விறைத்து விடுவதே ஒரே வழி; விதி.

அந்த முகாமை அடைந்து விட்ட பல்வேறு குழுக்களும் தாம் ஏறவேண்டிய ஒழுங்குகளையும் நேரக்கட்டுப் பாடுகளையும் பேசித் தீர்த்துக் கொண்டனர். ஹோலிற்கு ராசியான நாள் மே மாதம் 10 ஆம் திகதி என்பது சகல குழுத்தலைவர்களுக்கும் தெரியும். அவன் ஏற்கனவே இருதடவைகள் மே 10 இல்தான் உச்சியை அடைந்திருக்கிறான். எந்தத் தடவையும் யாரையும் பலிகொடுக்காத வரலாறும் அவனுக்குண்டு.

பலரும் அவனிடமே ஆலோசனை கேட்கும் அளவுக்கு வழிகாட்டிகள் பலருள்ளும்

> கடும் குளிரில் மூளைச் செயற்பாடுகள் விறைத்துப் போகும்; சில மூளைக் கலங்கள் இறக்கலாம்; இரத்தம் தடித்து ஓட வழியின்றி இறுகலாம். எனவே செயற்பட்டபடி இருக்க வேண்டும். ஓய்ந்தால் நிரந்தர ஓய்வு தான்!

அவன் அனுபவம் மிக்கவனாகவே தென்பட்டான். புகாரைத் துழாவித் துழாவி காலநிலை மாற்றங்களை கண்டறிந்தும் எதிர்வு கூறியும் நிலைமைகளை சமாளிப்பதில் அவனுக்கு நிகர் அவனேதான்.

இனி ஹோலின் உத்தரவுகள் கண்டிப்பானவையாக இருக்கும். உச்சியை எட்டும் தறுவாயிலும் அவன் திரும்பச் சொல்லி கட்டளை இடலாம். காலநிலை கை கொடுக்க மறுக்கலாம். மீண்டும் அடித்தளம் திரும்ப வேண்டிய அவசியத்தையும் செய்யவேண்டி ஏற்படலாம். நோயுற்று

களின் கதிபற்றிச் சொல்லவே தேவையில்லை.

### இமயம் என்னும் நரகம்

காலையென்ன — மாலையென்ன — இரவென்ன — பகலென்ன — எப்போதும் ஒரே மாதிரிதான். குளிர் குளிர்தான். அதற்கு வேறு ஏதாவது புதிய பெயர் கொடுக்கலாம். அத்தனை குளிர். இதுவா இமயம்? இதுவா சொர்க்கம்? இல்லை. இது தேடி வந்த நரகம் போலும்! இந்தக் கட்டத்தில் சலிக்காதவர் மனிதப் பிறவியே அல்லர்.

காலநிலை சாத்தியமான தாகப் படவில்லை என்றான் ஹோல். 10 ஆம் திகதி பகல் 2 00 மணிக்குப் பின் எவரும் உச்சியை எட்ட இயலாது. அதற்கு முன் சென்று திரும்பி விடல் வேண்டும் என்ற அவனது அனுபவ அறிவிப்பு ஏக்கத்தைத் தராமலா விடும்?

எப்படியும் இந்த முதற் பயணத்திலேயே உச்சியை எட்டிவிடல் வேண்டும். இதுவே இறுதி முயற்சியும் கூட என நினைத்துக்கொண்டான் கிறகோர்.

ஒவ்வொரு குழுவினரும் தத்தமது கணிப்புகளுக்கேற்ப திகதி குறித்து உச்சியை அடையத் தீர்மானித்தனர். இதில் எவரின் அனுபவம் வெல்லுமோ? இயற்கை என்னவாகுமோ என்ற மனப்பயம் இல்லாமலா போகும்?

தலைக்கு மேலே சுமார் 2 மைல் நேர் மேல்மட்டத்தில் எவரெஸ்ட் சிகரம் இருக்கிறதாம். அது ஏதோ இரண்டாயிரம் மைல்கள் தொலைவில் இருப்பதான உணர்வு.

மே மாதம் 6ஆம் திகதி அதிகாலை 4-30 மணியளவில் ஹோல் அணியினர் தமது உச்சக்கட்ட எவரெஸ்ட் 'தாக்குதலை' ஆரம்பிக்கின்றனர். புறப்பட்டது படை. 'இதில் எஞ்சுவது வாழ்வா சாவா என்றநிலைமைதான்''

அண்டி ஹரிஸ் — துள்ளித் துள்ளி மலையேறத் துணிந்தாலும் — சோம்பிச் சோம்பி இழுபட்டு ஏறும் 'கடைசி பஸ்களை' கரையேற்றும் கடமையே அவனுக்கு இதுவரை ஹோலினால் கொடுக்கப்பட்டு இருந்தது. இந்தப் பொறுமைக்குப் பரிசாக இப் [illegible] அணியில் முதல் [illegible] அவன்

தாழி உடைந்த கதை ஆகிவிடலாமா?

### ஓய்ந்தால் நிரந்தர ஓய்வுதான்

ஒரு கல் உருண்டை உயரத்தில் இருந்து வந்து முன்



எவரெஸ்ட் உச்சியைஎட்டுவது என்பது மரணப் பொறிக்குள் போய் வருவது போன்றது.

ணியில் ஏறும் அண்டியினை பதம் பார்த்து விட்டது. அதன் அளவு ஒரு டென்னிஸ் பந்து போல இருக்கும். அண்டி கால் இடறி கயிற்றை மட்டும் பற்றியபடி தொங்கிக் கொண்டான். அவனை முகாமுக்கு இறக்கி வந்து சிகிச்சை வழங்க வேண்டிய இக்கட்டான நிலைமை. இது தான் பயணத்தின் முதல் அடி எனலாம்.

கடும் குளிரில் மூளைச் செயற்பாடுகள் விறைத்துப் போய் — சில மூளைக் கலங்கள் இறக்கலாம் — இரத்தம் தடித்து ஓட வழியின்றி இறுகலாம் — எனவே செயற்பட்டபடி இருக்க வேண்டும் என்றான் ஹோல். ஓய்ந்தால் நிரந்தர ஓய்வுதான்.

கீழே தாய்வான் குழு ஒன்றின் முகாமில் உறங்கிக் கொண்டிருந்த ஒருவர் உருண்டு சறுக்கிப் பனிப்படை வழுக்கி பாதாளத்தில் விழுந்துவிட்ட சேதி வந்தது. ஷேபாஸ் ஆட்கள் மீட்ட போதும் அவர் மரணித்தது அனைவரையும் கலங்கடித்தது.

50 நொட் (Knot) வேகத்தில் வீசும் பனிக்காற்று முகாம் கூடாரங்களை விட்டு வைக்கவில்லை. எவருக்குமே

தோர் அணி ஏறும் முயற்சியை இறுதி நேரத்திலே கைவிட்டு முகாமுக்கு இறங்கிக் கொண்டிருந்தது ஏக்கத்தை மென்மேலும் தூண்டியது. ஆனால் ஹோலின் உத்தரவுகளில் மாற்றம் இல்லாததால் அவர்கள் தொடர்ந்தும் ஏறிக் கொண்டிருந்தனர்.

**- மு. சிவநேசன் -**

சென்ற தடவை ஹோலுடன் ஏறியும் அவனின் உத்தரவின் பேரில் 300 அடிகளால் உச்சியைக் கோட்டைவிட்ட ஹான்சென் இம்முறை தானாகவே திரும்பப் போவதாக அடம்பிடித்தது ஹோலுக்கு மேலும் தலைவலியைத் தந்தது. அவனைச் சமாதானப்படுத்தி ஏற வைக்க ஹோல்பட்டது போதும். மீண்டும் மிக மெதுவாக ஹான்சென் ஏறத் தொடங்கிவிட்டான்.

ஒவ்வொருவரும் சுமார் 100 அடி தூரத்துக்குள் இருக்க வேண்டும் என்ற ஹோலின் அறிவிப்பு கிரகோருக்கும் வேகமாக ஏறும் ஏனையோருக்கும் பெரும் தலைவலியைத் தந்தது. ஏற மாட்டாமல் திணறுபவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் யாழ்ப்பாணம்

# மனித மாடு

அவனுக்கு எழுபத்தைந்து வயது இருக்கும். எனது பாட்டனாரின் வயசு. அவனுக்குள்ள கூன் முதுகு, வெண்தலை, ஒல்லித்தேகம், தளர்ச்சி எல்லாம் அவனிடமும் காணப்பட்டன. தெருவோரமாக ஒரு வயதுபோன பூவரசின் கீழ் "ரிக்சோ"வும் கையுமாக நின்றான். தெருவில் போகும் 'மகாராஜா'க்களின் வண்டிகளும் வாகனங்களும் கிளப்பிய புழுதியைக் குடித்துக்கொண்டு, வருகிறவர் போகிறவர்களின் முகத்தை அண்ணாந்து பார்த்தபடி அவன் நின்றான்.

தெருவோரம் போய்க்கொண்டிருந்தேன். கிழவனின் ஒளி மங்கிய கண்கள் என்னையும் தப்பவிடவில்லை. எனக்கும் ஒரு ஆவர்த்தனம் அழுதுவைத்தான். "சாமி, ஏறுங்கசாமி. உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்சாமி. பிள்ளை குட்டிகள் இரண்டு நாளாகப் பட்டினி சாமி, நீங்கள் எல்லாம் இப்படி நடக்க ஆரம்பித்தால் நாங்கள் போகும் கதி என்னவோ சாமி?"

எனக்கு வயசு இருபது. அவனுக்கு எழுபத்தைந்து.

கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். படம் ஆரம்பிக்க இன்னும் ஒருமணி நேரம் இருந்தது. மூன்று மைல் போக வேண்டும். நடந்து போவது என்றால் முடியாத காரியம்.

"சரி சினிமாக் கொட்டகைக்குப் போக என்ன கேட்கிறாய்?"

ஒட்டி உலர்ந்த அவன் முகத்தில் ஒரு பிரகாசம் உண்டாயிற்று. "ஐயோ சாமி! உங்களிடம் எல்லாம் கூலி பேசுவதா? புண்ணியவான்கள் மனமிரங்கி ஏதோ கொடுத்ததை வாங்குகிறேன்.."

அவனுடைய வயதில் பாதி அந்த வண்டிக்கும் இருக்கும். அப்பழுக்கற்ற முதல்தர கர்நாடகம். ஆனால் எனக்கு, இருபது வயசுக் குமரனுக்கு மூன்று மைல் நடந்து போவதற்கு இந்தக் கிழட்டுக் கர்நாடக ஜோடியின் உதவி தானே வேண்டியிருந்தது!

இரண்டு நாளாகப் பட்டினி கிடந்த குடுகுடு கிழவன் மேல் அவனுடைய வலியிழந்த தேகத்தில் 'ரிக்ஷோ' ஏறியது. ரிக்ஷோவின்மேல் நான் ஏறினேன், கலப்பையில் பூட்டிய மாடுபோல அவன் ஒடுங்கி நின்றான். சவாரி ஆரம்பமாயிற்று. ஆகா! எத்தனை உல்லாசத்தோடு, பெருமிதத்தோடு உட்கார்ந்திருந்தேன் அப்போது. ஆமாம், அந்த எழுபத்தைந்து வயதுக் கிழவன் மேல்!

பட்டினிக் களை. வீட்டில் அவனுடைய அன்றைய சம்பாத்தியத்தை எதிர்பார்த்துக் கிடக்கும் நாலைந்து ஏழைச் சீவன்களைப் பற்றிய கவலை. நான் என்ன கொடுப்பேனோ என்ற ஏக்கம் — எல்லாம் சேர்ந்து கிழவனுக்குப் பெரும் யோசனையையும் சோர்வையும் கொடுத்திருக்க வேண்டும். வண்டி மெள்ளமாக ஊர்ந்து சென்றது.

'ஆமாம், இந்த ஞானோதயம் எல்லாம் அப்போது எங்கே போயிருந்தனவோ? அடடா எவ்வளவு குரூரப் பிராணியாக, சவுஇரக்கமற்ற மிருகமாக மாறியிருந்தேன் அன்றைக்கு!'

மாட்டுக்கும் 'மெஷினுக்கும் விலகி விலகி மனித வண்டி போய்க்கொண்டிருந்தது. குறுக்கும் மறுக்குமாக ஓடித்திரியும் இயந்திர பூதங்களுக்கூடாக — அந்த உணர்வற்ற சடலங்களில் ஒன்றாக மனிதன்—பகுத்தறிவுள்ள மனிதன் — நாகரிகமடைந்த மனிதன்—'பெறற்கரிய மனிதப்பிறவி' போய்க்கொண்டிருந்தது. சவாரி சுகப்படவில்லை. வயதுபோன கிழட்டுமாடு ஊர்ந்து ஊர்ந்து போயிற்று. அக்கம் பக்கத்தில் எல்லாம் வேகம் வேகமாகப் பறந்து கொண்டிருந்தன. போகும்போது என் மேல், என் வண்டியின்மேல் ஓர் ஏளனப் புன்னகை. ஐயோ, என் மானம் போயிற்று! இரண்டு மைல் கடந்து வந்துவிட்டோம்.

"என்னப்பா, வண்டிச் சக்கரங்களில் கறையான் பிடிக்கப்போகிறது!" என்றேன் சற்று உரமாக, கோபமும் ஏளனமும் கலந்த இந்த அதிகாரத் தொனியில் அந்த மனிதன் எவ்வளவு மிரண்டு போய்விட்டான்! நாகரிகத்தையும் கொஞ்சம் நகைச்சுவையையும் அனுசரித்து இந்த வார்த்தையைச் சொல்லிவிட்டேன். 'எவ்வளவு விபரீதமாக முடிந்து விட்டது!'

ஒன்று ஆட்டி வைத்தது. அவன் தன் உயிரை வெறுத்து ஓடினான். கிழவனும் 'ரிக்ஷோ'வும் நானும் அடுத்த நிமிஷம் சுக்கு நூறாகப் போய் விடக்கூடும். ஆனால், இவை ஒன்றுக்கும் நான் தயாராகவில்லை. சினிமா பார்க்க வேண்டுமே! மனதில் கலவரம் தொட்டு விட்டது, தன்னை மறந்து தொழில் செய்யும் கிழவனைப் பார்த்து, "என்னப்பா! வண்டிச் சக்கரங்களில் கறையான் பிடிக்கப் போகிறது!" என்று கூறிய அதே திருவாயினால் "கொஞ்சம் நிதானமாகப் போ அப்பா" என்றேன்.

புகைப்படலம் எழும்புவதற்கும், எச்சில் துப்புவதற்குமாக ஒரு ரூபா வரை மேலதிகமாகப் பையில் கிடந்தது. உயிரும், உடலும் தேய்ந்து போக என்னைச் சுமந்து வந்த கிழவனுக்குக் கால் ரூபாவிற்கு மேல் கொடுப்பதற்கு இந்த மனம் இசையவில்லை. அவன் திரும்பிப் போகும் போது பார்த்தேன். சுகமாக மூச்சுவிடக்கூட முடியாமல் மிகவும் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தான். ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்தான். இவற்றையெல்லாம் பார்த்து ரசிப்பதற்கு அவகாசம் ஏது?

ஈழத்தின் மூத்த எழுத்தாளரும் பத்திரிகையாளருமான அளவெட்டி செல்லக்கண்ணு முருகானந்தம் (அ. செ. மு.) அண்மையில் தமது 73 ஆவது வயதில் காலமானார்.

நீண்டகாலப் பத்திரிகைத்துறை அனுபவம் மிக்கவரான அ. செ.மு. நூற்றுக் கணக்கான சிறுகதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சிலகாலம் 'எரிமலை' என்ற பத்திரிகையையும் நடத்தினார்.

நவீன தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்காலம் எனக் கருதப்படும் 1940 ஆம் ஆண்டுகளில் தோன்றிய நவீன தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடிகளில் அ. செ. மு. வும் ஒருவர்.

வாழ்வில் வறுமையுடனும், தனிமையுடனும் கடைசிவரை போராடி வந்த அவர் தமது அந்திம காலத்தின் பெரும் பகுதியை வயோதிபர் இல்லங்களிலேயே கழிக்க நேர்ந்தது.

அவரது நினைவாக "மனித மாடு" என்ற அவரது சிறுகதை இவ்வார சஞ்சீவியில் மறுபிரசுரமாகிறது.

25 - 04 - 1948 இல் ஈழகேசரி பத்திரிகையில் வெளியான இச் சிறுகதை 1986 இல் யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையின் இலக்கியக் குழுவினால் வெளியிடப்பட்ட அ. செ. முருகானந்தத்தின் சிறு கதைத் தொகுதி நூலிலும் இடம்பெற்றுள்ளது.

(ஆ-ர்)

சஞ்சீவி சிறுகதை

மனிதனுக்குக் கழிவிரக்கம், பச்சாத்தாபம் எல்லாம் அவன் அதர்மத்தின் ஓர் எல்லையைத் தாண்டிய பிறகுதான்!

தலையைக் கீழே போட்டுக்கொண்டு தனது எலும்புக் கோவையினால் சுமார் 'இருநூறு இறாத்தல்' பாரத்தை இழுத்துக்கொண்டு ஓடிய கிழவன் நான் சொன்னதைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தான்.

அந்த முகம்தான் அச்சமயம் எப்படி மாறிவிட்டது! எவ்வளவு கெஞ்சிற்று! எனக்கு அப்போதுதான் அறிவு வந்ததா? 'ரிக்ஷோ'வை விட்டுக் குதித்து ஓடிப்போய் அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டேனா? அல்லது அவனைத் தூக்கி "ரிக்ஷோ'வில் வைத்து என்தேகம் ஒடியும்படி இழுத்துக்கொண்டு ஓடினேனோ? கற்றூணைப்போல அசையாமல் இருந்தேன்.

## அ. செ. முருகானந்தம்

அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் சோறு கொடுக்கும் 'ரிக்ஷோ'வைப் பற்றி இழிவாகக் கூறியது கிழவன் மனத்தில் 'சுருக்'கென்று தைத்துவிட்டது. அந்த ரோசத்துடன் நான் எங்கே இடையில் இறங்கிப் போய் விடுகிறேனோ என்ற அச்சமும் சேர்ந்து கொண்டது.

வண்டி ஒருதரம் குலுங்கி எழுந்தது. அடுத்த கணம் மாயாசக்தி பெற்று அது பறக்கத் தொடங்கிற்று. எழுபத்தைந்து வயசுக் கிழவனுக்கு இந்த ஆவேசம் திடீரென்று எங்கிருந்து வந்துவிட்டது! தூக்கிய கால்கள் நிலத்தில் படாமல் விலா எலும்புகள் வெளியே தெறித்துவிடும் போல் இரைக்க இரைக்கத் தலையும் காலும் ஒன்றாகக் கூனிக் குறுக, மனுஷன் தாவித்தாவி ஓடத் தொடங்கி விட்டான். தெருவில் போகும் 'சோடி' வண்டிக்காரர்கள் கிழவனையும் 'ரிக்ஷோ'வையும் பார்த்துப் பிரமித்துப் போனார்கள்.

எழுபத்தைந்து வயசுக் கிழம். இருநூறு இறாத்தல் பாரத்தோடு அடடா, என்ன ஓட்டம் ஓடுகிறது! [illegible] சமயம் கிழவனை என்னவோ

நேரத்துக்கொரு குணம், சமயத்துக்கொரு பேச்சு, இப்படியாக நான் மாறிக்கொண்டிருந்தேனா? ஆனால் கிழவனோ மகா ரோசக்காரன், பிடிவாதக்காரன்; எடுத்த காரியத்தை எப்படியும் முடித்துவிடும் மனத்திடமுள்ளவன். நான் கூறியதைக் கொஞ்சமும் மனதில் போட்டுக்கொள்ளாமல் தான் ஆரம்பித்த அதே வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தான். படம் ஆரம்பிக்க கால்மணி இருக்க என்னை அங்கு கொண்டு போய்ச் சேர்த்து விட்டான்.

'ரிக்ஷோ'வில் இருந்து இறங்கிச் சட்டைப் பையிலிருந்து கால் ரூபாவை எடுத்து அவன் கையில் வைத்தேன். ரிக்ஷோவின் கைப்பிடிகளைப் பிடித்துப் பிடித்து மரத்துப் போன அந்தக் கைகளை ஒன்றன்மேல் ஒன்று வைத்து குருக்களிடம் விபூதிப் பிரசாதம் வாங்குவது போல, மரியாதையாக வாங்கி [illegible] கொண்டு [illegible]

தியேட்டரில் மணி அடித்தது.

ஒரு ரூபா கொடுத்து உள்ளே போய்க் கதிரையில் உட்கார்ந்து கனவு காண ஆரம்பித்தேன். மூன்று நாலு மணி நேரம் நீடித்த கனவு! 'ரிக்ஷோ'வையும் கிழவனையும் ஏன் வெளியுலகத்தையுமே மறந்து கனவு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்துவிட்டு இரவு சுமார் பத்து மணியளவில் நிஜ உலகத்துக்கு வெளியேறித் தெருவழியே திரும்பி வந்துகொண்டிருந்தேன். ஆமாம், கால் நடையில் தான்.

சினிமாக் கொட்டகையிலிருந்து அரை மைல் தூரத்தில் ஒரு சாவடி, மிகவும் பழைய காலத்தியது. மனித வாழ்க்கையின் ஓட்டைகளைப்பற்றி அதனிடம் கேட்டால் அது நன்றாகச் சொல்லும். அந்த விஷயத்தில் அவ்வளவு அநுபவம் அதற்கு!

அந்தச் சாவடிப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தேன். அதற்குப் பக்கத்தில் தெருவோரமாக ஒரு சிறு சனக்கூட்டம் தென்பட்டது. சிறிது தூரத்தில் எரிந்து கொண்டிருந்த நகரசபை வெளிச்சத்தில் அந்தச் சனக்கும்பல். நடுவே எதையோ வைத்து விட்டுச் சுற்றி நிற்பதுபோல் மங்கலாகத் தெரிந்தது.

சனக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே தலையை நீட்டிப் பார்த்தேன்,

ஒரு கிழவனுடைய பிரேதம். அதற்குப் பக்கத்தில் 'ரிக்ஷோ' ஒன்று சரிந்து கிடந்தது. பிரேதத்தின் வாயிலிருந்து ரத்தம் வடிந்து காய்ந்து போயிருந்தது.

அன்று மாலை நான் ஏறி வந்த அதே 'ரிக்ஷோ'வும் கிழவனும்!

கிழவனுடைய உடல், 'ரிக்ஷோ', சுற்றி நின்ற சனக்கூட்டம் எல்லாம் சுழல ஆரம்பித்தன.

அப்படியே உட்கார்ந்து விட்டேன். பகவானே! அவன் உயிரைக் குடித்த பழி கடைசியில் என் தலையில் தான் பொறுக்க வேண்டுமா?

சனங்கள் வந்தார்கள், வந்து கூட்டமாக நின்று பார்த்தார்கள், பார்த்து விட்டுப் போனார்கள்.

மனிதனைச் சுமந்து திரிந்த மனித தேகம் தெருவில் புரண்டுபோய்க் கிடந்தது.

அதன்மேல் ஏறித்திரிந்து சவாரி செய்தவர்கள் வந்தார்கள். நின்று பார்த்தார்கள். பார்த்துவிட்டுப் போனார்கள். ★

# தூண்கள்

எங்களுக்கு எல்லாம் தெரியும்..
நாங்கள் கற்றவர்கள்!
எங்களுக்கு எல்லாம் தெரியும்.
நாங்கள் வழிகாட்டிகள்!
புதுமைகள் எங்கள்
எல்லைக்குள்தான்
ஊற்றெடுக்கும்!
புரியாது உங்களுக்கு.
ஏனெனில்,
எங்கள் எல்லைக்குள்
எட்டிப் பார்க்க
தகுதியற்ற மொக்கர்கள்.
அதனால் நாங்கள்
புத்திசாலிகள்!

ஜனநாயகம் எங்களிடம்
ஜனநாயகம் கற்றது,
ஜன்னல் கண்ணாடி 'கலீர்'
என்றது,
உரிமையை நாங்கள்
உச்சமாய் பாவிப்போம்!
உருட்டிப் புரட்டி
உருத் தெரியாமல்!

மனித உரிமையில்
எங்கள் இடம்
மகத்தான சாதனை!
புதிதாய் வருவோர்க்கு
எல்லாம் புகுத்தப்படும்
எங்கள் எல்லைக்குள்
நாங்கள்
படித்தவர்கள்!

எந்த மடையன்
சொன்னான்
தடிமனுக்கும், தலையிடிக்கும்
மட்டுமே 'விக்ஸ்' என்று?

வெந்நீர்
வெதுப்பும்!
வேதனை பெருக்கும்!
துடிக்கும்
துவளும்
எங்கள் அறையில்
செய்முறை ஊடே
செயற்படுத்தப்படும்...
வேகும்!
வெதும்பும்!!
நாளம் தெரியும்!!!

அளவுகள், நிறங்கள்
மறந்து போவதால்
கேட்போம் அடிக்கடி...
மீட்டல் செய்ய
இதுவும் ஒரு வழி!
புரியாது உங்களுக்கு
படித்தவர் நாங்கள்!
பின்
படிப்பிப்பவர் நாங்கள்!
மறந்து விடாதீர்கள்
படிப்பிப்பவர்களும்
நாங்கள்
தூண்கள்!

- கரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயன்று பாருங்கள்!

1. கீழ்வரும் 9 வினாக்களுக்குமான விடைகள் இந்த இடத்தின் பெயரில் ஒளிந்துள்ளன. முயன்றுபாருங்கள் பார்க்கலாம்.

கல்வியங்காடு

1. கற்பது இதனை.
2. விலங்குகளின் வாழ்விடம்.
3. திடமான ஒரு பொருள்; தற்கால ஆயுதமும் கூட.
4. ஒரு வகை மீன்.
5. மனித அவயவங்களில் ஒன்று.
6. இந்த வித்தையில் அர்ஜுனன் திறமைசாலி.
7. குரங்குக்கு மறு பெயர்.
8. கவருக்குப் பூசுவது.
9. புலவர்கள் பாடுவது.

(XI ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு:- ந. தனுஷன்,
(கல்வியங்காடு)

# உள் வீட்டுச் சண்டை

தீக்குச்சுக்கும் தீப் பெட்டிக்கும் இடையில் ஒரு முறை பலத்த வாதப்பிரதிவாதம் நிகழ்ந்தது.

தீக்குச்சு தான் இருக்கும் பெட்டியைப் பார்த்து "எங்களைப் பாதுகாப்பது போல் பாசாங்கு காட்டி எங்கள் எல்லோரையும் அழிப்பதற்கு வழி வகுக்கின்றாயே? நீ செய்வது நியாயமா?" — என்று கேட்டது.

இதைக் கேட்ட தீப்பெட்டி குமுறத் தொடங்கியது. "நான் எந்த வித சுய நலமும் இல்லாமல் உங்களைப் பாதுகாக்கின்றேன். ஆனால் நீங்களோ என்னுடைய தயவில் இருந்து கொண்டே என்னுடன் நித்தம் உரசிக் கொண்டே இருக்கிறீர்கள். யார் செய்வது நியாயம்? அநியாயம்?"—எனக் கேட்டது தீப்பெட்டி.

தீக்குச்சுக்கு கோபம், கோபமாக வந்தது. என்றாலும் சற்றுப் பொறுமையுடனும் சமாதானமாகவும் பேச முற்பட்டது. "நண்பரே! நீர் சொல்வது போல் நாங்கள் உனக்குத் துரோகம் செய்யாமலும், நாங்கள் அழியாமலும் இருப்பதற்கு என்ன வழியைக் கையாளலாம்?" — என்று வினாவியது தீக்குச்சு.

தீப்பெட்டியோ ஏளனமாக "நீங்கள் ஒரே தலைக்கனக்காரர்கள். உங்களின் தலைக்கனம் இருக்கும் வரை உங்கள் அழிவைத் தவிர்க்க முடியாது." — என்றது.

விட்டுக் கொடுக்காமல் தீக்குச்சும் "நாங்கள் அழியலாம், கவலைப்படவில்லை. ஒன்று மட்டும் சொல்லுகிறோம். நாங்கள் இருப்பதனால்தான் உமக்கு பெருமையும், மதிப்பும். நாங்கள் அழிந்தால், நீரும் குப்பையில் வீசப்படுவீர் என்பதை மறந்து விடாதீர்!" என்றது.

- ஹம்சாஜி சிவராஜா
(ஆண்டு 4, ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம்.)




# வானிற் பறக்கும் பறவைகள்

வானிற் பறக்கும் பறவைகள் பார்!
வகை வகையான பறவைகள் பார்!
தேனின் சிட்டுக் காகங் கிளி
திரிந்து திரிந்து பறக்குது பார்!


'கூ கூ' என்றே குயில் கூவும்
குயிலுடன் நாமும் கூவிடுவோம்.
ஆகா அழகாய் மயில் ஆடும்
அதனுடன் நாமும் ஆடிடுவோம்.

பச்சைக் கிளியைப் பார்த்திடுவோம்.
பறக்கும் போதே கீச்சிடுதே!
இச்சையாகச் சேவலதும்
என்றும் காலையில் கூவிடுமே!

மரத்தைக் கொத்தும் குருவியைப் பார்!
மரங்கொத்தியென நாம் அழைப்போம்!
அரத்தின் கூர்மை அலகுகளால்
அவை மரங்களையே கொத்திடுமே!

ச. செல்வவினாயகம்
(ஆண்டு 4, கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.)

# வார்த்தை விளையாட்டு




சிறுவர், சிறுமியரே!......இது ஒரு புதுமையான வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படி வேண்டுமானாலும் எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது முப்பது வார்த்தைகளாவது உங்களால் உருவாக்கமுடியுமா என்று பாருங்கள்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

# இயலுமா?

I.




II.




மேலேயும் கீழேயும் உள்ள இரு படங்களுக்கும் இடையில் குறைந்த பட்சம் ஏழு வித்தியாசங்கள் உள்ளன. உங்களால் கண்டுபிடிக்க இயலுமா பாருங்கள்!

(விடை XI ஆம் பக்கத்தில்)




# கண்டுபிடியுங்கள்!

I.





மேலேயுள்ள படத்தில் வட்டத்திற்குள் உள்ள வடிவத்தை ஒத்த படம் எது? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

II.




கேள்விக் குறியிட்ட இடத்தில் வர வேண்டிய இலக்கம் என்னவென்பது உங்களுக்குத் தெரிகின்றதா?

III.




மேலேயுள்ள படத்தில் நேர் கோடுகள் 1 — 2 உம் 3 — 4 ஆகிய இரண்டில் நீளமானது எது?

(XI ஆம் பக்கம் பார்க்க)

# நொடிப் பொழுது

1. சட்டைப்பையில் அவனிருந்தால் எவரும் [illegible]க மாட்டார்?
2. கை, கால் இல்லாத மனிதனுக்கு ஒரு கோலை மயிர். அது என்ன?
3. வட்ட வட்ட சந்திரன்; ஒளியில்லாத ச[illegible]; சட்டிக்குள் போட்டால் பொங்கி எழும் ச[illegible]. அவன் யார்?
4. எல்லாப் பொருள்களுக்கும் அது தேவை. அது [illegible]?
5. நூறு பேருக்கு ஒரு குடுமி. அது என்ன?
6. அடித்தால் குதிப்பான்; அந்தரத்தில் குதி[illegible] அவன் யார்?
7. உருவம் ஒன்று; உள்ளம் இரண்டு. அவன் [illegible]
8. மூக்கை வெட்டினால் கை போய் விடும் [illegible]து என்ன?

தொகுப்பு:- நிஷாந்தி குலவீரசிங்[illegible]
(ஆண்டு 7, கரவெட்டி ஸ்ரீ விக்கினேஸ்வரா [illegible].)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தடை: அங்கீகாரத்தின் ஆரம்பம்!

சிலநூறு ஆண்டுகளுக்கு முன்பு, பூர்வீகக் குடிமக்களின் ஆட்சியிலிருந்த அமெரிக்கக் கண்டங்களை, ''கண்டு பிடித்தோம்'' என வரலாற்றுப் பொய்களை, ஐரோப்பாவின் மேற்கு துறைமுக முனைகளிலிருந்து புறப்பட்ட வெள்ளையர்களான கடலாடிகள் எழுதினர்; மனித குலத்திற்கு எதிரான கொடுமைகளை மிருகத்தனமாகச் செயல்படுத்தினர். ஒருகண்டம் முழுவதுமே பூர்வீகக் குடிகளுக்கு இடமில்லாமல் வெள்ளையர்களின் மேலாட்சிக்கு வழி வகுத்தனர்.

அவர்களின் வழித் தோன்றல்கள்; இன்று மனித உரிமை எது? அறநெறி எது? அருள்நெறி எது? வன்முறை எது? பயங்கரவாதம் எது? என வரைவிலக்கணங்கள் வகுத்து, அந்த வரைவிலக்கணங்களை உலகம் முழுவதும் உள்ள மாந்தர்கள், அதுவும் காலாதி காலமாக நியாயங்கள், நீதிகள், அறங்கள், பண்பாடுகள் என்பவற்றிற்குப் படிப்படியாக வரைவிலக்கணங்களையும் விதிகளையும் செதுக்கிச் செதுக்கிச் செப்பனிட்ட மாந்தர்கள் மீது திணிக்க முயல்கிறார்களே! இதுதான் காலத்தின் கோலம். யார் யாரைப் பார்த்து எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? என்பதற்கு ஒரு வரைமுறையே இல்லாமற் போய் விட்டது

## அமெரிக்காவுக்கு என்ன தகுதி?

உலகில் முப்பது பயங்கரவாத குழுக்கள் உண்டு என அறிவித்து அவற்றுள் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளும் ஒரு குழு எனச் சேர்த்து வெளியிட்ட அமெரிக்க அரசு தனக்குள்ள எந்தத் தகுதியின் அடிப்படையில் இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறது எனத் தெரியவில்லை; இந்த அறிவுப்புக்குக் காரணரான கதிர்காமர், தன்மொழியினரான தமிழரை விற்று, சிங்களவருடன் சேர்ந்தவர்; தன்னோடு சேர்ந்தவர்களை விற்றே பழக்கப்பட்டவர்; அமெரிக்காவிற்குச் சிங்களத் தேசியத்தை எளிதாக விற்று விட்டார். 1956 இல் தந்தை பண்டா வெளியேற்றிய வெள்ளையர் படைப் பிரிவுகளை 1997 இல் மகள் சந்திரிகா உள்ளேவிட உதவியுள்ளார்.

மாசேதுங் மனித குலத்தின் எதிரி; ஹோசிமின் கொல்லப்பட வேண்டியவர்; பாலஸ்தீனியர்கள் படு பயங்கரவாதிகள்; ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கர்ண கொடூரமான அரக்கர்கள்; வியட்நாமியர்கள் சனப் பிறவிகள்; ரொபர்ட் முகபே தூக்கிலிடப்பட வேண்டியவர்; லுமும்பாவும் மார்ட்டின் லூதர் கிங்கும் கொல்லப்பட்டவர்கள், எரிட்டீரியர்கள், கிழக்குத் திமூரியர்கள். கோகெயின் வில்லர்கள்; என உலகில் எங்கெங்கெல்லாம் விடுதலை வேட்கை ஒலி கேட்கிறதோ அவை எல்லாம் அமெரிக்கப் பூர்விகக் குடிகளின் மறுபிறப்பாகக் கண்டு, அவர்களை ஒடுக்கி, அமெரிக்கக் கண்டத்தையே தமதாக்கியது போல், உலகம் முழுவதும் மேலாட்சி செலுத்தும் நோக்குடன் செயல்படுவதே அமெரிக்க அரசு.

## ஈழத் தமிழரின் போராட்டம் பரவியுள்ளது

தெற்கு ஆசிய சமூகத்திற்கு உலகெங்கும் இந்தியர்கள் என்ற பொதுப் பெயர் உண்டு. அதே தெற்கு ஆசிய முகங்களுக்கு இப்பொழுது தமிழர் என்ற பெயரும் சேர்ந்து கொண்டுள்ளது. உலகில் எந்த நகரத்திலும் 'நான் தமிழன்' என்று ஒருவர் சொன்னால், உடனே ஸ்ரீலங்காவா என்று கேட்கும் அளவுக்கு ஈழத்தமிழர் போராட்டம் உலகில் பட்டி தொட்டி எங்கும் பரவியுள்ளது.

ஆனாலும் அந்தப் பரவலுக்கோ போராட்டத்துக்கோ ஒரு தகுதி, ஓர் அந்தஸ்து, ஓர் அங்கீகாரம் பூமிப்பந்தின் எந்த மூலையிலும் கிடைக்காமல் பனிப்புகாராகவே விரிந்து பரந்து எல்லையற்றுத் தெரிந்தது.

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள பட்டியலும் 'இந்தப் பிரிவினை வாதிகள்' என்ற அறிவிப்பும், தமிழ்ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு ஓர் அந்தஸ்தை, ஒரு தகுதியை, ஓர் அங்கீகாரத்தை எதிர்மறையாகக் கொடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை, 1978 இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டம் மூலம் தடை செய்த முதல் அரசு சிங்களப் பெரும்பான்மையான இலங்கை அரசுதான். அந்தத் தடை சில ஆண்டுகளுக்குப் பின் காலாவதியாகியது. அதே அரசு பல முறை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசியுள்ளது. அண்மையிலும் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் எனப் புலிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. தடை—முதலில் வந்த அங்கிகாரம்; அழைப்பு— பின்பு வந்த அங்கிகாரம்.

இந்திய அரசு தமிழ் ஈழ விடுதலைப்புலிகளை வேறு காரணங்களுக்காகத் தடை செய்திருக்கிறது. அந்தத் தடை நீக்கப் பெற வேண்டும் என்ற வலுவான கோரிக்கையும் இந்தியா முழுவதும் இருந்து வருகிறது. அமெரிக்கப் பட்டியலில் ஈழப் போர்குறித்தகருத்துக்கு எதிராக சென்னையில் அமெரிக்கக் கொடியையும் இவர்கள் எரித்தார்கள். தடையும் ஒருவகை அங்கீகாரம்; தடை நீக்கக் கோரிக்கையும் மற்றொருவகை அங்கீகாரம். இப்பொழுது அமெரிக்கா அவித்திருக்கும் பயங்கரவாத பட்டியல் அங்கீகாரம் முன்பு பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு அளித்த அதே தகுதியும் அதே அங்கீகாரமும் தான். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை இந்த அறிவிப்பு ஒளிவெள்ளத்துள் கொண்டு வந்துள்ளது. பனிப் புகாரில் தேடி அங்கும் இங்கும் அலைந்த கண்கள் ஒளி வெள்ளத்தைப் பார்த்து இமை மூடாமல் விரிந்து நிலைநிறுத்தி நிற்கின்றன. பூமிப்பந்தின் மானுடர் ஒவ்வொருவரது கண்ணும் இந்த ஒளி வெள்ளத்தை இமை கொட்டாமல் பார்க்க அமெரிக்காவின் எதிர்மறை அறிவிப்பு உதவியுள்ளது.

''அரை நிர்வாணப் பக்கிரி'' என அழைத்த அதே வாய்கள், காலப்பெண்ணாள் கண்ணிமைக்கும் முன்னே ''மகாத்மா'' என்பதுந்து கூறவில்லையா? எடின்பரோவில் கடந்த வாரம் கூடக் காந்திக்குச் சிலை எடுக்கவில்லையா?

ஒலிவ் இலையையும் கைத்துப்பாக்கியையும் கைக்கு ஒன்றாகக் கொண்டு, அமெரிக்காவிக் கூடவேண்டிய ஐக்கிய நாடுகள் மன்றத்தை ஜெனிவாவில் கூட்டுவித்து, அக்கூட்டத்தில் பேசப் புகுந்தபோது உலகமே கர ஒலி எழுப்பி யாசீர் அரபாத்தைப் பாராட்டவில்லையா?

தனிமைச் சிறையில் இருள் அகலாமல் 25 ஆண்டுகள் வாடிய நெல்சன்மண்டேலா, செவ்விளமைக் கதிரவனாய் கீழ்வானில் உதித்து விடுதலைத் தாமரையை மலர வைக்கவில்லையா?

'பொய்=உண்மை' என்று கூறினால் உண்மைக்கு களங்கமா? இல்லை. அது எதிர்மறைச் சிறப்பு. பொய்மையும் வாய்மையிடத்து எனத் தொடங்கும் குறளில் வாய்மைக்கு வள்ளுவர் கொடுத்த எதிர்மறைச் சிறப்பைத் தமிழர்கள் 2000 ஆண்டுகளாக அறிவர் என்பதை அமெரிக்கர் அறியசர்.

அவள் கன்னி. முந்தானையைச் செருகிக்கொண்டு, பாவாடையை இருகைகளாலும் இரு பக்கமும் சிறிதே தூக்கியவாறு, கூந்தலில் மல்லிகையுடன், ஒற்றை வரம்பில் கால்கள் பின்னத் துள்ளிக்குதித்துத் தளுக்கிக் குலுக்கி ஓடிவந்தவள், வயலில் ஆழ உழுதுகொண்டிருக்கும் தன் ஆணழகனைக் கண்டதுமே, நின்று, கண்மணிகளை ஓரத்தில்வைத்து, குரலில் கனிவை வைத்து, கூந்தல் மல்லிகையை மணம் பரப்ப விட்டு, அவனைப் பார்த்து, ''கையைத் தொடாதே'' என்றாள். அவன் காது கொடுக்கவில்லை. அவனோ விடாமல், ''மோகனமானவரே, கையைத் தொடாதீர்'' என்றாள். கேட்காமல் பணியில் மூழ்கிய காளையிடம் அவள் சொல்லவிழைந்தது என்ன? ''அன்பே, ஆருயிரீர், கையைப்பிடித்து இழும், கட்டித்தழுவும், என் காமத்தைத் தணியும்'' என்பது தான் ஆனால் அவளால் அவ்விருப்பத்தை எதிர்மறையில் தானே விளிக்கமுடியும்! தொடாதே எனத்தானே விளிக்கமுடியும்? ''கண்ணா என் கையைத் தொடாதே, மோகனக் கண்ணா என் கையைத் தொடாதே!'' இது எதிர்மறை விளிப்பு.

வண்ணங்கள் நிறைந்த புதுச் சேலை கட்டினாள். தெருவிலே ஒய்யாரமாக நடந்தாள். காதலன் கண்ணன் அவ்வழி வந்தான். அவளது சேலை அழகு அவனை மயக்க, கைக்கு எட்டியது புழுதிதான். அவள் மீது வாரிச் சொரிந்தான். குய்யோ முறையோ என அவள் அரற்றினாள். ''வண்ணப் புதுச் சேலை தனிலே— புழுதி வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான்'' பாரதி இப்படிப் பாடினான். இதுவும் எதிர்மறை விழிப்பே!

எதிர்மறைத் தகுதிதான். இழிவு சிறப்புத்தான். [illegible] தான், போராட்டத்தின் புறத்தோற்றம்.

''நமனை அஞ்சோம். நரகத்தில் இடர்ப்படோம். நழலை இல்லோம், ஏமாப்போம், பிணி அறியோம், பணிவோம் அல்லோம்''— திரும்பச் சொல்வோம், ''பணிவோம் அல்லோம்''— என்பது போராட்டத்தின் அகத்தோற்றம்.

இதனால்தான் ஈழத் தமிழர்கள் ஒருவராவது தனியாக நிற்காமல் அனைவரும் அமெரிக்க அறிவிப்பை 'வரவேற்கிறார்கள்.' தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தின் மீது ஒளிவெள்ளம் பாய்ச்சப் பெற்றுளது உலக அரங்குகளில் [மட்டும்] அல்ல; பூமிப்பந்தின் ஒவ்வொரு வாழ்விடத்திலும் அங்கீகாரத்துக்குரிய பேசு பொருளாகவும் பாடுபொருளாகவும் இப்போராட்டம் மாறியுள்ளது.

எதிர்மறைத் தகுதிதான் ஈழத்தமிழர் பெற்ற முதல் வெற்றி. அதனை வரவேற்கிறோம்; எதிர் கொள்கிறோம்; உலகம் எங்கள் வழிக்கு வரும்; எங்களை முழுமையாக அங்கீகரிக்கும். தடை செய்த அரசுகளே அழைப்பனுப்பிச் செங்கம்பள வரவேற்பை நல்கும் நாள் தொலைவில் இல்லை.

(நன்றி:- பாரிஸ் ஈழநாடு)

மறவன்புலோ
-க. சச்சிதானந்தன்-

---

# கலக்க வருகின்றது 'விண்டோஸ் - 98'

கொம்பியூட்டர்களுக்குரிய சொப்ட்வேர் (Software) தயாரிப்பதிலும் அறிமுகப்படுத்துவதிலும் உலகில் மன்று சக்கையோடு போட்டுக் கொண்டிருப்பது 'மைக்ரோ சொப்ட்' நிறுவனம். இதன் தயாரிப்பான 'விண்டோஸ்95' என்ற இயக்கத் தொகுப்பு இன்று உலகையே ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கின்றது.

'விண்டோஸ் 95' தொகுப்பின் செல்லப் பெயர் 'மெம்பிஸ்' ஆகும்.

உலக மக்கள் தொகையில் முப்பது கோடி மக்கள் தனிப்பட்ட (பெர்சனல்) கம்பியூட்டர்களைப் பயன்படுத்துகிறார்கள். அதில் பத்துக்கோடி பேர் 'விண்டோஸ் 95' இயக்கத் தொகுப்பைப் பயன்படுத்துவதாக ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கின்றது. இதுவரை 6 கோடி 31 லட்சத்து 94 ஆயிரம் எண்ணிக்கை 'விண்டோஸ் 95,' தொகுப்புகள் விற்பனையாகியுள்ளன.

தற்போதைய கொம்பியூட்டர் யுகத்தின் முன்னேற்றத்திற்கு தகுந்தவாறு 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனமும் தனது தயாரிப்பான விண்டோஸ் 95-யை மேம்படுத்தி 'விண்டோஸ் 98' என்ற பெயரில் அடுத்த ஆண்டு முதல் மூன்று மாதத்திற்குள் வெளியிட இருப்பதாக அதன் தலைவர் பில்கேட்ஸ் அறிவித்திருக்கிறார்.

கொம்பியூட்டர் வல்லுநர்கள் மத்தியில் இந்த 'விண்டோஸ் 98' பெரும் பரபரப்பை ஏற்படுத்தி, அதனுடன் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த விண்டோஸ் 98-ன் வரவால் தொலைக்காட்சியும், கொம்பியூட்டரும் இணைகிறது. இதன் வரவுக்கு முன்பு டி.வியும், கொம்பியூட்டரும் இணைப்பதற்கு சொஃப்ட் வேரும், ஹார்டு வேரும் தேவைப்பட்டன. ஆனால், இந்த விண்டோஸ் 98-ன் மூலம் டி.வியும், கொம்பியூட்டரும் இணைப்பதற்கு நம் கெம்பியூட்டருடன் டிவி டியூனர் கார்டு மட்டும் வாங்கி பொருத்திக்கொண்டால் போதுமானதாகும். இந்த தொகுப்பில் உள்ள 'இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர்' என்ற வசதியை கொண்டு இன்டர்நெட்டில் நமக்கு தேவையான கோவைகளைத் தேடி எடுக்க முடியும்.

# கணவனைச்சுமக்கும்பெண்

உலகிலேயே மிகப்பெரிய பராக் கணவனை சுமக்கும் பெண்மணி இந்த கதரின் தரன்.

தெற்கு கலிபோர்னியாவை சேர்ந்த சுமார் 280 கிலோ எடை உள்ள — சார் லியை திருமணம் செய்து கொண்ட இந்த கதரினின் எடை வெறும் 60 கிலோ.

சார்லி சந்தோச மிகுதியால் சமயத்தில் கதரினை கட்டிப் பிடித்தாலோ, கோபத்தில் செல்லமாக கன்னத்தில் அடித்தாலோ, இரவு தூக்கத்தில் தெரியாமல் மனைவி மீது காலை தூக்கி போட்டாலோ, அவ்வளவுதான். கதரினுக்கு 2 நாள் உடம்புவலிதானாது.

இதோடு கணவருக்கு ஒரு வேளை சாப்பாட்டை ¾ மணி நேரமாக பரி மாறுவது, ½ மணி நேரமாக அவரை குளிப்பாட்டுவது, கால் பிடித்து அமுக்கி விடுவது என் கதரின் பல பணி விடைகளை செய்கிறார்.

கஷ்டமாக இல்லையா? என்று கதரினை கேட்டால்... எனக்கு தமாஷாக பொழுது போகிறது! என்கிறார்.

பாவம் கதரின்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வெள்ளம்

### அறன் வலியுறுத்தல்

அறம் செய விரும்பு. இதை விட உருப்படியான காரியம் எதுவும் உலகினில் இடையாது. கொட்டிக் கொடுக்கப் பொருள் இல்லையே என ஏங்கி நிற்க வேண்டாம். அறத்தை எப்படியும் எந்த வழியிலும் ஆற்றிவிடலாம். மனம் இருந்தால் போதும்.

அறம் என்று அன்னதானம் செய்ய ...அதற்கெனப் பொருள் ஈட்ட...கால அவகாசம் கேட்காதே. கோயிலிலே சென்று நீ சிறப்பும் செல்வமும் கேட்டு மன்றாட வேண்டாம். அதற்கென்று எந்தவொரு நேர்த்தியிலும் விரதத்திலும் மினக்கெடவும் வேண்டாம். சிறப்பையும் செல்வத்தையும் எந்த விலை கொடுத்தும் அங்கே வாங்கிவிடல் முடியாது.

எச்செயலையும் விட அறமே உயிர்க்கு ஆக்கம் தரும். மனிதருக்கும் பிற உயிர்களுக்கும் அறம் எனக் கருதி உன்னால் ஆன உதவியைச் செய்துவிடு. மன நிம்மதியைக் கொடுத்து விடு. அதுபோதும். சிறப்பும் செல்வமும் மனநிறைவும் தேடி வந்து உன் காலடியில் மண்டிக் கிடக்கும்.

சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு<br>
ஆக்கம் எவனோ உயிர்க்கு<br>
—0031

அடுத்தவன் உயர்வில் பொறாமைப் படாத மனிதர்கள் கூட வியந்து பார்க்கும் அளவுக்கு சிலர் மிகவும் வேகமாக முன்னேறி விடுகிறார்கள். கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பார்களே. அதைவிட அதிசயமான ஆக்கம் இவர்களின் வாழ்க்கையில் வாய்த்து விடுகிறதே!

காரணம் மனம் தான். அறம்தான் இப்படியான அற்புதத்தை நிகழ்த்துகிறது. அதைவிடச் சிறந்த ஆக்கத்தை உலகிலே காண முடியாது.

அந்த அறத்தை மறந்து விட்டாலோ — இயன்றும் கூட செய்யாமல் சந்தர்ப்பத்தை தப்ப விட்டாலோ — கேடுதான் மிஞ்சிவரும். அதுவும் எப்படிப்பட்ட கேடு தேடி வரும்?


இதைவிடக் கேடு இல்லை என்ற அளவுக்கு, உலகம் முழுதுமே உனக்காக இரங்கி பரிதாபப்படும் அளவுக்கு கொடுமையான கேடு சூழ்ந்து விடும்.

அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை<br>
மறத்தலின் ஊங்கில்லை கேடு.<br>
—0032

-அம்பிகைபாகன்-

# இந்த வார இராசி பலன்

(06 - 12 - 1997 முதல் 12 - 12 - 1997 வரை)




மாற்றம்:

7 - 12 - 1997 இல் மகரம்—செவ்வாய் மாற்றம்.

அரசியலில் இரு மனக்கருத்துக்கள் ஏற்படும். இந்தியா ஒரு கண் — அமெரிக்கா மறுகண் கொண்டு எமது நாட்டை நோக்கும். ஐ. நா. புதிய நடைமுறைகளைப் புகுத்தி உதவிகள் செய்யும். புதிய அலை ஒன்று மேலெழுந்து ஓயும். இந்தியாவில் காங்கிரஸின் மேலாதிக்கம் அதிக தாக்கங்களை மக்களுக்குக் கொடுக்கும். 1998 இல் நடக்கும் மாற்றங்களுக்கு ஆரம்பப்படியான சில சம்பவங்கள் நடக்கும். கிழக்கு நாடுகளை மேற்கு நாடுகள் சந்தேகக் கண் கொண்டு நோக்கும். மத்தியகிழக்கு நாடுகள், ஈராக் போன்றனவற்றில் அழிவுகள் மேலிடும். அமெரிக்கா மத்தியகிழக்கில் சமயப் போர் நடத்தும். ஐ நா சமாதானப் பேச்சு நடத்தும்.

**மேடம்:** உலகம் உங்களைப் பார்த்து அடிக்கடி பேசிக் கொள்ளும். உங்கள் முயற்சி தொழிலில் தாமதம் கொடுத்தாலும் ''முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்'' என்பது போன்று தொடர்ச்சியான முயற்சி நிச்சயம் உயர்ச்சி, வெற்றிகளைத் தரும். உங்களிடம் காரியம் சாதிக்க அடிக்கடி வருபவர்களுடன் ஜாக்கிரதையாக இருக்கவும். எதிர்ப்பாலார் உங்களைப் பற்றிப் பலதும் பத்தும் பேசுவர். உடல் களைப்பு, கைகால் உளைவு அடிக்கடி வரும். சாப்பாட்டைக் கவனித்துக் கொள்ளுங்கள். கைகால் உரசல் காயங்கள் வரும். பயப்படத்தேவையில்லை. பிறருக்கு உதவி செய்வீர்கள். புதிய முயற்சிகளை ஜனவரிக்குப் பின்பு செய்யலாம். அவசரப்படாது நிதானமாக இருக்கவும். முயற்சியில் ஊக்கமாக இருக்கவும். சகோதரங்களுக்கு மாற்றங்கள் நடக்கும்— பலன்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

**இடபம்:** நீங்கள் கலகலப்பாக இருப்பீர்கள். காசு பெரிதா? உங்கள் கலகலப்பிலேயே உங்கள் குடும்பம் காலம் தள்ளும். எதிர்ப்பாலார் கேலி செய்தால் செய்யட்டுமே. அதனால் எதுவும் குறைந்து விடாது. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகலாம். ஆனால் செயற்படுத்த முடியாது தடைகள் உண்டு. ஒருவரால் உதவிகள் கிடைக்கும். அதை நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டு மனம் வருந்துவீர்கள். பணம் கிடைக்கலாம். தெய்வீக அனுக்கிரகம் பெற்ற பெரியவர்களினது அன்பு இலேசில் கிடைத்து விடுமா? தொழில் ஸ்தானத்தில் வேண்டா வெறுப்புக்கள் ஏற்படும். அன்புள்ளவர்களுடன் சேர்ந்திருங்கள். தூற்றுபவர்களை விலத்தி இருங்கள். கால ஓட்டத்திற்குத் தகுந்தாற் போல் எம்மையும் நாம் மாறிக் கொள்ள வேண்டாமா?

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

**சிங்கம்:** உங்களுக்கு எதிர்பாராத திசைதிருப்பங்கள் ஏற்படும். உங்கள் மீது சிலர் பொறாமைப்பட்டு இரகசியமாக வஞ்சம் தீர்க்கக் காத்திருப்பர். எதற்கும் அஞ்சாது நின்று போராடும் இயல்புள்ள நீங்கள் விடாது எக்காரியத்திலும் தொடர்ச்சியான முயற்சி

## சோதிட சஞ்சீவி

கொஞ்சம் பொறுமையாக இருந்து காரியமாற்றவும். நண்பர்கள் உதவி செய்வார்கள். ''உடையது விளம்பேல்'' என்பதற்கிணங்க செயற்படுங்கள். உங்கள் காரியங்கள் அனுகூலமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

**மிதுனம்:** காரணமின்றிக் கோபிப்பதும், உணர்ச்சிவசப் படுவதும் இக்காலத்தில் சர்வ சாதாரணமாகும். அடிக்கடி மனம் மாறியபடி இருக்கும். காலை ஓர் எண்ணம்—மாலை ஒரு திட்டம் என சலனப்பட்டபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் மறைமுகப் பகைமைகளால் வீண் பகைகள் வரும். மேலதிகாரிகள் சந்தேகப்படுவார்கள். அயலவர்கள் சீறிச்சினப்பர். எதிர்ப்பாலார் உதவியும் உபத்திரவமும் மாறி மாறித் தருவர். காலம் பதில் சொல்லும் எனக் காத்திருக்காது. ''காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்ளவும்''. பொருள்கள் கொடுக்கல் வாங்கலில் நிதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**கடகம்:** உங்களுக்குப் போராட்டமாம். உங்களைத் தூற்றுபவர் போற்றுவர்; போற்றுபவர் தூற்றுவர். தெய்வ அனுக்கிரகம் பெற்ற

செய்து வெற்றியீட்ட வழி தேடுங்கள். அட்டமத்துச் சனி தொட்டுத் தொட்டு விடும். மனக் குறைகளை தெய்வத் திடம் ஒப்புவியுங்கள். சனீஸ்வரனுக்கு அடிக்கடி பிரீதி செய்வதுடன் ஏழை எளியவர்களுக்கு தானதருமங்கள் செய்யுங்கள். பிரயாணங்க

### மகாதேவா ஜோதிடம்

நல்லூர்

ளைத் தவிர்க்கவும். பொருள் கஷ்டங்கள் தெற்கு, மேற்குத் திசைகளில் உள்ளவர்களின் புகைச்சலால் ஏற்படலாம். கவனமாக இருக்கவும்.


★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**கன்னி:** நீங்கள் அடிக்கடி கோபிப்பதனால் என்ன பலன்? அயலவர்களுடன் மிகக் கவனமாக இருக்கவும். உங்கள் பலவீனம் தெரிந்தவர்கள்—அதனால் பல கஷ்டங்கள் தரலாம். வாகனங்களால் அதிக செலவுகள் ஏற்படும். புத்திரர்களுக்கு மாற்றங்கள் நடக்கும். தூரதேசச் செய்திகளாலோ அல்லது நண்பர்களாலோ எவ்வித இலாபமும் இல்லை. எந்த விஷயங்களுக்கும் பொறுப்பு நிற்க வேண்டாம். தெய்வ வழிபாடு நன்மைகள் தரும்.

(X ஆம் பக்கம் பார்க்க)

## சொற்சிலம்பம்

### புதிர்ப் போட்டி இல. 27




சொற்சிலம்பம் இல. 27<br>
சஞ்சீவி,<br>
361, கஸ்தூரியார் வீதி,<br>
யாழ்ப்பாணம்.

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

———— இங்கே வெட்டுக ————

**முடிவு திகதி: 12 - 12 - 1997**

**இடமிருந்து வலம்**

1. விநாயகன் 4. பசுக்கன்று. 6. சுவை. 7. மலைநாட்டு நகரம். 8. சோமாதா. 10. இப்போது இத்தகைய தாக்குதல்கள் அதிகம். 11. இளையோன். 13. சிறையில் இருப்பவன், 15. பலாப் பழத்துள் இருக்கும். 17. கணவன் இழந்த நிலை. 19. தீமை. 20. செய்யுள் தொடை. 22. திருட்டு. 24. ரசம். 26. வேங்கை. 27. துணைவி.

**மேலிருந்து கீழ்**

1. ஒரு மாதம் 2. கிளை. 3. விசிறி. 4. கயிறு. 5. ஏழையின் மாளிகை. 7. பொதுமகள். 9. இக்குணத்துக்கு உதாரணம் எறும்பு. 12. எலியின் இருப்பிடம். 14. பிரமிப்பு அடை. 16. தர்க்கம். 18. மத்திய இடம். 19. தையலுக்கு உதவும். 20. எங்களுடையது என்பதைக் குறிக்கும். 21. கைவேலை. 23. காணிக்கையாதல். 25. ஒன்றை எதிர்ப்பார்த்து அந்தரப்படு.

### சொற்சிலம்பம் இல. 25 - விடைகள்

**இடமிருந்து வலம்**

1. மேதாவி. 4. எஃகு. 6. கவித்தொகை. 8 நாபி. 10. தந்தபி. 12. சுவாதி. 13. சாரதி 15. கடன். 16. ஆசுகவி 17. சிலை. 18. பார. 19. வாழ்த்து. 21. பா. 22. புத்தி. 23. திருக்கை.

**மேலிருந்து கீழ்**

1. மேகம். 2. தாலி. 3. வித்துவான். 4. எகைது. 5. குநா. 7. தொந்தி. 9. பிருதிவி. 11. பிசாசு. 12. கடலை. 14. ரகளை. 15. கசிப்பு. 16. ஆரத்தி. 18. யாழ். 19. வாதி, 20. அரு. 21. பாவை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு:- செல்வத்துரை நந்தகுமாரன், தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை.

★ இரண்டாம் பரிசு:- செல்வி பிரணவி சதீஸன், 35/2A குமாரசாமி வீதி, கந்தர்மடம்.

★ மூன்றாம் பரிசு:- செ. ஜெ. நிரோஷன், கூட்டுறவு ஒழுங்கை, வட்டுக்கோட்டை.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. | 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. | 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. | 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம். 26 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணார்ஜுன யுத்தம்

கிருஷ்ணனும் அர்ஜுனனும் சேர்ந்து கௌரவர்களை எதிர்த்து குருக்ஷேத்திரத்திலே நடத்திய யுத்தம், மகாபாரதம் படித்தவர்களுக்குத் தெரிந்த சம்பவம். ஆனால், அர்ஜுனனை எதிர்த்துப் போர்க் கோலம் பூண்டு கிருஷ்ணன் நடத்திய யுத்தம், தெரிந்த புராணத்தில் தெரியாத சம்பவம்! ஆனால், தெரிந்துகொள்ள வேண்டிய நிகழ்ச்சி. மகாபாரதமே கண்ணன் நடத்திய நாடகம் தானே? அதிலே எத்தனை எத்தனையோ அற்புதமான சம்பவங்கள்; அருமையான காட்சிகள். அதில் ஒன்று கிருஷ்ணார்ஜுன யுத்தம்!

காரணமில்லாமல் கண்ணன் எந்தச் சம்பவத்தையும் நிகழ்த்தத் திருவுளம் கொள்வதுமில்லை; நடத்துவதுமில்லை. இந்தச் சம்பவத்திற்கும் அப்படி ஒரு வலுவான காரணம் இருக்கத்தான் செய்தது.

மகாபாரதத்தின் முற்பகுதியில் நிகழ்ந்த சம்பவம் இது. கௌரவர்களும் — பாண்டவர்களும் பாகப்பிரிவினை செய்து கொண்டனர். செழிப்பான பூமியையும் மக்கள் வாழும் பகுதியையும் துரியோதனன் தனக்கென வைத்துக் கொண்டு, காண்டவ வனத்தை பாண்டவர்க்குத் தந்தான். ஸ்ரீகிருஷ்ணனின் அனுக்கிரகத்தால் காண்டவ வனத்தை அழகிய ராஜ்பமாக மாற்றி அதற்கு 'இந்திரப்பிரஸ்தம்' எனப் பெயரிட்டு, யாகங்களில் தலைசிறந்த இராஜசூயயாகத்தையும் செய்து முடித்து, பாண்டவர்களின் மூத்தவன் தருமன் பெரும் புகழைச் சேர்த்துக்கொண்டு, நீதி தவறாமல் ஆண்ட காலம் அது. தம்பி பீமனின் தோள்வலியும், அர்ஜுனனின் வில்திறனும் அவனுக்கு அரணாக விளங்கின.

தன் பராக்கிரமத்தாலும், வீரதீரத்தாலும் எல்லோருக்கும் காவலனாக விளங்கினான் அர்ஜுனன். அவனையும் அவன் உற்ற நண்பனான ஸ்ரீகிருஷ்ணனையும் 'நர நாராயணர்கள்' என்றே அனைவரும் அழைத்தனர். அர்ஜுனனின் நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், திகழ்ந்தான் கண்ணன். அந்த ஸ்ரீகிருஷ்ணன் தான் ஒரு நாள் போர்க் கோலம் பூண்டு அர்ஜுனனையே எதிர்த்துப் போர் புரியும் படி நேர்ந்தது. அதற்குக் காரணம் ஒரு விசித்திரமான சம்பவம்....

ஒருநாள் அதிகாலை நேரம் பகவான் ஸ்ரீகிருஷ்ணன், கங்கையில் நின்றுகொண்டு சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தான். அப்போது அர்க்யம்விட கையில் நீரை எடுத்தபோது, அதில் ஆகாயத்திலிருந்து பாரோமென்று உமிழ்ந்த தாம்பூலம் விழுந்தது. கண்ணன் திடுக்கிட்டு, மேலே பார்த்தான். கந்தர்வன் ஒருவன் விண்ணிலே உல்லாசமாகச் சென்று கொண்டிருந்தான். அவன் பெயர் துர்ஜெயன். அவன் சுவைத்து உமிழ்ந்த தாம்பூலம்தான் கண்ணன் கரத்திலிருந்த நீரில் விழுந்தது.

அறியாமல் செய்த பிழையாயிருக்கக்கூடுமென கண்ணன் ஒருகணம் பொறுமையுடன் நின்றான். ஆகாயத்தில் சென்றுகொண்டிருந்த துர்ஜெயன், தான் உமிழ்ந்த தாம்பூலம் கண்ணன் கரத்தில் விழுந்து களங்கப்படுத்தி விட்டதைக் கணத்தில் தெரிந்து கொண்டான். ஆனால், அவன் கண்ணனின் அவதாரப் பெருமையைப் பற்றி அறிந்து கொள்ளாத அறிவிலிகளில் ஒருவன். மேலும் கண்ணனால் சம்ஹாரம் செய்யப்பட்ட சிசுபாலனுக்கு அவன் நண்பன். 'தான்' என்ற அகம்பாவம் பிடித்தவன். 'சிசுபாலனைக் கொன்ற கண்ணனைத் தான் அவமானப்படுத்த இயற்கையாக நிகழ்ந்த சம்பவம் இது' என்று எண்ணிப் பெருமைப் பட்டான். நடந்ததைக் கவனிக்காததுபோல் சென்று விட்டான்.



தவறு நேர்வது இயற்கை. ஆனால், தவறென்றுதெரிந்த பின் திருந்தாமல் இருப்பவரை தெய்வம் தண்டிக்காமல் விடுவதில்லை: கருணையே வடிவானவன்தான் கண்ணன். என்றாலும், தவறுகளைத் திருத்த வேண்டியது தர்மஸ்தாபனம் செய்வோரின் கடமையாகி விடுகிறதல்லவா? 'இந்த கந்தர்வன் துர்ஜெயனை சூர்யாஸ்தமனத்துக்குள் அழித்து விடுகிறேன்' என்று சூளுரைத்து கையில் எடுத்த நீரைக் கரையில் விட்டுவிட்டு, சந்தியாவந்தனத்தை முடித்தான் கண்ணன். கரையேறியதும் தன்னை அவமதித்த துர்ஜெயனைப் போரில் சந்திப்பதாக அவனுக்குச் செய்தி அனுப்பினான். போர்க் கோலம் பூண்டு புறப்பட ஆயத்தமானான்.

தன் இருப்பிடம் வந்த கந்தர்வராஜன் துர்ஜெயன் போர்ச் செய்தியை அறிந்தான். சிசுபாலனையே அழித்த ஸ்ரீகிருஷ்ணன் முன் தான் எமமாத்திரம் என்ற பயம் ஒருபுறம்; கண்ணனுடன் போரிட்டு ஜெயித்து விட்டால் அழியாப் புகழ் பெற்றுவிடலாம் என்ற அறியாமை மறுபுறம்; சிசுபாலவதத்திற்கு பழிவாங்கத் துடிக்கும் ஆணவம் வேறு. உள்ளத்தின் அடித்தளத்தில் நேராகக் கண்ணனுடன் போரிடத் துணிவும் இல்லை அவனுக்கு. செய்தது தவறு என்று ஒத்துக்கொண்டு, காலடியில் சரணாகதி என வீழ்ந்துவிட்டால் கண்ணன் நிச்சயம் மன்னித்து விடுவான் என்று தெரிந்திருந்தும், ஆணவம் பிடித்த அவனுக்கு அந்தத் தெளிவு ஏற்படவில்லை. மாறாக சூன்யமான மனதில் சூழ்ச்சியே பிறந்தது. சிசுபாலன் மரணத்திற்குக் காரணமான பாண்டவர்களையும் பழி வாங்கவேண்டும்; கண்ணனையும் அவமானப்படுத்த வேண்டும்; தானும் பிழைக்க வேண்டும். — அதற்காக ஒரு சதி உருவாகியது அவன் மனதில். அதனை நிறைவேற்ற ஒரு நாடகம் ஆடினான் அவன்.

தன் ஆட்சியில் அனைவரும் இன்புற்று வாழ வேண்டும் என்கிற நல்லெண்ணம் கொண்ட அர்ஜுனனை ஒரு கருவியாகப் பயன்படுத்த நினைத்தான் துர்ஜெயன். அர்ஜுனனைக் கண்டு அவன் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். யாருக்குத் தீங்கிழைத்தானோ அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்காமல், மற்றொருவனையும் தீவினையில் ஆழ்த்த எண்ணி அவன் காலில் விழுந்தான்.


''அர்ஜுனா! பல்குனா! பார்த்திபா ... அபயம்'' என்று கதறினான்.

''ஐயா! எழுந்திருங்கள். என்காலில் விழுந்துவிட்டீர்கள். அபயம் அளித்தேன். தங்கள் குறைஎதுவானாலும் தீர்த்துவைக்கிறேன்'' என்று உறுதி கூறினான் அர்ஜுனன்.

''அர்ஜுனா! சத்தியமாக என்னைக் காப்பாற்றுவாயா?'' என்று கேட்டான் கந்தர்வன் துர்ஜெயன்.

''நான் வணங்கும் கண்ணன் மீது ஆணையாகக் கூறுகிறேன். தங்களுக்கு எந்த ஆபத்து இருப்பினும், என் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுகிறேன்'' என்று [illegible] இயன்.

''அர்ஜுனா! என் பெயர் துர்ஜெயன். நான் கந்தர்வ ராஜன். அறியாமல் நான் செய்த பிழை ஒன்றிற்காக என்மீது போர் தொடுத்து என்னை அழிக்க வருகிறான் ஒருவன். நீ என்பக்கம் நின்று அவனோடுபோரிட்டுவென்று எனக்கு உயிர்ப்பிச்சை தர வேண்டும்'' என்று கெஞ்சினான் துர்ஜெயன்.



''யாரவன் சொல்.'' என்றான் அர்ஜுனன்.

''அவன் ஒரு சாதாரண குறுநில மன்னன்தான். ஆனால், தன்னை யாராலும் வெல்லமுடியாது என்றும், அர்ஜுனன்கூட தன்னை எதிர்த்து நிற்கமுடியாது என்றும் மார்தட்டுகிறான். உனக்கு பந்துதான்'' என்று சூசமாகச்சொன்னான்.

தன்னை எதிர்க்கத் துணிந்திருக்கிறான்; தன் வீரத்திற்குச் சவால்விட்டிருக்கிறான்; தனக்கு பந்துவும்கூட என்பதிலிருந்து அது கௌரவர்களில் யாராவது ஒருவராகத்தான் இருக்கவேண்டும் என்று ஊகித்தான் அர்ஜுனன். ஆகவே அவன் விவேகத்துடன் சிந்திக்காமல் உணர்ச்சிவசப்பட்டுக் கேட்டான்....

## டி. எஸ். எம். சுவாமி

''அப்படியா... நீ கவலைப் படாதே. அவனை வென்று உன் துயர் தீர்க்கிறேன். புறப்படு... எங்கிருக்கிறான் அவன்?'' எனப் புறப்பட்டான்

துர்ஜெயன் சாதுரியமாகப் பேசினான்:

''அர்ஜுனா! உன்னை நான் பரிபூரணமாக நம்பலாமா? ஒருவேளை அவனை நீ சந்தித்ததும்மனம்மாறி...''

கந்தர்வன் முடிக்கவில்லை. அர்ஜுனன் குமுறினான். ''என் வீரத்தை மட்டுமல்ல, சத்தியத்தையும் நீ சந்தேகிக்கிறாய். அடைக்கலம் என்று வந்தவரை ஆதரிக்காமல் போகமாட்டான் அர்ஜுனன். உன் எதிரி எவனானாலும் சரி, என் இறுதிமூச்சு வரை போராடி உன்னைக் காப்பேன். இது சத்தியம். போதுமா? இப்போது உனக்கு நம்பிக்கையும், தைரியமும் வந்ததா! சொல். எங்கிருக்கிறான் உன் பகைவன் என்பதைக் காட்டு'' என்றான்.

''அர்ஜுனா! என் உயிரைக் கவர என்மீது போர் தொடுத்துப் புறப்பட்டு வருகிறவன் துவாரகாதிபதி ஸ்ரீ கிருஷ்ணன்'' என்றான் துர்ஜெயன்.

அவ்வளவுதான். அர்ஜுனன் நிலைகுலைந்தும், பயத்தாலும் ஸ்தம்பித்து விட்டான். அவன் நாவினின்றும் பேச்சு வரவில்லை.

''ஏன் அர்ஜுனா, அதிர்ச்சி அடைந்துவிட்டாய்? உன் ஆத்ம நண்பன்; உன் வழி காட்டி; உன் குருவான ஸ்ரீ கிருஷ்ணன் மீதே போர் தொடுக்க வேண்டுமே என்ற தயக்கமா? அல்லது கண்ணனை ஜெயிக்கும் அளவுக்கு வீரம் இல்லையே என்ற பயமா? போகட்டும், முடியாதென்றால் விட்டுவிடுகிறேன். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியவில்லையே என்று நீ வருந்தவேண்டாம். எனக்கு அல்ப ஆயுள்... என்ன செய்வது...!'' என்று அங்கலாய்த்தான் துர்ஜெயன்.

அர்ஜுனன் பேசினான்.

''நண்பனே! கலங்காதே. சத்தியம் தவறிய குற்றத்தைச் செய்வதைவிட நண்பன் மீதே போர் தொடுத்து உன்னைக் காப்பாற்ற நான் தயார். இதோ புறப்படுகிறேன்'' என்று சூளுரைத்து, போர்க்கோலம் பூண்டு, யுத்த பூமியில் ஸ்ரீகிருஷ்ணனைச் சந்திக்கப் புறப்பட்டான்.

குழலூதி ஆவினங்களை மேய்க்கும் கண்ணன், கவசம் அணிந்து வாள் தரித்து வில் ஏந்தி நின்ற கோலம் கண்டு, அர்ஜுனன் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்றான். உற்ற நண்பனை, ஆத்மபந்துவை, வழிகாட்டியாக விளங்கிய குருவை, தெய்வத்தை, எப்படி எதிர்த்துப் போர் புரிவது? அர்ஜுனன் உள்ளத்தில் கலக்கம், குழப்பம், பயம், பீதி!

அப்போது அதைத் தெளிவுபடுத்தி கீதையை உபதேசிக்க கண்ணன் அவனருகில் இல்லை: அவனது எதிரியாக எதிரே நின்று கொண்டிருந்தான்! கடமையைச் செய்யும்போது, சத்தியத்தைக் காக்கும்போது கலங்கக் கூடாது என்று தானே தெளிவடைந்து போரைத் தொடங்கினான் அர்ஜுனன். கிருஷ்ணார்ஜுன யுத்தம் ஆரம்பமானது. கண்ணன் எய்த பாணம் ஒவ்வொன்றையும் சமாளிக்கத் தான் துரோணரிடம் கற்ற வித்தையெல்லாம் போதாது தவித்தான் அர்ஜுனன். விண்ணிலே அஸ்திரங்கள் மழையாகப் பொழிந்துகொண்டிருந்தன. அவை மோதுகின்ற சத்தங்கள் இடிமுழக்கம் செய்தன. பிரளயகாலம் போலவும் சுழித்தீ பரவுவது போலவும் உலகு நடுங்கிற்று.

தருமனும், பீமனும் மற்றவர்களும் கிருஷ்ணார்ஜு-

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணார்ஜுன....

(IX ஆம் பக்கத் தொடர்ச்சி) னர்கள் மோதிக் கொண்டதைக் கேட்டுக் கலங்கி களத்திற்கு விரைந்தனர்.

இத்தனைக்கும் காரணமான கந்தர்வன் துர்ஜெயனை ஒரு பூச்சியைப் பிடிப்பது போல் பிடித்து களத்தில் கொண்டு வந்து நிறுத்தினான் பீமன். 'கண்ணன் கால்களில் விழுந்து மன்னிப்புப்பெற மறுத்தால் கிருஷ்ணார்ஜுன யுத்தத்தோடு பீமார்ஜுன யுத்தமும் நிகழும். அப்போது நிச்சயம் நீயும் அர்ஜுனனும் மடிவீர்கள்' என்று கர்ஜனை செய்தான் பீமன்.

நாரதரும், தேவர்களும் அங்கே வந்து, துர்ஜெயனுக்கு அறிவு புகட்டினர். அவன் ஆணவம் அழிந்தது; அறிவு தெளிந்தது. பரந்தாமன் பாதங்களில் விழுந்தான். சரணாகதியடைகின்றவர்களைக் காக்கின்ற வள்ளல் அல்லவா கண்ணன்? அர்ஜுனனால் காப்பாற்றப்பட வேண்டியவன் கண்ணனால் காப்பாற்றப்பட்டான்.

அர்ஜுனனும் உயிர் பிழைத்தான். தாயினும் மேலான தன் ஆத்மநண்பன் கண்ணனையே போரில் எதிர்க்கும் நிலை ஏற்பட்டதற்கு வருந்தி அவனும் பாண்டவர்களும் கண்ணனின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினர்.

### கண்ணன் உரைத்தவை

பரந்தாமன் புன்முறுவலோடு கூறினான்;

"இதில் உங்கள் தவறு எதுவுமில்லை. இந்த நிகழ்ச்சியை நானே சங்கல்பித்தேன். பரந்த பாரத சாம்ராஜ்யத்தைப் பாதுகாத்து அதர்மத்தை அழித்து, தர்மத்தை நிலைநாட்ட எத்தனையோ தர்மயுத்தம் நடக்கப்போகிறது. அதற்கெல்லாம் போதிய பலமும், திறமையும், வீரமும் சாதுர்யமும் அர்ஜுனனுக்கு இருக்கிறதா என்பதை நானே பரீட்சித்துப் பார்க்க நினைத்தேன். அதற்கு இந்த யுத்தம் ஒரு பயிற்சிதான். இவன் போர்த்திறமைகளை வளர்த்துக் கொள்ள இன்னும் எடுத்துக் கொள்ள வேண்டிய பயிற்சி — பெறவேண்டிய அஸ்திரங்கள் — இயற்ற வேண்டிய தவம் — நிறைய இருக்கிறது. அதனை இவனுக்கு உணர்த்தவே இந்த ஒத்திகை யுத்தம்!

இவன் கற்றது கைமண்ணளவு; கல்லாதது உலகளவு. என்பதை இவனுக்கு எடுத்துக் காட்டவே இவனோடு எதிர்த்து நின்றேன். இந்த சம்பவங்கள் நிகழ கந்தர்வனின் கர்வமும் அவன் என்மீது கொண்ட துவேஷமும் ஒரு காரணமாக அமைந்தது!" என்று இன்முகத்துடன் கூறினான் கண்ணன்.

குருக்ஷேத்திரப் போர் எனும் நாடகத்தின் ஒத்திகையை நடத்தி முடித்த பெருமை கண்ணனுக்கு. பெறற்கரிய பெரும் பேற்றைப் பெற்ற பெருமை அர்ஜுனனுக்கு!

★

# காதல் மலர் ரோஜா!

★ 'மலர்களின் ராணி' எனப்போற்றப்படுவது எது தெரியுமா? ரோஜா மலர்தான்! அழகு மற்றும் மணம் மிகுந்தது மட்டுமல்ல .. மயக்கும் சக்தியும் கொண்டது ஆதலால்தான் மேல் நாட்டவர்கள் இதை காதல் மலர் என்கின்றனர்.

★ ரோமன் மக்களின் காதல் தெய்வமான வீனஸும் ஸ்கான்டிநேவிய நாடுகளில் காதல் தேவதையான 'கல்டா' என்ற தெய்வமும், ரோஜா மலரை தலையில் சூடியிருப்பர்"

★ உலகப் பேரழகி கிளியோபாட்ரா, தன் காதலன் அந்தோணியை வரவேற்க அரண்மனை முழுதும் ரோஜா மலர்களைத் தூவி வைத்தாள். அதே அந்தோணி, தான் மரணப் படுக்கையில் இருந்தபோது. "என் கல்லறையை ரோஜா மலர்களால் மூடவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அவரது கடைசி வேண்டுகோளை கிளியோபாட்ரா நிறைவேற்றினாள்.

★ பண்டைக் காலத்திலிருந்தே ஐரோப்பியாவில் 'ரோஜா விழா' என்ற ஒரு திருவிழா கோலாகலமாக ஜனவரி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. இவ்வினிய விழாவில் இளைஞர்கள் தங்கள் காதலியைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

★ உலகம் முழுவதும் சுமார் 3 ஆயிரத்திற்கு அதிகமான ரோஜா வகைகள் உள்ளன.

★ ரோஜா மலரை எல்லா மங்கல காரியங்களுக்கும் பயன்படுத்துகின்றோம்.

★ ரோஜா மலரின் அதன் மலர்ச்சி குறையாமல், வாடி வதங்கி உதிராமல் இருப்பதற்கு நீண்ட காம்போடு பறித்து வைக்க வேண்டும் குளிர்சாதனப் பெட்டியில் ரோஜா மலரை மூன்று நாள்கள் வரை புத்தம் புதிதாக வைத்திருக்க முடியும்.

# இந்த வார இராசி...

(VIII பக்கத் தொடர்ச்சி)

★ அதிர்ஷ்ட நாள்: புதன் வியாழன்.

**துலாம்:** பொருளால்போட்டிகளும் சிலருக்கு உறவு பகையாகவும் ஏற்படும். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும் தன்மை போன்று உங்களுக்கும் பல விஷயங்களில் போராட்டம் ஏற்படும். அதன் பின்பு தெளிவு வந்து பிரச்சினைகள் தீரும். தொழில் விஷயங்களில் போட்டிகள் கொடுக்கும். தூரதேசப் பிரயாணங்களை விலத்தி நடக்கவும். அதிகயோசனை உடல் நிலைத் தாக்கங்களைக் கொடுக்கும். திடீர் வாக்குக்கலகங்கள் ஏற்படும். புத்திரர், எதிர்ப்பாலாருக்காக வாகாடும் நிலைமைகளால் பல சிக்கல்கள் உருவாகும். இடமாற்றம் செய்பவர்கள் பொருளில் அவதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்:-புதன்.

**விருச்சிகம்:** நீங்கள் கொஞ்சம் கடுமையாகத்தான் இருப்பீர்கள். எந்த விஷயங்களிலும் நிதானமாகச் செயற்படவும். உணவைக் கவனிக்கவும். உஷ்ணபீடைகளால் வருந்த வேண்டிவரும். வயதானவர்களாயின் அடிக்கடி உடம்பு களைத்தால் சலம், இரத்தங்களைச் சோதித்துப் பார்த்துக்கொள்ளவும், தொழில் ஸ்தானத்தில் இடைக்கிடை சடு புடு என இருப்பீர்கள். கொஞ்சம் நிதானமாக நடந்து கொள்ளுங்கள். கண்டபடி எல்லாவற்றையும் கதைத்து வீட்டுபின்னர் கலங்குவீர்கள். இடமாற்றங்கள் செய்வதானால் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தினரின் அலுவல்களில் கூடிய கவனம் செலுத்தவும். வெளிநாட்டு உதவிகளை நம்பவேண்டாம்.

★ அதிர்ஷ்ட நாள்:-புதன், வெள்ளி.

**தனுசு:** எந்த விஷயங்களையும் ஒளிவு மறைவின்றிக் கதைத்துவிடும் சுபாவத்தினால் அடிக்கடி அரைகுறையாகிவிடும் சம்பவங்கள் அதிகம் தொழில் ஸ்தானத்தில் நல்லது கெட்டது நடக்கச் செய்யும். அதை நிதானத்துடன் செயற்படுத்தி வரவும். உஷ்ணபீடைகள் கொடுக்கலாம். மறைமுகப் பகைமையால் வீண் தொல்லைகள் ஏற்படச்செய்யும். அடிக்கடி பயம். சகோதரர்களினால் கவலைகள் என்பன ஏற்படச் செய்யும். மூலம், பூராடம் நட்ஷத்திரகாரர் போக்குவரத்தில் அவதானமாக இருக்கவும். அல்லது இழப்புகளைச் சந்திப்பீர்கள். பொருள்களில் கவனமாக இருக்கவும். தெய்வ வழிபாட்டால் கெடுதியான பலன்கள் குறையும்.

★ அதிர்ஷ்ட நாள்:-புதன்.

**மகரம்:** உங்களுக்குப் பலவிஷயங்களில் நல்ல மாற்றங்கள் நன்மைகள் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் ஆதரவு இருக்கும். சக ஊழியர்கள் நன்மைகள் செய்வார்கள். கண், நரம்பு சம்பந்தமான வருத்தங்கள் கொடுக்கலாம். குடும்பத்தில் கலகலப்புக்கள் இருக்கும். சிலரின் சகோதரங்களுக்கு நன்மையான பலன்கள் நடக்க இருக்கின்றன. திருவோண நட்ஷத்திரகாரர் உடம்பைக் கவனித்துக் கொள்ளவும். அவசியம் ஏற்பட்டால் மட்டும் இடமாற்றங்கள் செய்யுங்கள். தெய்வ வழிபாடுகளால் நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.

**கும்பம்:** உலகத்தில் வெளுத்ததெல்லாம் பால் என நம்பிவிடமுடியாது. நல்லது, கெட்டது கலந்துதான் நடக்கும். நாம் பொறுமையாக எமது காலத்தை வழிநடத்துவதிலேயே எல்லாம் தங்கியுள்ளது. தொழில் ஸ்தானத்தில் ஏழரையின் தாக்கம் இருக்கச் செய்யும். உஷ்ணபீடைகள், கை கால் தாக்கங்கள் அல்லது உளைவுகள்கொடுக்கும் பலன்கள் காணப்படுகின்றது. நீங்கள் மனத்திருப்தி அற்ற ஒரு சூழ்நிலைக்கு அடிக்கடி தள்ளப்படுவீர்கள். பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். கறுப்பு. மண்ணிறம் கொண்ட பொருள்களைக் கவனமாக வைத்திருங்கள். களவுகள் போகலாம். தெய்வவழிபாடு முக்கியம்.

★ அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.

**மீனம்:** நீங்கள் புதியதிட்டங்களைத் தாமதியுங்கள். எந்தவிஷயத்திலும் ஓர் இனம் தெரியாத பயம் இருக்கச் செய்யும். திருப்தியற்ற மனோபாவம் என்பனவற்றால் அடிக்கடி தடுமாற்றங்கள் ஏற்படும். பிரயாணங்கள் தாமதமடையும். எனவே பொருளைக் கவனமாக நிதானமாகத் திட்டமிட்டு செயற்படுத்தவும் தொழில் ஸ்தானத்தில் நன்மை தீமைகலந்து நடக்கும். காலத்தை அமைதியாக தெய்வவழிபாட்டுடன் செயற்படுத்துங்கள். களைப்பு இழப்பு அல்லது முட்டுள்ளவர்கள் வைத்திய உதவிகளை நாடுவீர்கள். நீங்கள் எச்செயற்பாட்டையும். உங்கள் சுய எண்ணப்படி செய்து வருவதனால் காலதாமதம் ஏற்படும். குடும்பத்தவர்களின் அல்லது எதிர்ப்பாலாரது ஆலோசனைகள் நன்மைதரும்.

★ அதிர்ஷ்ட நாள்:- வியாழன், சனி.

# இமயத்தை வென்ற.....

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி) னுக்காக இவர்கள் குளிரில் விறைத்து வீணாகக் காத்து நிற்கிற நிலைமை.

விடியல், எட்டப்படும் நேரம். கிரகோரின் உயரம் 27 ஆயிரத்து 600 அடி என அவனது 'அல்டி மீற்றர்' காட்டியது. ஹோல் குறித்த 2.00 மணிக்குள் இன்னும் 1400 அடிகளை ஏறி எட்டிவிடல் சாத்தியமா?

ஹோலின் '100 அடி வித்தியாச விதிக்கு' அமைவாக கிரகோர் காத்திருக்கும் சமயம் ஏனைய அணிகள் முந்திச் செல்லத் தொடங்கிவிட்டமை அவனது பொறுமையை மென்மேலும் சோதித்தது. இதை விடத் தனியே ஏறப் புறப்பட்டு இருக்கலாமோ என மனம் எண்ணிற்று. சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இவ்வாறு காத்திருக்கும் அவனிடம்— ஏன் ஒவ்வொருவரிடமும்— மாலை 6.00 மணி வரை சமாளிக்கக்கூடிய அளவே ஒட்சிசன்கையிருப்புக் காணப்படுகிறது. எனவே ஏறி பின் இறங்கி வந்துதான் 6.00 மணிக்குள் அடுத்த நிலைவத்தில் ஒட்சிசனைப் பெறல் முடியும். அல்லது ஏறுவதைக் கைவிட்டு திரும்பி வந்தே ஒட்சிசனை வாங்க வேண்டும்.

## ஏறும்படி அறிவிப்பு

இறுதியாக காலை 7.10 இற்கு ஹோலின் ஏறச்சொல்லும் அறிவிப்புக் கிடைத்தது. இம்முறை—இந்த வருடம்—இக் குழுக்களே முதலில் உச்சியை எட்டுவதால் அங்கே பற்றி ஏறும் கயிறுகளை கட்டும் பணி இவர்களையே சார்ந்திருந்தது அதற்கென ஏற்கனவே அனுப்பப்பட்ட ஷேபாஸ் ஆட்களோ கயிறுகளோ தேவைப்படும் பிரதேசங்களில் தென்படாதது நிலைமையைச் சிக்கல் ஆக்கியது.

28 ஆயிரம் அடியை எட்டியபோது பாரிய பாறைத் தடங்களே தென்பட்டன. மேலே ஏற வழியும் புரியவில்லை. பற்றி ஏறவோ பாதை காட்டவோ கயிறுகளும் தென்படவில்லை. இத்தடங்களில் ஏறி வந்த பலரும் கூடிவிட்டார்கள். ஒரு கிராமம் போல பலரும் கூடி ஆராய்ந்து ஒருவரை மேலே கயிற்றுடன் அனுப்பத் தீர்மானித்தார்கள்.

நேரம் மதியத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் 3மணி நேரத்துக்குள்— அதாவது 2-00 மணிக்கு முன்—எவரெஸ்ட் சிகரத்தை எட்டி உச்சியில் தடம் பதிக்க வேண்டும். இன்றேல் ஹோலின் உத்தரவுப்படி மீள வேண்டியதுதான்.

இதற்கிடையில் ஹோலின் குழுவில் இருந்த இருதய வைத்திய நிபுணரும், சட்டத்தரணி ஒருவரும் தாம் ஏறும் முயற்சியை [illegible] தெரிவித்துத் திரும்பத் தொடங்கினர். ஆம

ஜேகம் — நத்தை வேகம் என இயலாமல் ஏறும் கிறகோரின் உறுதி எப்படியும் உச்சியினை எட்டிவிடல் வேண்டும் என்பதில் குறியாகவே இருந்தது. நின்று நின்று மூச்சை உள் வாங்கி பின் ஏறுகிறான்.

இருபது 'நொட்ஸ்' வேகத்தில் காற்று இமயமலை உச்சியை வருடிக் கொண்டிருந்தது இனி ஏறுவது புத்திசாலித்தனம் அல்ல என்பதும் நிலைமை மோசமடையப் போகிறது என்பதும் ஷேபாஸ் ஆட்களின் வாதம். அவர்கள் மேலே ஏறிக் கயிறுகளைக் கட்டத் தயங்கினர். அவர்களின் மலை அனுபவத்தை உதாசீனம் செய்து மேலே ஏறவும் சிலர் துணிந்தனர்.

உச்சி எட்டும் நிலையில் எவருக்கும் கட்டுப்படாமல் சுதந்திரமாகச் செயற்பட்டேனும் மேலே ஏறிச் சாதனையை வென்றுவிடல் வேண்டும் என்பது துணிந்தவர்களின் வாதம். கிறகோரின் மனதிலும் அதே எண்ணம் தான்.

நிற்கும் இடத்தில் கீழே கூட 10 ஆயிரம் அடிவரை வானவெளி தான் தெரிகிறது. நிதானம் தவறினால் நிலைமை என்னாவது? பாறைகளில் அடிபட்டுச் சிதறி உருண்டு பலநூறு அடிகள் இழுபடல் வேண்டும். எதில் [illegible] அழுகி விடுமோ தெரியாது என்ற நிலைமை.

ஒட்சிசன் சிலிண்டர் காலை வாரி விடுமா என்ற ஏக்கம் வேறு. இறுதி சிலிண்டரையும் பாவிக்கத் தொடங்கி விட்டான் கிரகோர்.

## உச்சியில் முதல் நபர்

மூளை மந்தகதியில் செயற்படுவது போல் ஒரு உணர்வு. மயக்கம் வந்துவிடக் கூடாது என்ற உறுதி மனதில் எழுகிறது. அனுமதி கேட்டு மேலே களைத்துப்போய் நிற்கும் இரண்டொருவரை மட்டும் விலகச்சொல்லி ஏற முயல்கிறான் அவன். ஏறி ஏறி அலுத்த உடல் இயந்திரமாய் ஏறிக் கொண்டிருக்க — இனி ஏற இடமில்லைஎன்ற நிலைமை தெரிகிறது. ஆம் ஒரு பனிப்பிரதேசச் சமவெளி! இதை விட உச்சம் இல்லை! இதுவே சிகரத்தின் மகுடம்!

எவரெஸ்ட்டின் உச்சியில் சற்றும் எதிர்பாராமல் கிரகோர், உயரம் காட்டும் கருவியின் வாசிப்பு 29 ஆயிரத்து 28 அடிகளை காட்டி நின்றது. நேரம் பிற்பகல் 1.15 மணி எனக் கடிகாரம் காட்டியது. ஆம், அன்று 1996 மே 10 கிரகோரின் இளமைக்காலக் கனவுகள் நனவாகிய நாள். அவனது கமெரா பல படங்களைப் பல கோணங்களிலும் பிடித்துத் தள்ளியது.

உச்சியில் காற்று பலமாக இருந்தது. அங்கு நாட்டப்பட்டிருந்த சில கொடிகளை காற்றுப் பிடுங்கிக்கொண்டிருந்தது. இல்லாவிட்டால் அவ்விடம் கொடிகளால் நிரம்பி இருக்குமாம். ஒரு வெறும் ஒட்சிசன் சிலிண்டர் வீசப்பட்டுக் கிடந்தது.

இந்த சீசனில் எத்தனை பேர்? எத்தனை குழுக்களாக ஏறவந்தார்கள்? ஹோலின் குழுவில் கிறகோர்தான் முதலில் எட்டிப்பிடித்தவன். அத்துடன் பிறகுழு வழிகாட்டிகளின் உதவியோடு ஹோல் குறித்த 2.00 மணிக்குள் உச்சியை எட்டி அவனது பெயரையும் மானத்தையும் காத்தவன் ஆகிறான்.

விரிந்து கிடக்கும் திபெத்தின் பீடபூமியை அவன் ரசிக்கிறான். ஹோலின் ஆணைப்படி 2.00 மணி மட்டும் உச்சியில் நிற்கலாம். அதனை ரசிக்கலாம். அடுத்தவர்கள் வர அவர்களை வரவேற்கலாம் என்றான்... அவர்கள் 2.00 மணிக்கு முன் வருவார்களா என்பது புரியவில்லை. ஒட்சிசன் கையிருப்பும் தெரியவில்லை. 1.17க்கு அவன் இறங்கத் தொடங்கி விட்டான்.

எவரெஸ்ட் சிகரத்தை எட்டும் முயற்சியில் கிறகோர் வென்றுவிட்டான் அவனது கமெராவில் அவன் சிறைப்படுத்திக்கொண்ட காட்சிகள் அதற்கு சாட்சி.

அவன் பாதுகாப்பாக அங்கிருந்து மீண்டானா? அவனுக்கு வழிகாட்டியாக இருந்த ஹோலும் ஏனைய குழுவினரும் என்னவானார்கள்? அவர்களால் எவரெஸ்ட்டை எட்டிப்பிடிக்க முடிந்ததா? தப்பிப்பிழைக்க இயன்றதா? —இக்கேள்விகளுக்கான விடைகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும் இறுதி இக்கட்டுரைத் தொடரின் அத்தியாயத்தில்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

VI ஆம் பக்கத்தில் 'சிறுவர் கடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கு விடைகள் வருமாறு;

### முயன்று பாருங்கள்!

1. கல்வி
2. காடு
3. கல்
4. கயல்
5. கால்
6. வில்
7. கவி
8. காவி
9. சவி

### வார்த்தை விளையாட்டு

1. விடயம்
2. விதம்
3. விரதம்
4. விதி
5. விடம்
6. விசாகம்
7. விகடம்
8. விரயம்
9. சுதம்
10. சரம்
11. கடம்
12. கவி
13. கதி
14. ரதம்
15. ரசம்
16. ரதி
17. ரவி
18. சாதம்
19. சாதகம்
20. சாயம்
21. சாதி
22. சாவி
23. சாரதி
24. சாகரம்
25. சாரம்
26. தரம்
27. தடம்
28. தவி
29. தகரம்
30. தடயம்

### இயலுமா?

I.




II. ஏழு வித்தியாசங்கள்

1. சட்டை
2. கிளியின் வால்
3. சிட்டுக்கள்
4. செடி
5. கூண்டினுள் கிளி
6. கிளிச்சோதிடரின் மீசை
7. தலைப்பாகை

### கண்டு பிடியுங்கள்

1. ஐந்தாவது படம்

2. மத்தியில் இருக்கும் இலக்கம் எட்டை, சிறிய சதுரத்தில் ஒவ்வொரு மூலையிலும் உள்ள எண்ணினால் பெருக்கும் போது பெரிய சதுரத்தின் மூலையில் உள்ள எண் வருகின்றது. இதனடிப்படையில் கேள்விக் குறியிட்ட இடத்தில் வரவேண்டிய இலக்கம் ஒன்று (1).

III) இரண்டுமே ஒரே நீளமுடைய கோடுகள் தான். இந்த இரண்டு கோடுகளையும் குறுக்காக வெட்டிச் செல்லும் கோடுகளின் இணையும் தன்மையால் இவை தோற்றத்துக்கு ஒன்றுபெரிது, மற்றையது சிறிது போலத் தென்படுகின்றது.

# இதயத்தின் ஓலமே "இதய வலி"!

'நெருப்பெட்டி எங்கே?' —சம்பூரணம் ஏழுவிடு கேட்க கண் சுருக்கி, பல் நெருமிக்கதினார்.

''ஏன் கத்துறியள், என்னத்துக்கு நெருப்பெட்டி?''- கனகம் பதிலுக்கு கத்தினாள்.

''ஏனோ? கொளுத்த...?

''என்னத்தை''? —

''வீட்டை... உங்களை...'' — கோபத்தில் உடல் நடுங்கியது.

''கொளுத்துவியள். அவன் குளிருக்குள்ளை உழைச்சு அனுப்ப...

''ஐயோ'' என்றார் — சம்பூரணம்.

''என்னப்பா''

''நெஞ்சுக்குள்ளைஏதோ..ம...''— நெஞ்சைக் கையால் பொத்தினார். அவருக்கு நெஞ்சுவலி வந்திருந்தது.

நெஞ்சில் ஏன் வலி வருகிறது? நெஞ்சு ஒரு கூடு. வெளியில் தோலை உரித்தால் கொழுப்பு. பிறகு நெஞ்சுத்தசை. தசையைப் பிரிக்க தசைபொருந்தும் விலாஎலும்புகள். நடுவில் மார்பெலும்பு. எலும்புக் கூட்டுக்குள்ளே இடப்புறமும் வலப்புறமும் சுவாசப்பைகள் மூச்சோடு சுருங்கி விரிகின்றன. சற்றே இடப்புறமாக கைமுட்டியளவு இதயம். நடுவே என்புகளுக்குப் பின்னே மூச்சுக் குழாயும், இடியப்பம் இறங்கும் உணவுக்குழாயும். இதயத்திலிருந்துவரும் இரத்தக் குழாய்கள், நரம்புகள், நிணநீர் முடிச்சுக்கள், அவைகளுக்குப் பின்னே முள்ளந்தண்டு எலும்பும் முதுகின் உட்புறமும். நெஞ்சுக்குள்ளே இவைதான்.

இங்கே எங்கிருந்து வருகிறது வலி? தோலிலிருந்து வரலாம். தசைகள் ஒரு கடின வேலைக்குப் பிறகு நோகலாம். விலா மூட்டுக்களில் மூச்செடுக்க நோகலாம். உணவுக் கால்வாயின் புண் வலிக்கலாம். சுவாசப்பையை சூழ இருக்கிற ஒரு சவ்வில் கிருமி தாக்க அது கூட நோகலாம்.

கனகம் சம்பூரணத்தை பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போனாள். அவருக்கு நெஞ்சுவலி இதயத்திலிருந்து வந்தது என்றார்கள் ஈ.ஸி.ஜி. எடுத்தார்கள். வலியைப்பற்றி துருவிக் கேட்டார்கள்.

'இதயம்' காதலர்கள் பரிமாறிக்கொள்வதாக கருதப்படுவது — அது ஏன் வலிக்கிறது? காதலியின் காலில் முள் குத்தியதாலா? இல்லை. கனகத்துக்கு முள் குத்தவில்லை.

இதயம் உடலின் உயிர் நாடி. உடல் எங்கும் இரத்தத்தை சுற்றியோடச் செய்வது. நாம் நித்திரை கொள்ளும்போதும் கூட அது உறங்குவதில்லை. அது துடிக்கும். அம்மாவின் வயிற்றுக்குள் நாங்கள் இருக்கும் போதே அது துடிக்கத்தொடங்கி விட்டது.

மற்றைய உறுப்புகளைப் போல அது சுருங்கித் தளர்வதற்கு சக்தி தேவை. அதற்கு ஒட்சிசன் தேவை. ஒட்சிசனைக் காவுவதற்கு நல்ல இரத்தம் தேவை.

## நோயற்ற வாழ்வு - 6

இதயம் தனக்கு இரத்தத்தையும் ஒட்சிசனையும் பெறுவதற்கு சில இரத்தக் குழாய்களை வைத்திருக்கிறது. இதயம் சுருங்கி தளரும் போது அதனூடாக மேற்பரப்புக்கு இரத்தம் பாயும்.

## வைத்திய சஞ்சீவி

இதயம் சில நேரம் கூடுதலாக துடிக்கும், அப்போது கூடுதலாக ஒட்சிசன் தேவை. சாதாரணமாக இதயத்தின் தேவைக்கேற்ப ஒட்சிசன் கிடைத்துக் கொண்டிருக்கும். சில நேரங்களில் இதயத்தின் தேவைக்கு ஒட்சிசன் கிடைக்காது விட்டால் அது ஓலமிடும். அதுதான் இதயவலி.

இது இதயத்துக்கு செல்லும் இரத்தக் குழாய்கள் அடைபடுவதனாலேயே அநேகம் நிகழ்கிறது. இதயக் குழாய் கொழுப்புப் படிந்து அடைத்துக் கொள்ளும். குழாய் முற்றாக அடைத்துக் கொள்கிற சந்தர்ப்பங்களில் இதயத்தின் சில பகுதிக்கு இரத்தம் செல்லாது அந்தப் பகுதி இறக்கும். மிகக் கடுமையான வலி பிறக்கும். பாதிக்கப்பட்ட பகுதி பெரிதாயின் இதயமே நின்றுவிடும்.

இதய வலி எப்படிப்பட்டது?

நெஞ்சின் நடுப்பகுதியில் அல்லது இடப்புறமாகத் தோன்றும். இறுக்கி அழுக்குவதுபோல—ஏறி மிதிப்பது போல—பாரமானது போல—ஏதோ செய்யும். அங்கிருந்து கழுத்துத் தாடை இடது தோள் கைகள் என்பவற்றுக்கு பரவும். இது ஒட்சிசன் போதாமையால் வந்த நெஞ்சுவலி, பத்து நிமிடங்கள் வரைக்கும் நிலைத்து நிற்கும். ஓய்வு எடுக்க—நிதானமடைய — குறையும். அநேகமாக ஒரு கடின வேலைக்கு பிறகோ, படியேறுதல், நடத்தல், குளிர், ஒரு பெரிய வயிறு நிறைந்த சாப்பாடு, சம்பூரணத்தைப்போல உணர்ச்சியின் உச்சக்கட்டம் போன்ற சந்தர்ப்பங்களிலே தான் அநேகருக்கு நெஞ்சுவலி தோன்றியிருக்கிறது.

இதயத்தின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டால் ஏற்படுகிற வலி, மிகவும் கடுமையானது. இறப்பு ஏற்படப் போகிறது என்ற பயத்தை உருவாக்கும். ஓய்வான நேரங்களில் தோன்றலாம். நீண்ட நேரம் தாங்க முடியாத உணர்வு நெஞ்சுக்குள் நிலைத்து நிற்கும். ஒய்வோ, நாக்கின் கீழ் வைக்கப்படும் மருந்துகளோ வலியைக் குறைக்காது. வயிறு குமட்டி, வாந்தி வந்து, வியர்வையில் தோய்ந்து, வலிக்கு ஆட்பட்டவர் நிலை குலைந்து போவார்.

இதயவலி அநேகமாக 35வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும் மாதவிடாய் முற்றாக நின்றுவிட்ட பெண்களுக்கும், குடும்ப இரத்த உறவுகளில் இதய தாக்கு (ஹாட் அட்டாக்) பின்னணி உடையவர்களுக்கும் வருகின்றது.

மேலும் அதிகம் புகைத்தல், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், அதிக உடல் பருமன், "மந்தமான" வாழ்க்கை முறை, அதிக கொழுப்புணவு என பல காரணிகள் இதய தாக்கத்திற்கு வழி சமைக்கின்றன.

சம்பூரணம் இப்போது இதய நோயாளி.

''நெருப்பெட்டி எங்கே?'' — அவர் மெதுவாக கேட்டார்.

''என்னத்துக்கு? சுருட்டு வேண்டாம்.'' — கனகம் சொன்னாள்.

'அதுக்கில்லை கொளுத்த'

''என்னத்தை?''

அ. கிருஷ்ணேந்திரன்
(யாழ். மருத்துவ பீடம்)

''மாஞ்சருகு கூட்டிக் குவித்திருக்கின்றன.''

அளவான உடற்பயிற்சியோடு, புகைத்தலை கைவிட்டு, உடல் நிலையைப் பேணும் ஓர் அமைதியான வாழ்க்கை முறை — மருந்துகளின் உதவியோடு — ஓர் இதய நோயாளிக்கு நிறைய உதவும்.

மேற்குறிப்பிட்ட அதே வாழ்க்கை முறையை குறித்த வயதுக்கு மேலே கைக்கொள்ளுவது இதய நோய்கள் வராது தடுத்து ''எதையும் தாங்கும் இதயத்தை'' கொடுக்கும். ★

## குணஇயல்பு...

(1ஆம் பக்கத் தொடர்)

வேம்பின்பைங்காய்
என் தோழி தரினே
தேம்பூங்கட்டி
என்றனிர் இனியே
பாரிபறம்பிற்
பனிச்சுனை தெண்ணீர்
தைஇத்திங்கள்
தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும்
என்றனிர்
ஐய அற்றால்
அன்பின் பாலே.

உளவியல் நூல்கள் என்று இன்று தனியாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் மகாமேதைகளின் இலக்கியங்களில் எள்ளில் எண்ணெய் இருப்பது போல உளவியற் கருத்துக்கள் செறிந்துள்ளன. ★

# தேர்தல் திருவிழா.....

(II ஆம் பக்கத் தொடர்)

யாழ்ப்பாணத்தில் தமது அலுவலகத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு மீண்டும் திறந்துள்ள போதிலும்— ஏற்கனவே கையைச் சுட்டுக் கொண்டதன் காரணமாக —

இப்போது தனது நடவடிக்கைகளை மிகக் கவனமாகவே மேற்கொள்கின்றது. தனது செயற்பாடுகளால் மேலும் அவப்பெயரைச் சம்பாதிக்காமல் — நல்ல பெயர் வேண்டுவதற்காக — அக்கட்சி கஷ்டப்படுவது தெரிகின்றது. இதன் காரணமாக குடாநாட்டில் அதன் நடவடிக்கைகள் மிக மந்தமாகவே உள்ளன.

குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றைச் சந்திக்க அக்கட்சி தயாராக இருப்பதாகவும் தெரியவில்லை.

''இங்கு தேர்தல் ஒன்றை நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லை. தேர்தல் நடந்தாலும், உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்று நிர்வாகத்தை அமைக்கும் அமைப்பு ஜனநாயக முறையில்செயற்பட முடியுமா?—'' என்று ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஏனைய கட்சிகள்

ரெலோ, ஈரோஸ் போன்ற அமைப்புகள் வடக்கில் சிரத்தை காட்டியதாகவே தெரியவில்லை. சில சமயங்களில் வேறு ஏதேனும் தமிழ்க் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து அக்கட்சியின் பட்டியலில் இக்கட்சிகள் போட்டியிடக் கூடும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் வடக்கு உள்ளூராட்சித் தேர்தலில் அதிக ஆர்வம் காட்டாது என்றே தெரிகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளை ஒன்று யாழ். நகரில் திறக்கப்பட்டுள்ளது. ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இக்கட்சி முக்கியமானது என்பதால் இத்தேர்தலில் இக்கட்சியும் குதிப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

அப்படி போட்டியிட்டால்— தற்போதைய அரசு குறித்தும், ஈழத் தமிழர்கள் தொடர்பாக அந்த அரசும், ஜனாதிபதியும் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்தும் வடபகுதி மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதை இத்தேர்தல் அவர்களுக்குப் பிரதிபலித்துக் காட்டும் என எதிர்பார்க்கலாம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி இத்தேர்தல் தொடர்பாக என்னசெய்யப் போகிறது என்பது தெரியவில்லை. தமது தேசியத் தன்மையை வெளிப்படுத்துவதற்காக வடக்கில் நடக்கும் தேர்தலிலும் போட்டியிடவேண்டிய இக்கட்டு அக்கட்சிக்கு உள்ளது. ஆனால் அப்படிப் போட்டியிட்டால் அத்தேர்தலின் முடிவே அக்கட்சிக்கு வடக்கைப் பொறுத்தவரையில் மரண அடியாகியும் விடலாம்.

### சுயேச்சைக் குழுக்கள்

உள்ளூராட்சித் தேர்தல்களில் அதிக அளவில் சுயேச்சைக் குழுக்கள் ஈடுபாடு காட்டுவது பொதுவான வழமை.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு நடத்தும் எந்தத் தேர்தலையும் புலிகள் எதிர்ப்பர் என்பதால், புலிகளைப் பகைத்துக் கொண்டு தேர்தலில் குதிப்பதா என்ற அச்சம் காரணமாக சுயேச்சையாகப் போட்டியிட விரும்பும் பலரும் பின் வாங்கக் கூடும்.

இதற்கிடையில் —

ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்து ஒதுங்கி நிற்கும் 'அதிருப்திக் குழு' எம்.பிக்களான இருவரும் —இ. இராமேஸ்வரன், இ. இராமமூர்த்தி சகோதரர்கள் — அடுத்த வாரத்தில் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகவும் —

யாழ். மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடக் கூடிய சுயேச்சைக்குழு ஒன்றை நிறுத்துவதற்கு ஆதரவளித்தால் என்ன என்று அவர்கள் சிந்திப்பதாகவும் —

ஒரு தகவல் தெரிவித்தது.

1988இல் நடந்த பொதுத் தேர்தலின் போது யாழ். குடாநாட்டில் அப்போதைய ஈரோஸ் அமைப்பு சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டது. அக்குழு புலிகளின் 'ஆதரவுடன்' களத்தில் குதித்திருப்பதாக தேர்தலின் போது கடைசி நேரத்தில் கசிய விடப்பட்ட செய்திகள் காரணமாக அக்குழு அமோக வெற்றியீட்டியது.

அதே பாணியில், வரும் உள்ளூராட்சித் தேர்தல்களின் போதும் சுயேச்சைக் குழுக்கள் களத்தில் குதிக்குமானால் அது ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு தலையிடி தருவதாகவே அமையவாம் என்று தோன்றுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியையும் பிரதம நீதியரசரையும் பதவி இழக்க வைத்த அரசமைப்பு நெருக்கடி

## பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப் அரசாங்கம் தப்பிப் பிழைத்தது

பாகிஸ்தானில் கடந்த சில வாரங்களாக பிரதமருக்கும் நீதித்துறைக்கும் இடையில் நெருக்கடி நிலவி வந்தது.

இது படிப்படியாக பெரும் அரசமைப்பு நெருக்கடியாக உருவெடுத்து ஜனாதிபதியின் பதவி துறப்பில் தற்போது முடிவடைந்திருக்கிறது. ஜனாதிபதி பாருக் லெஹாரி (Farooq Leghari) தமது ராஜினாமாக்கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

அதே போன்று அரசமைப்பு நெருக்கடியின் கதாநாயகனாகக் கருதப்பட்ட பிரதம நீதியரசர் சஜாத் அலிஷாவும் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களைப்போல் அல்லாதுராணுவத் தலையீடு சாத்தியமற்றதாக இருப்பதால் நவாஸ்ஷெரீப்பினால் நிலைமையை சுலபமாக கையாள முடியும் என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

### முஸ்லிம் லீக்கின் அமோக வெற்றி

கடந்த பெப்ரவரி மாதம் பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டியது பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கட்சி.

இதன் தலைவர் நவாஸ்



சஜாத் அலிஷர்

ஷெரீப் (Nawaz Sharif) பதவிக்கு வந்தவுடன் செய்த முதல்வேலை நாடாளுமன்றத்தில் தமக்கிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி ஜனாதிபதியின் அதிகாரத்தை ஒழித்தது தான்.

தற்போதைய அரமைப்பு போராட்டத்தில் நவாஸ் ஷெரீப்பின் கை ஓங்குவதற்கும் ஜனாதிபதி பதவி துறப்பதற்கும் வழிவகுத்தது இந்த அதிகார ஒழிப்பு நடவடிக்கையே என்பதில் சந்தேகம் இல்லை.

இல்லாவிட்டால் முன்னைய பிரதமர்களுக்கு ஏற்பட்ட கதியே நவாஸ் ஷெரீப்புக்கும் ஏற்பட்டிருக்கும். ஒரே நாளில் அவர் தூக்கிவீசப் பட்டிருப்பார்.

### ஸியா - உல் ஹக்கின் அரசமைப்புத் திருதம்

பாகிஸ்தான் அரசமைப்பில் 8ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தது மூலம் அப்போதைய ராணுவ ஆட்சியாளர் ஸியா - உல் - ஹக் 1985 ஆம் ஆண்டு தம்மை சகல அதிகாரங்களும் கொண்ட சிவில் ஜனாதிபதியாக மாற்றினார்.

பதவியில் இருக்கும் பிரதமரை பதவி நீக்கம் செய்வது, நாடாளுமன்றத்தைக் கலைப்பது, மாகாண ஆளுநர்களை மற்றும் ஆயுதப் படைகளின் தளபதிகளை நியமிப்பது ஆகிய அதிகாரங்கள் ஜனாதிபதியின் கீழ் வந்தன.

1976 ஆம் ஆண்டு சுல்பிஹார் அலி பூட்டோவை பதவி நீக்கம் செய்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றியவர் ஸியா — உல் — ஹக் சகல அதிகாரங்களும் கொண்ட ராணுவ கவுன்ஸில் ஒன்றின் மூலம் அவர் ஆட்சி நடத்தி வந்தார்.

எனினும் ஜனநாயக உரிமைகளை வேண்டும் என்ற கோரிக்கை பாகிஸ்தானில் வலுப்பெற ஆரம்பித்தபோது தமது சர்வாதிகார ஆட்சிக்கு ஜனநாயக மூலாம் பூசும் நடவடிக்கையில் அவர் இறங்கினார். அதற்காகவே 8ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக்கொண்டு வந்திருந்தார்.

1988 ஆம் ஆண்டு ஸியா-உல் — ஹக் கொல்லப்பட்டபோதிலும் அரசமைப்பில் அவர் செய்த 8 ஆவது திருத்தம் இந்த வருடம் (1997) மார்ச் மாதம் வரை அமுலில் இருந்து வந்தது.

இதன் காரணமாக 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாகிஸ்தானில் எந்த ஒரு பிரதமரும் தமது பதவி காலத்தை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத நிலைமை இருந்து வந்தது.

தற்போதைய பிரதமர் நாவாஸ் ஷெரீப்பும் முன்னர் ஒருதடவை ஜனாதிபதியால் ஊழல் குற்றம் சுமத்தப் பட்டு பதவி நீக்கம் செய்யப் பட்டிருந்தார். பெனாஸிர் பூட்டோவுக்கு இரு தடவைகள் இக்கதி ஏற்பட்டது.

### அரசமைப்பு நெருக்கடி உருவானது எப்படி?

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதைத் தடுக்கும் சட்ட மூலம் ஒன்றுக்கு பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் முட்டுக்கட்டை போட்டது. இதனை அடுத்தே பாகிஸ்தானில் அரசமைப்பு நெருக்கடி ஆரம்பமானது.

உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கை ஆளும் கட்சியான முஸ்லிம் லீக்கினதும் அதன் தோழமைக் கட்சிகளினதும் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியது.

அரசியல் விபசாரத்துக்கு உயர் நீதிமன்றம் உடந்தையாகிப் போவதாக முஸ்லிம் லீக்கின் தோழமைக் கட்சியான அவாமி லீக் கட்சியின் தலைவர் வலிகான் குற்றஞ் சாட்டினார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் அரசமைப்புக்கு விரோதமானது. சட்ட விரோதமானது என்றார் நவாஸ் ஷெரீப். அத்துடன் பிரதமர் நீதியரசர் சஜாத் அலிஷாவையும் கீழ்த்தரமாக தாக்கி பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் அவர் கருத்துக்களை வெளியிட்டார். ஒக்ரோபர் 29 ஆம் திகதி இந்த பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டது.

இந்த விவகாரம் பெரிதாக சூடு பிடிக்கும் என்று ஆரம்பத்தில் எவரும் கருதவில்லை, சகல அதிகாரங்களும் கொண்ட பிரதமருடன் பிரதம நீதியரசர் மோதுவார் என்றும் எவரும் எதிர்பார்க்கவும் இல்லை.

ஆனால் பிரதமரை நீதிமன்றத்துக்கு இழுக்கும் நடவடிக்கையில் பிரதம நீதியரசர் இறங்கிய போதே இந்த விவகாரம் பூதாகாரம் எடுத்தது. ஜனாதிபதி பாருக் லெஹாரியின் பக்க துணையும் பிரதம நீதியரசருக்கு இருந்தது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு மட்டும் அல்ல கட்சித் தலைவர்கள் மற்றும் சில பத்திரிகை நிறுவனங்களுக்கும் ஒக்ரோபர் 30ஆம் திகதி குற்றப் பத்திரிகை உயர் நீதிமன்றத்தால் அனுப்பப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச் சாட்டின் பேரில் குற்றவாளிகளாகக் காணப்படுவோர் மேன் முறையீடு செய்ய முடியாது.

உயர் நீதிமன்றத்தின் இந்த நடவடிக்கையை முறியடிக்கும் விதத்தில் பிரதமர் நவாஸ் ஷெரீப் எதிர் நடவடிக்கை ஒன்றை எடுத்தார்.

நாடாளுமன்றத்தில் உள்ள தமது பெரும்பான்மையைப் பயன்படுத்தி இத்தகைபோர் மேன் முறையீடு செய்வதற்கான அதிகாரம் கொண்ட அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து அங்கிகாரத்துக்காக ஜனாதிபதியிடம் அனுப்பினார்.

ஜனாதிபதி இதனை அங்கீகரிக்க மறுத்த போது பிரதமருக்கும் பிரதம நீதியரசருக்கும் இடையில் இருந்து வந்த அரசமைப்பு நெருக்கடி விரிவடைந்தது.

பிரதமர் ஒரு புறமும் பிரதம நீதியரசரும் ஜனாதிபதியும் மறுபுறமும் என்ற நிலையில் நெருக்கடி முற்றியது

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் உயர்நீதிமன்றத்தில் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆஜராக இருந்த தினம் நவாஸ் ஷெரீப் ஆதரவாளர்கள் குழப்பம் விளைவித்ததால் நீதிமன்ற நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டன.

அத்துடன் பலோகிஸ்தான் மாகாணத் தலைநகர் குயிட்டா (Guetta) விலும் பெஷாவரிலும் பிரதம நீதியரசரின் நியமனத்தை ஆட்சேபித்து நவாஸ் ஷெரீப் ஆதரவாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் பிரதம நீதியரசரின் நியமனத்தை இடைநிறுத்தும் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன.

1994 இல் சஜாத் அலிஷா பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டபோது அவருக்கு போதுமான சேவை மூப்பு இருக்கவில்லை என்று கோரியே மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

எனினும் பிரதம நீதியரசரின் நியமனத்தை இடைநிறுத்தும் தீர்ப்புக்களை பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் 4—1 என்ற வாக்குகள் அடிப்படையில் பின்னர் நிராகரித்து விட்டது.

இப்படியாக பாகிஸ்தானின் நீதி நிர்வாகம் குழம்பிப் போகும் நிலையை அடைந்திருந்த வேளையில் பிரதமர் நவாஸ் ஷெரீப் இரு நடவடிக்கைகளை எடுத்தார்.

ஒன்று ஜனாதிபதி பாருக் லெஹாரின் மீது அரசியல் குற்றச்சாட்டு சுமத்துவது.

மற்றது பிரதம நீதியரசர் சஜாத் அலிஷாவை நாடாளு மன்ற [illegible] முன் அழைத்து விசாரிப்பது. [illegible]

தெரிவித்து பாகிஸ்தானின் இரு சபைகளான மக்கள் அவையிலும் செனட் சபையிலும் உள்ள உறுப்பினர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் கையெழுத்திட்டு சபாநாயகருக்கு அனுப்பவேண்டும். சபாநாயகர் அதனை ஜனாதிபதிக்கு அனுப்பும் பட்சத்தில் ஜனாதிபதி நேரிலோ அல்லது தனது பிரதிநிதி ஒருவர் மூலமோ நாடாளுமன்றத்தின் சமூகம் அளித்து குற்றச் சாட்டுக்களுக்குப் பதில் அளிக்க வேண்டும். அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் ஏற்புடையதாக இருந்தால் நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியை பதவி நீக்க முடியும்.



நவரஸ் ஷெரீப்

ஆனால் இந்த இரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட முன்னர் ராணுவத்தின் தலையீடும் ஜனாதிபதியின் பதவி துறப்பும் இடம் பெற்றுவிட்டது. பிரச்சினையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ஜனாதிபதியால் சாதிக்க முடியாது போனதை பிரதம நீதியரசர் மூலம் சாதித்து பிரதமரின் பதவிக்கு உலை வைக்கும் சதித்திட்டமே தற்போதைய அரசமைப்பு நெருக்கடி என்று ஆளும் முஸ்லிம் லீக்கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பாகிஸ்தானில் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்கு ஒருவருக்கு 6 மாதச் சிறைத்தண்டனையும் 5000 ரூபா அபராதமும் விதிக்க முடியும். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் பிரதமர் பதவி துறக்கவேண்டும்.

தம்முடன் மோதிய இருவரையும் பிரதமர் நவாஸ் ஷெரீப் கவிழ்த்திருப்பதாலும் அரசியலில் ராணுவத்தின் நேரடித் தலையீட்டுக்கு முற்றுப் புள்ளிவைக்கப் பட்டிருப்பதாலும் தற்போதைக்கு நவாஸ் ஷெரீப்பின் ஆட்சி தப்பிப் பிழைத்து விட்டது என்றே கூறவேண்டும். ★

---

இந்தியாவைப் போல் அல்லாது பாகிஸ்தான் பலவீனமான ஜனநாயக அமைப்பு முறையைக் கொண்ட நாடு.

இந்த நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் பூர்த்தி அடைந்து விட்டது. ஆனால் 30 பிரதமர்கள் பதவி ஏற்றுள்ளனர்.

நீண்டகாலம் இராணுவம் ஆட்சியில் இருந்ததால்இராணுவத்தின்செல்வாக்கை பாகிஸ்தானில் முற்றாக ஒழிக்க முடியவில்லை.

நவாஸ் ஷெரீபுக்கு முன் பதவியில் இருந்த பிரதமர்கள் எதிர்நோக்கிய முக்கிய இரு பிரச்சினைகளில் ஒன்று ஜனாதிபதியின் அரசியல் தலையீடு. மற்றது அரசியலில் இராணுவத்தின் செல்வாக்கு.

நவாஸ் ஷெரீப் கடந்த பெப்ரவரியில் பதவிக்கு வந்த பின்னர் ஜனாதிபதியின் அதிகாரங்களை ஒழித்துக் கட்டியது போன்று அரசியலில் இராணுவத்துக்கு இருந்த செல்வாக்குக்கும் முற்றுப் புள்ளி வைத்தார்.

கடந்தகால அரசுகளுக்கு பாதுகாப்பு விவகாரங்களில் இருந்து பொருளாதார விவகாரங்கள் வரை ஆலோசனை தெரிவித்து வந்த பாதுகாப்பு கவுன்ஸிலை நவாஸ் ஷெரீப் கலைத்தது மூலமே இதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிந்தது.

பாதுகாப்புக் கவுன்ஸிலில் ஆயுதப் படைகளின் தளபதிகளே, பெரும் அளவில் அங்கம் வகித்து வந்தனர்.

எனினும் தற்போதைய அரசமைப்பு நெருக்கடியில் இராணுவத்தின் தலையீட்டை முற்றாகதவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

பிரதமர் நவாஸ் ஷெரீபுடன் முரண்பட்டிருந்த பிரதம நீதியரசர் சஜாத் அலிஷா உயர் நீதிமன்றத்துக்கும் தமக்கும் பாதுகாப்புத் தரும்படி ஆயுதப் படைகளின் பிரதம தளபதி ஜெஹான்கிர் கராமாட்டிடம் கோரிக்கை விடுத்தார்.

அதே சமயம் ஜனாதிபதி பாருக் லெஹாரிக்கு எதிராக அரசியல் குற்றப்பிரேரணை கொண்டுவர நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்த சமயம் ஆயுதப் படைகளின் பிரதம தளபதி அதில் தலையிட்டு அதனை நிறுத்தி வைத்தார்.

உலக உலா
என்.பி.சீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org